August '49 Regd. No. M. 4975

மஞ்சரி

விரோதி - ஆவணி

அமுத வசனம் 1
ஞானிகளும் அரசியலும் . . . . வேதாந்த கேஸரி 2
நிறவெறி கிளப்பும் மலான் 9
இருபத்துநாலு ஆசிரியர்கள் 13
இந்த மாத ஜோஸ்யம் . . . . . அஸ்ட்ராலாஜிகல் மகஸீன் 17
இந்திய லிபிகள் . . . . பீப்பிள் 19
நமது வேதம் . . . . பிரஜாமதம் 25
மந்திரத்தால் மழை . . . . ஆந்திர பத்திரிகா 29
பேய் உண்டு . . . . ஸ்டிராண்டு 33
மனைவிக்கு மாதச் சம்பளம் . . . . . பேரெண்ட்ஸ் மகஸீன் 38
உலகம் வியக்கும் ரேகை சாஸ்திரி . . . . பம்பாய் கிரானிக்கிள் 41
வேற்றுமையற்ற நாடு . . . . . . அமிர்த பஜார் பத்திரிகை 44
லண்டன் யூனிவர்ஸிடி . . . . . பிரிட்டிஷ் இன்பர்மேஷன் 51
கோயில் மலிந்த நகரம் . . . . மாடர்ன் ரெவ்யூ 54
மரத்திலிருந்து வெல்லம் . . . . ஸர்வோதயம் 61
கிருமி அசுரர்கள் 65
நடை வரி . . . . சங்கர்ஸ் வீக்லி 71

விசேஷப் பகுதிகள்

க்விஸ் 16
கனு தேசாய் சித்திரங்கள் 28
பிழையைத் திருத்துங்கள் 32
பரமஹம்ஸர்: வாழ்வும் வாக்கும் 43
பாபுராவ் பதில் சொல்லுகிறார் 59
குழந்தைகள் குறும்பு 63
கார்ட்டூன் கதம்பம் 68
சிறுகதை: விடு காலி . . . . [illegible] 73
புத்தகச் சுருக்கம்: சுந்தரி . . . . வ. ரா. 79

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY TANJORE
RECEIVED.
23 AUG 1949

அணா 6

இவ்விதழ் சிறப்புகள்

ஆ[illegible] [illegible] தொழிலாளி (அ[illegible]) [illegible] மகிழ அரிய பொன்களைக் கண்டு[illegible]

குடும்ப வரவு செலவை நடத்தப் புதுமையான ஒரு வழி 'மனைவிக்கு மாதச் சம்பளம்' (பக். 38). வரியினால் கஷ்டப் படுபவர்கள் இந்த 'கடை வரி' (பக். 71) வந்தால் என்ன செய்வார்களோ? பல பாஷையினரும் ஒற்றுமையாக [illegible] 'வேற்றுமையற்ற நாடு' (பக். 44). '[illegible]' (பக். 33) [illegible].

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: [illegible]

நிர்வாக ஆசிரியர்: [illegible]

துணை ஆசிரியர்கள்:

[illegible]	கா. ஸ்ரீ. ஸ்ரீ.
[illegible]	'குமுதினி'
[illegible] சாஸ்திரி	கெ. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி	'ஆர்வி'
கௌரி அம்மாள்	மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; [illegible].

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதாரர்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 2] [இதழ் 9

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

RECEIVED.
3. AUG. 1949

அமுத வசனம்

இந்தியாவின் பலம் ராஜ புதனத்தில் மாத்திரம் அமைந்திருக்கவில்லை. நம் சைனியம் வீர ஜாதியினர் என்று சொல்லிக்கொள்பவர்களின் ஏகபோக உரிமையாக இனி இராது. நம் நாட்டின் பாதுகாப்பில் எல்லா மாகாணத்தவருக்கும் எல்லாச் சாதியினருக்கும் பங்கு உண்டு. ராஜபுத்திரர்கள், 'நாங்களே இந்த நாட்டைக் காத்து வருகிறோம்' என்று பெருமை பேசிய காலம் மலையேறிவிட்டது. நாடு சுதந்தரம் அடைந்துவிட்டது. இதைப் பாதுகாப்பது நம் கடமை என்று ஒவ்வொருவனும் உணர வேண்டும். ஆகவே, ராஜபுத்திரர்கள், தாங்கள் எவ்வளவோ வீரத்தோடு இருந்தும் தியாகம் செய்தும் இந்தியர்கள் அடிமையானதற்குக் காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ராஜபுத்திரர்களோ மற்றவர்களோ ஒற்றுமையின் உயர்வைத் தெரிந்து கொள்ளாததே அதற்குக் காரணம். ஒவ்வோர் இந்தியனும் இப்போது தான் ராஜபுத்திரன், சீக்கியன், பிராம்மணன், க்ஷத்திரியன், ஹரிஜன் என்று எண்ணுவதை மறந்து விடவேண்டும். எல்லாரும் இந்தியர்கள் என்றும் சமமான உரிமையும் பொறுப்பும் உடையவர்கள் என்றும் நினைவு கூர வேண்டும்.

—வல்லபபாய் படேல்

ஞானிகளும் அரசியலும்

ஜவாஹர்லால் நேரு

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 114-ஆவது ஜன்ம தினத்தில் (20-3-'49-இல்), டில்லி ராமகிருஷ்ண மிஷனில் விழாக் கொண்டாடியபோது, இந்தியப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் செய்த பிரசங்கம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு தெய்விக புருஷர்; நானோ உலக விஷயங்களில் ஈடுபட்டு அதற்காக என் சக்தியையெல்லாம் செலவிடும் லௌகிக மனிதன். ஆனாலும் லௌகிக மனிதன்கூடத் தெய்விக புருஷரிடம் அபிமானம் வைத்து மாறுதலை அடையலாம். தெய்விக புருஷர்களைச் சிலசமயம் முற்றும் என்னால் புரிந்துகொள்ள முடிவதில்லை; ஆனாலும் அவர்களை அபிமானித்து வந்திருக்கிறேன். அவர்களுடைய உபதேசம் முழுவதையும் என்னால் தெளிந்துகொள்ள முடியாவிட்டாலும், அத்தகைய தெய்விக புருஷர்களிடம் மதிப்பு வைத்து, அவர்களுடைய மாணாக்கர்கள் அவர்களைப் பற்றி எழுதியவற்றைப் படித்தும் அவற்றில் ஈடுபட்டும் இருக்கிறேன். இந்த அசாதாரணமான பெரியோர்கள் தங்கள் தலைமுறையிலும் பின்வரும் தலைமுறைகளிலும் உள்ள மக்களிடம் தம் சக்தியை உணர்த்தியிருக்கிறார்கள்; மிகவும் ஆற்றலோடு பெரிய மனிதர்களைக் கவர்ந்து அவர்களுடைய வாழ்க்கைப் போக்கையே மாற்றியிருக்கிறார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சாமான்ய ஜனங்களுக்கு அப்பாற்பட்டவர். வாழ்க்கையின் உன்னத தத்துவங்களையும் ஆத்மிக விஷயங்களையும் நமக்கு உணர்த்த வந்த பாரத நாட்டு ரிஷிகளின் பரம்பரையைச் சேர்ந்தவர் அவரென்றே தோற்றுகிறது. தன் நீண்ட கால சரித்திரத்தில் உலக சம்பந்தமான பிற காரியங்கள் இருந்தாலும், இந்தியா ஆத்மிக விஷயங்களை என்றும் மறந்ததே இல்லை. உண்மையை நாடும் நாட்டத்தை வற்புறுத்தி வந்ததோடு எந்தப் பேரோடு இருந்தாலும் உண்மையை நாடும் பெரியோர்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தியா சத்தியத்தைத் தேடும் வழக்கத்தை வளர்த்துவந்ததோடு, தங்கள் தங்கள் மார்க்கத்தில் உண்மையை நாடுபவர்களிடம் சமரச புத்தியோடு பழகும் இயல்பையும் வளர்த்திருக்கிறது. துரதிருஷ்டவசமாக இந்தச் சமரச

மூலம்: வேதாந்த கேஸரி (ஆங்கிலம்: மே '49), ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை 4.

சம்பிரதாயம் சமீப காலத்தில் குலைந்துவிட்டது. நாம் கெட்ட துறைகளில் இறங்கி, குறுகிய புத்தி படைத்து, குறிப்பிட்ட குறுகிய வழியில் நடக்கும் நாமே யோக்கியர்களென்றும் மற்றவர்கள் தவறு செய்பவர்களென்றும் நினைத்தோம்.

அந்த மாதிரி வழக்கம் இந்தியாவில் என்றும் இருந்ததில்லை. இந்தியாவைப் பெரிதாகச் செய்தது அதன் விசால மனப்பான்மையே. உண்மை பல முகப்பட்டது, எல்லையற்ற பலவகைப்பட்டது என்பதே அதன் கொள்கை. முழு உண்மையையும் தான் மாத்திரம் தெரிந்து கொண்டுவிட்டதாக எவன்தான் சொல்லமுடியும்? உண்மையாகவே உண்மையை நாடும் சாதனையில் அவன் ஈடுபட்டிருந்தால் உண்மையின் ஒரு பக்கத்தைப் பார்த்ததாகச் சொல்லிக் கொள்ளலாம். தன்னுடைய மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவனாக இருந்தாலன்றி, மற்றொருவன் உண்மையைக் கண்டுபிடிக்கவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்? எனவே, இந்திய நாடு உண்மையை நாடுவதிலும், தர்மத்தின் சிறப்பிலும் மக்களுக்கு ஊக்கமளித்து வந்திருக்கிறது. அதுதான் இந்தியக் கலைப் பண்பின் சிறந்த இயல்பு. பல ஏற்றமும் தாழ்வும் தன் சரித்திரத்தில் நிகழ்ந்தாலும் இத்தனை காலமாக இந்த இயல்பு அருமல் வந்துகொண்டே இருக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தம்மிடம் வந்தவர்களைக் குறிப்பிட்ட ஒரு வகையில் மாற்றினர்; இது அவருடைய வாழ்க்கையின் விளைவுகளில் ஒன்று. படிப்பில்லாத அவரைத் தூரத்திலிருந்தபடியே பலர் பரிகசித்தார்கள்; ஆனால் அவரை அணுகியபோது விரைவில் தங்கள் முடி தாழ்த்தி வணங்கினார்கள்; பரிகாசத்தை விட்டொழித்துப் பிரார்த்தனையில் கலந்தார்கள். அவர்களிலே பலர் தங்களுடைய இயல்பான வேலையையும் வியாபாரத்தையும் விட்டு விட்டுப் பக்தர் கோஷ்டியில் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் பெரியவர்கள். அவர்களுக்குள்ளே, இந்தியாவில் மட்டுமின்றிப் பிற தேசங்களிலும் புகழ்பெற்ற ஸ்வாமி விவேகானந்தர் ஒருவர். மற்றச் சிஷ்யர்களைக்காட்டிலும் அவரை ஜனங்கள் அதிகமாக அறிவார்கள். ஸ்வாமி விவேகானந்தரின் பேச்சையும் எழுத்தையும் எத்தனை இளைஞர்கள் படிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், என் தலைமுறையைச் சார்ந்த பலர் அவரிடம் பலமாக ஈடுபட்டார்கள். ஸ்வாமி விவேகானந்தருடைய உபதேசங்களை இந்தக் காலத்து இளைஞர்கள் படித்தால் எவ்வளவோ நன்மையை அடையலாம்; எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஸ்வாமி விவேகானந்தரின் உள்ளத்தில் ஒரு வகைக் கனல் கொழுந்துவிட்டெரிந்தது; இளம் பருவத்திலேயே அது அவரை விழுங்கியது. அவருடைய நூல்களைப் படித்தால் ஒருவாறு அந்தக் கனலைத் தெரிந்து கொள்ளலாம்; எங்களில் சிலர் அப்படித் தெரிந்துகொண்டோம். அவர் உள்ளத்தில் கனல் கொளுந்தியது; ஆற்றலுள்ள உன்னதமான பாஷையில் அந்தக் கனல் வெளியாயிற்று. அவர் திருவாக்கில் வந்தது பயனற்ற பேச்சல்ல. தாம் மொழிந்த வார்த்தைகளில் தம் உள்ளத்தையும் உயிரையும் பொருத்திச் சொன்னர். அதனல் அவர் பெரிய நாவன்மை படைத்

தவர் ஆனூர். பெரிய பேச்சாளர்களின் பத ஜாலங்களும் அலங்காரமும் அவரிடம் இல்லை; ஆழ்ந்த கொள்கையும் உண்மையான விசுவாசமும் அவரிடம் இருந்தன. அதனால்தான் இந்தியாவில் பலருடைய உள்ளங்களைக் கவர்ந்தார். இரண்டு மூன்று தலைமுறைகளில் வந்த இளைஞர்களும் பெண்களும் சந்தேகமின்றி அவரிடம் ஈடுபட்டார்கள். இந்த நாட்டில் வேறு நிகழ்ச்சிகளும் நடந்திருக்கின்றன. மிகப் பெரிய ஒருவர் வந்தார்; அவரே காந்தியடிகள். இந்தியா முழுவதையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டார். இந்தியாவில் தோன்றிய ரிஷி பரம்பரையில் அவரும் ஒருவர்.

எவ்வளவோ பெரிய காரியங்கள் நடந்திருக்கின்றன; அதனால்தான் சிலர் முன்பு வந்தவர்களை மறந்துவிடுகிறார்கள்போல் இருக்கிறது. அவர்களே அந்தப் பழைய கஷ்டமான காலங்களில் இந்தியாவுக்கு உணர்வூட்டி உருவாக்கினவர்கள். விவேகானந்தருடைய உபதேசத்தை நீங்கள் வாசித்துப் பாருங்கள்; அது பழையதாகவே தோன்றுவதில்லை. ஐம்பத்தாறு வருஷங்களுக்கு முந்திய அந்த உபதேசம் இன்றும் புத்தம் புதிதாக இருக்கிறது. நம்முடைய பிரச்னைகளிலும், உலகத்துப் பிரச்னைகளிலும் சில அடிப்படையான விஷயங்களைப்பற்றியே அவர் பேச்சோ எழுத்தோ இருக்கிறது; அதுதான் காரணம். அதனால் அது பழையதாவதில்லை. இன்றைக்குப் படித்தாலும் புதிதாக இருக்கிறது.

நாம் நம் முன்னோர்களிடமிருந்து பெற்ற செல்வத்தை நினைந்து பெருமைப்படும்படியாக அவர் நமக்கு உணர்ச்சியூட்டினார். அவர் நம்மைக் கண்டிக்காமல் விடவில்லை. நம்முடைய குறைகளையும் தவறுகளையும் சொன்னார். எதையும் மறைத்து வைக்க அவர் விரும்பவில்லை. அவர் அப்படி விரும்புவது நியாயமும் அன்று; நம் குற்றங்களிலிருந்து நாம் திருந்த வேண்டுமே. சில சமயங்களில் அவர் நம்மைக் கடுமையாகக் கண்டிக்கிறார்; சில சமயம் இந்தியாவின் பெருமைக்குரிய விஷயங்களைச் சொல்லுகிறார். அவையே இந்தியா தாழ்வுற்ற காலத்திலும் அது உன்னதமாகவே இருக்கும்படி செய்தவை.

ஆகவே, ஸ்வாமிகள் எழுதியதும் பேசியதும் நம் கவனத்துக்கு உரியவை. எதிர்காலத்திலும் நீண்ட காலம் நம்மை ஈடுபடுத்தக்கூடியவை; எல்லாரையும்போல் ஓர் அரசியல் ஞானி என்று அவரைச் சொல்லக்கூடாது; ஆனால் அவர் ஓர் அரசியல் ஞானிதான். இந்தியாவில் இந்தக் காலத்துத் தேசிய இயக்கத்துக்கு அடியிட்டவர்களுள் அவர் ஒருவர். பிற்காலத்தில் இந்த இயக்கத்தில் தீவிரமாகக் கலந்து கொண்டவர்களில் பலர் ஸ்வாமி விவேகானந்தரின் உபதேசத்தால் உத்வேகத்தை அடைந்தார்கள்.

இந்தியாவிலும் உலகத்திலும் பல பிரச்னைகள் எழுந்துள்ளன. அவற்றை எப்படிச் சமாளிப்பது? அரசியல் அறிஞர் வழி அல்லது ராஜதந்திர நிபுணரின் வழி ஒன்று இருக்கிறது; சந்தர்ப்பவாதிகளைப் பற்றி நாம் பேச வரவில்லை. துரதிருஷ்டவசமாக அரசியலறிஞன் ஓரளவுக்குச் சந்தர்ப்பவாதியாக இருக்கவேண்டியிருக்கிறது; அதாவது, விஷயம் உண்மையில் எப்படி இருக்கிறதோ அந்த நிலையில், கிடைத்திருக்கும் கருவிகளைக்

கொண்டு சமாளிக்க வேண்டியிருக்கிறது.

ஜனங்கள் புரிந்துகொள்ளாததையோ பின்பற்ற முடியாததையோ திடீரென்று கொண்டு வந்து புகுத்த முடியாது. இந்தக் கஷ்டத்தை எப்போதுமே அவன் படவேண்டியிருக்கிறது; அதிலும் முக்கியமாக ஜனநாயக யுகம் என்று சொல்லிக்கொள்ளும் இந்தக் காலத்தில் இந்தக் கஷ்டம் இருக்கிறது. ஜனநாயகம் அடிப்படையில் நல்லதென்றே நான் நம்புகிறேன்; ஆனால் நாம் செய்கிற காரியம் இறுதியில் ஜனங்களில் பெரும்பான்மையோரால் புரிந்துகொண்டு பாராட்டப் பெறுவதாகவும் பின்பற்றி நடக்கக் கூடியதாகவும் இருப்பதே ஜனநாயகத்தின் அர்த்தம். பெரும்பான்மையான ஜனங்கள் புரிந்துகொள்ளவோ பாராட்டவோ முடியாதென்றால் நம்மிடம் உள்ள உண்மையான விஷயத்தைக்கூட அவர்களிடம் வழங்க முடியாது. ஆகவே, அரசியல் நிபுணர்களும் ராஜதந்திர நிபுணர்களும் அநேகந் தடவைகளில் உண்மையைக்கூட விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது; ஏனென்றால், உண்மையை உணர்ந்துகொள்ளும் இயல்பு ஜனங்களிடம் போதுமான அளவுக்கு இருப்பதில்லை.

இது நல்லதா கெடுதலா என்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்படித்தான் நடக்கிறது. அரசியல் அறிஞனுடைய நிலையிலிருந்து பார்த்தால் வேறு வழி ஒன்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஏனென்றால், அவன் வேறு ஏதாவது செய்வதாக இருந்தால் அவனைத் தள்ளிவிட்டுப் பெரும்பான்மையோரின் இயல்பை அளவெடுத்து வைத்திருக்கும் பிறர் வந்துவிடுவார்கள்.

ஆனால், உண்மையின் விஷயத்தில் ஞானி நடந்துகொள்ளும் முறையே வேறு. விளைவு எதுவாக இருந்தாலும் ஞானி உண்மையைப் பற்றிக்கொண்டிருக்கிறான். அப்படி உண்மையையே பற்றுவதால் அநேகமாக அவனைக் கல்லெறிந்தோ சுட்டோ வேறுவிதமாகவோ கொன்றுவிடுகிறார்கள். ஞானிகளுடைய மார்க்கம் இப்படித்தான் இருந்து வருகிறது; இனியும் இருக்கும். ஞானியைக் கொன்றுவிட்டாலும் கொல்பவன் உண்மையைக் கொல்வதில்லை யென்பது உண்மை. ஞானியைவிட உண்மை பெரியது. ஞானி உயிரோடு வாழ்வதைக்காட்டிலும் அந்த உண்மையின் மூலமாக அதிகமாக வாழ்கிறான்.

ஞானியின் மார்க்கம், அரசியலறிஞன் மார்க்கம் என்ற இரண்டு வழிகள் எப்போதும் இருக்கின்றன. இந்தக் காலத்துக்குப் பரிபூரணமாகப் பலன் தரும் மார்க்கமென்று எதையும் சொல்ல முடியாது. பல காலங்கழித்து விளையும் விளைவை நோக்கினால், ஒருவேளை ஞானியின் வழி எல்லாவற்றிலும் சிறந்ததென்று சொல்லலாம்; ஆனால் அரசியலையோ பொதுஜன வேலைகளையோ நெடுங்காலத்துக்குப் பின் விளைவதையே நோக்கமாகக்கொண்டு நடத்திச் செல்ல முடியாது. அப்படிச் செய்யப் புகுந்தால் வேலை செய்ய நேர்ந்த சந்தர்ப்பத்தை அரசியல் அறிஞன் இழந்துவிடுவான். ஞானியின் வழி நாளளவில் மிகச் சிறந்ததாக இருந்தாலும், அவனுடைய காலத்திலே அதை நடத்திக் காட்டுவது கொஞ்சம் சிரமம். ஆனால் அரசியலறிஞனுடைய வழியோ எவ்வளவு தான் நல்லதை நினைத்துச் செய்தா

லும் ஒவ்வொன்றாக விட்டுக் கொடுக்கும்படி ஏற்படுகிறது. அது நிதானம் இல்லாத வழி. ஒரு தடவை அந்த வழியில் அடியெடுத்து வைத்துவிட்டால் ஒவ்வொரு முறையும் விட்டுக் கொடுக்கும்போது உண்மைக்குத் தூரமாகப் போய்க் கொண்டேயிருக்கிறோம். தற்காலத்தில் உள்ள சந்தர்ப்பத்தால் எதை ஒருவன் செய்ய விரும்புகிறானோ அதைக் கவனிக்காமல் இருந்துவிடலாம். நாம் அறிந்தபடி உண்மையையே பற்றிக்கொண்டு நடப்பதா? அல்லது தற்கால சந்தர்ப்பங்களைப் பிரமாதமாக நினைத்து உண்மையையே மறந்துவிடுவதா? இந்தப் பிரச்னைதான் உலக விஷயங்களை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களுக்கு முன்னே நிற்கிறது. இது மிகவும் சிக்கலான பிரச்னைதான். தாற்காலிகமாக விட்டுக்கொடுக்க நேர்ந்தாலும் உண்மையையே அரசியல் நிபுணன் கடைப்பிடிக்க வேண்டும் என்றுதான் யாரும் சொல்லக்கூடும். ஒரு தடவை உண்மையினின்றும் விலகினால் பிறகு அப்படியே நெடுந்தூரம் போகவேண்டியதுதான். மனித உள்ளம் உண்மையை எந்த அளவில் உணர்ந்துகொள்கிறதென்பதைக் கவனிக்காமல் அன்றன்றைக் காரியங்களை நடத்துவது கஷ்டம். அதைக் கவனித்து உணரும்படி செய்ய ஏதாவது செய்வது முக்கியம். இதை அரசியல் நிபுணன் செய்யாவிட்டால் ஞானியின் உபதேசங்கள்கூட இத்தகைய ஜனங்களிடம் கவைக்கு உதவாமல் போய்விடும். ஆகவே, மனிதன் உணரும் வகையில் அந்த உண்மையை விளக்கி அதை ஓரளவுக்குள் வரையறுத்துக்கொள்ள வேண்டும்.

இப்போது, விஞ்ஞானமும் தொழில் நுணுக்க அறிவும் வெகு தூரம் வளர்ந்துவிட்டன. முக்கியமாக ஐக்கிய அமெரிக்காவைப் போன்ற நாடுகளில் உண்டாயிருக்கும் வளர்ச்சி மிகவும் அதிகம். அந்த நாடுகளில் வாழ்வின் போகபோக்கியங்களும் தேகசுகமும் மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன. கலைப்பண்பிலேகூடப் பல துறைகளில் அவற்றின் மக்கள் முன்னேறியிருக்கிறார்கள். ஆனாலும், மனிதனுடைய தொழில் நுணுக்கமும் விஞ்ஞானமும் வளர்ந்த அளவுக்கு அவனுடைய மனமும் தர்ம நினைவும் வளர்ச்சி பெறவில்லை. இது பயங்கரமான விஷயம். ஏனென்றால், விஞ்ஞானமும் தொழில் நுணுக்கமும் பிரமாதமான சக்தியின் ஆயுதங்கள். இந்த ஆயுதங்கள் அணுச் சக்தியில் இருககின்றன. அணுச் சக்தியை மனித ஜாதிக்கு ஏராளமான உதவிகளைச் செய்ய உபயோகிக்கலாம்; மனித ஜாதியை ஏராளமாக அழிப்பதற்கும் உபயோகிக்கலாம். விஞ்ஞானமும் தொழில் நுணுக்கமும் தம்மளவில் நல்லவையும் அல்ல; தீயவையும் அல்ல. அவற்றை உபயோகிக்கிறவன்தான் நல்லவனாகவோ கெட்டவனாகவோ இருக்கிறான். ஒரு மனிதனின் கையில் இந்தப் பிரமாதமான ஆயுதங்கள் கிடைக்குமானால் அவன் இவற்றைச் சரியாக உபயோகிக்கும் வழியைத் தெரிந்துகொள்வது அவசியம். அதாவது, தக்க காரியங்களுக்காகத் தக்க முறையில் இவற்றை உபயோகிக்கும் அறிவை அடைய அவன் அறிவாற்றலிலும் ஆத்மிக சக்தியிலும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இறுதியான நோக்கம் எது என்பதை அவன்

தெரிந்துகொள்ள வேண்டும். மனித ஜாதியை மொத்தமாகப் பார்த்தால் அந்த உயர்நிலைக்கு அது இன்னும் வரவில்லை யென்றே சொல்லவேண்டும். சமயங்கள், சர்ச்சுகள், கோயில்கள், மசூதிகள் எத்தனையோ இருந்துங்கூட அந்த நிலைக்கு மனித ஜாதி வரவில்லை. இந்த யுகத்தின் துரதிருஷ்டம் அதுதான். நாம் சமய விசுவாசம் உடையவர்களென்று சொல்லிக்கொள்கிறோம்; சிறிய கொள்கைக்காகவும் சிறிய வழக்கங்களுக்காகவும் நமக்குள்ளே சண்டையிட்டுக்கொள்கிறோம். நம்முடைய அண்டை அயலாரிடத்தில் சரியாகவும் நாகரிகமாகவும் நடந்துகொள்ளத் தெரியவில்லை. உலகத்தில் சங்கடத்தின்மேல் சங்கடமாக வருகிறது.

உலகத்தில் அழிவுச் சக்திகள், ஆக்கச் சக்திகள் என்ற இருவகைச் சக்திகளைக் காண்கிறோம். நம்பிக்கையுண்டோ இல்லையோ, ஆக்கச் சக்திகளுக்கு வலியூட்டி அழிவுச் சக்திகளை எதிர்க்க வழி என்ன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். நமக்குத் தார்மிக அஸ்திவாரம் ஒன்று இருந்தால்தான் இதைச் செய்ய முடியும். நம் லட்சியங்களையும் சாமானிய வாழ்க்கையையும் இணைக்கும் தார்மிகக் கொள்கை வேண்டும். அப்படி ஒன்றும் இல்லையானால் அழிவுச் சக்திகளின் கை மேலாகும் என்பது நிச்சயம்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், மகாத்மா காந்தி இவர்களைப் போன்ற மனிதர்கள் மகத்தான இணைக்கும் சக்திகள்; உலகத்தின் ஆக்க வேலைக்கு உதவும் மேதைகள். அவர்கள் உபதேசித்த உபதேசங்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதுக்கும் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்த காரியங்கள் நமக்கு மிகவும் முக்கியமானவை. பொருளாதார ரீதியாகவோ பிற வகையிலோ மகாத்மாவினுடைய சில உபதேசங்களை நாம் ஒப்புக்கொள்ளலாம்; அல்லது ஒப்புக்கொள்ளாமலும் இருக்கலாம். ஆனால் வாழ்க்கையைப்பற்றி அவர் கூறிய அடிப்படையான கருத்துக்கள், இந்தியாவின் பல வகைச் சிக்கல்களுக்குப் பரிகாரமாக அவர் புகுத்திய ஆக்க முறை, இவை மிகவும் முக்கியமானவை. இவற்றை நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால் உண்மையாகவே நீங்கள் அழிவையும் கலகத்தையும் ஆதரிக்கிறவர்கள் ஆவீர்கள். அவருடைய வழி அடிப்படையில் இந்தியாவுக்குச் சொந்தமான வழி; இந்திய உள்ளத்துக்கும் இந்தியாவின் உயர்ந்த பண்புக்கும் ஏற்ற வழி. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தெய்விக புருஷரானாலும், சமய புருஷரானாலும், அரசியலைப்பற்றி ஒன்றும் சொல்லாதவரானாலும், அவருடைய அடிப்படையான மார்க்கம் என்ன என்பதுதான் நமக்கு வேண்டியது. ஆத்மிகம் போன்ற விஷயங்களில் புகுந்து குழப்பாத அரசியல்வாதி நான்; ஆனாலும் அந்த ஆத்மிக அம்சமும், தார்மிக அளவும் இல்லையானால் நம்முடைய பொதுஜன காரியங்களும் வாழ்க்கையுமே மட்டமாகிவிடும் என்று நான் உணர்கிறேன். இந்தமாதிரி கஷ்டமான பிரச்னைகள் இந்தியாவின் முன் நிற்கின்றன. நாம் எல்லாரும் கடுஞ் சோதனைக்கு உள்ளாகியிருக்கிறோம். இந்தியாவினிடம் எனக்கு நம்பிக்கை இருப்பதனால் இந்தியா இந்தக் கஷ்டங்களுக்கு எப்படியோ தப்பிப் பிழைத்துவிடும் என்பது மட்டு-

மன்று; இவற்றுக்குப் பரிகாரமும் செய்துவிடும் என்று நம்புகிறேன். ஏனென்றால், நமக்குப் பலவீனம் இருந்தாலுங்கூட அடிப்படையான உயிர்த்தன்மை அதற்கு இருக்கிறது. இத்தனை லட்சோப லட்ச வருஷங்களாக அதனால்தான் இந்தியா சமாளித்து வருகிறது; இப்போது தக்க சந்தர்ப்பம் வாய்த்திருப்பதனால் இன்னும் சிறப்பாகவே காரியங்களைச் செய்யும். எனக்கு இந்த நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கை மட்டும் போதாது. நாம் அதற்காகவே வேலை செய்ய வேண்டும்; வேலை செய்தால் மட்டும் போதாது; தெளிவான நோக்கத்தோடு செய்யவேண்டும். அந்த நோக்கத்தை இந்தியா அளவில் வைத்துக்கொள்ளலாம்; ஆனால் முக்கியமாக உலகத்துக்கே பயன்படக்கூடிய விரிந்த நோக்கம் அது. நம்முடைய தேசியம் குறுகியதாக இருக்கக்கூடாது. ஸ்வாமி விவேகானந்தர் பெரிய தேசியவாதி. ஆனால் அவர் தேசபக்தியோ சர்வதேச அபிமானத்தின் ஒரு பகுதி.

ஆகவே அந்தமாதிரி பெரியோர்களிடம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது இந்த விசாலமான மனப்பான்மையைத்தான். இதை நாம் தெரிந்துகொண்டு நம் முழு ஆற்றலுக்கும் ஏற்றபடி காரியத்தில் செய்து காட்டினோமானால், அவர்களை நினைவு வைத்து மரியாதை செய்தவர்களாவோம்; நம்முடைய தேசத்துக்குத் தொண்டு செய்ய முடியும்; மனித ஜாதிக்கே தொண்டு செய்பவர்களாவோம்.

உணவு உற்பத்தி

'நீ செய் - நீ செய்'.

—'சங்கர்ஸ் வீக்லி'

நிறவெறி கிளப்பும் மலான்



★

இப்போது தென்னாப்பிரிகாவில் பிரதமராக இருப்பவர் டாக்டர் டேனியல் பிராஙகாயிஸ் மலான் என்பவர். இதற்குமுன் இருந்தவர் மார்ஷல் ஸ்மட்ஸ். மலானின் கட்சி நாஷனலிஸ்டுக் கட்சி; ஸ்மட்ஸ் யுனைடெட் கட்சியைச் சேர்ந்தவர். இரண்டு பேரும் இந்தியர்களின் விஷயத்தில் ஒரே மாதிரி மனப்போக்கு உடையவர்களானாலும் மலான் பிரிட்டிஷ்காரர்களை வெறுக்கும் ஆசாமி. தென் ஆப்பிரிகாவில் 23 லட்சம் வெள்ளைக்காரர்களும் 1 கோடி 10 லட்சம் கறுப்பர்களும் இருக்கிறார்கள். இந்த 23 லட்சம் வெள்ளைக்காரர் கையில்தான் ஆட்சி இருக்கிறது. கறுப்பர்களில் 77 லட்சம் பேர் நீக்ரோக்கள்; 9 லட்சம் பேர் கலப்படமானவர்கள். 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் இந்தியர்களும் பிற ஆசியரும்.

வெள்ளைக்காரர்களில் பெரும்பான்மையோர் போயர்கள்; இவர்களை ஆப்பிரிகானர் என்று சொல்வார்கள். இவர்கள் டச்சுக்காரர்களின் வம்சத் தொடர்புடையவர்கள். இவர்களுக்குப் பிரிட்டிஷ்காரர்களையும் சுதேசிகளையும் இந்தியர்களையும் கண்டால் பிடிக்காது. மற்றவர்களையெல்லாம் பூண்டோடு அழித்துவிட்டு ஆப்பிரிகானருடைய தனியுரிமையாட்சியைத் தென்னாப்பிரிகாவில் நிலை நிறுத்தவேண்டும் என்ற நோக்கம் உடையவர்கள். டச்சு பாஷையின் திரிபாகிய ஆப்பிரிகான்ஸ் என்ற பாஷையை அவர்கள் பேசுகிறார்கள்.

ஹிட்லர் எப்படி எங்கும் நாஜிகளின் ஆட்சியை நிறுவி யூதர்களை அடியோடு அழிக்க எண்ணினானோ, அப்படித்தான் மலானும மறற ஜாதியாரைத் தென்னாட்பிரிகாவிலிருந்து விரட்டிவிட வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். அதற்குரிய பிரசாரமும் செய்துவருகிறார்.

மலானுடைய சுபாவத்தை எளிதில் தெரிந்துகொள்ள முடியாது. அவருக்கு இப்போது 75 வயது ஆகிறது. பார்த்தால் மந்தமான ஆசாமிபோல் இருப்பார். ஆனால் அத்தனைக்கத்தனை உள்ளே விஷம் இருக்கிறது.

வகுப்புவாதிகளின் தலைவர்; சுதேசி ஜனங்களுக்குப் பகைவர்; ஸெமிடிக் இனததை வெறுப்பவர்; பிரிட்டிஷாரைப் பிடிக்காதவர்; நாஷனலிஸ்டுக் கட்சியின் தலைவர்; முன்பு மதத்தலைவராக இருந்தவர்; ரகசியக் கும்பலாகிய 'ப்ரதர் பாண்ட்' என்ற ஸ்தாபனத்தில்

ஆதாரம்:

திஸ் வீக் மகஸீன் பேஜெண்ட்.
பால்டிமோர் ஸன்.
நியூ ஸ்டேட்ஸ்மன் அண்ட் நேஷன்.

அங்கத்தினர்; பாசிஸ்டுக் கட்சி அபிமானி - மலான்.

சென்ற தேர்தலில் மிகவும் குறைவான ஓட்டுக்களின் வித்தியாசத்தால் ஸ்மட்ஸைத் தோல்வியடையும்படி செய்தார். ஆப்பிரிகானர்களின் இன வெறியைத் தூண்டி முன்னுக்கு வந்தவர் அவர். கீழ்ச் சபையில் அவருடைய கட்சிக்குப் பலம் அதிகம். மேல்சபையில் ஸ்மட்ஸின் கட்சியே பெரும்பான்மைப் பலம் உடையதாக இருக்கிறது. ஆனால் மார்ச்சு மீ நடந்த தேர்தல்களில் மாகாணச் சட்டசபைகளில் மலான் கட்சிக்காரர்களுக்கே வெற்றி கிடைத்திருக்கிறது. அந்தச் சபையினரும் கீழ்ச்சபை அங்கத்தினரும் சேர்ந்தே மேல்சபை அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மாகாணச் சபைகளையும் கீழ்ச் சபையையும் தம் செல்வாக்குக்கு உட்படுத்திவிட்டதனால், இனிமேல் தானாகவே மேல்சபையும் அவரது கட்சியினரின் பலத்தைப் பெற்றுவிடும்.

ஹிட்லருடைய நாஜி கட்சியின் தத்துவத்தில் முக்கால் பங்கு மலான் கட்சியின் தத்துவமாக இருக்கிறது. அதிகார வெறி, இனப் பகை முதலியவற்றில் ஹிட்லரின் சிஷ்யர் மலான் என்றே சொல்லவேண்டும். பார்ப்பதற்குக் குட்டையாகவும் கட்டையாகவும் வழுக்கைத் தலையாகவும் இருப்பவர் மலான். கூரிய மூக்கு நுனி உடையவர். அவர் சொந்த விஷயங்கள் ஹிட்லரின் சொந்த விஷயங்களைப் போலவே மர்மமானவை. அவர் இரண்டாவது மனைவியைக் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறார். முதல் மனைவிக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர் குடும்பத்தைப்பற்றித் தெரிந்த விஷயம் இவ்வளவுதான். பத்திரிகைக்காரர்களுக்கு மிகவும் அருமையாகவே பேட்டி கொடுப்பார். 34 வருஷ காலமாக அவர் பொதுவாழ்வில் ஈடுபட்டு வருகிறார். அதிகமாகப் போனால் 12 தடவைக்குமேல் பேட்டி அளித்திருக்கமாட்டார்.

அவர் பிரெஞ்சு ஹியூகெனாட் வம்சத்தைச் சேர்ந்தவர். அவருடைய முன்னோர்கள் பிரான்ஸிலிருந்து ஓடி வந்து தென்னாப்பிரிகாவில் இருந்த டச்சுக்காரர்களிடம் அடைக்கலம் புகுந்தவர்கள். மலான் கேப் டவுனுக்கு அருகிலுள்ள மேறகு ரீபீக்கில் 1874-இல் பிறந்தார். ஆரம்பப் படிப்பெல்லாம் ஆன பிறகு ஹாலந்தில் உட்ரெச் யூனிவர்ஸிடியில் படித்தச் சமயப் புலமைப் பட்டம் பெற்றார்.

தென்னாப்பிரிகாவுக்கு வந்து டச்சு சர்ச் ஒன்றில் தலைவராக இருந்தார். முதல் உலக யுத்தம் ஆரம்பித்தபோது, மதத் துறையை விட்டு விலகி அரசியலில் புகுந்தார். நாஷனலிஸ்டுக் கட்சிப் பத்திரிகையாகிய 'டை பர்கர்' என்பதன் ஆசிரியரானார். 1917-ஆம் வருஷம் தென்னாப்பிரிகப் பார்லிமெண்டில் அங்கத்தினர் ஆனார். அப்போதே அவருக்கு இங்கிலீஷ்காரரைக் கண்டால் பிடிக்காது. ஆனாலும் தம் விருப்பு வெறுப்பை வெளிக்காட்டாமல் இருந்தார். அதனால்தான் அந்தக் காலத்தில் பிரதமராக இருந்த ஜெனரல் ஹெர்ட்ஸாக் என்பவர் 1924-ஆம் வருஷத்தில் அமைத்த மந்திரி சபையில் உள்நாட்டு மந்திரியாக அவர் நியமனம் பெற்று 9 வருஷங்கள் இருந்தார். சமயத்துக்கும் ஆளுக்கும் தகுந்தபடி வேஷம் போட்டுக் காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் அவர் சமர்த்தர்.

அதிகார பதவி பெற்றவுடன் ஆப்பிரிகானர்களைக் கவரும் உபாயங்களைச் செய்யலானார். ஆதி காலத்தில் குடியேறிய டச்சுக்காரரும் ஹூகெனாட்டு வம்சத்தவருமாகிய அவர்களையே போயர் என்று குறிப்பிடுவார்கள். அவர்களுடைய பாஷையாகிய ஆப்பிரிகான்ஸை ஆங்கிலத்துக்குப் பிறகு, அரசாங்க பாஷை ஆக்கினார். 1927-இல் தனியே தென்னாப்பிரிகாவுக்கு ஒரு கொடியை ஏற்படுத்தினார். இப்படி ஆப்பிரிகானர்களைக் கவர அவர் முயன்றாலும், தாராள நோக்குடையவர் போலவும் காட்டிக்கொண்டார். இந்தியர்களைக் கூப்பிட்டுச் சபை கூட்டினார். 1927-இல் யூதர்களை அழைத்து அவர்களுக்கு ஆசை காட்டும் அறிக்கைகளை விடுத்தார். ஆனால் அவர் உண்மையில் செய்த காரியம் வேறு. யூதர்களின் குடியேற்றத்தைக் குறைக்கச் சட்டம் செய்தார். இந்தியரின் சுதந்தரத்தைப் பறிக்க ஏற்பாடு இன்னும் செய்து வருகிறார்.

1934-க்கு முன் ஜெனரல் ஹெர்ட்ஸாக்கைத் தலைவராகக் கொண்ட நாஷனலிஸ்டுக் கட்சியும், மார்ஷல் ஸ்மட்ஸின் தென் ஆப்பிரிகர் கட்சியும் இருந்தன. 1939-இல் இந்த இரண்டையும் இணைத்து யூனைடெட் கட்சி என்று பெயர் கொடுத்தார்கள். ஆனால் நாஷனலிஸ்டுக் கட்சிக்காரர் எல்லாருமே இந்தப் புதிய கட்சியில் சேர்ந்துவிடவில்லை. தனி நின்ற சிலர் மலானைத் தலைவராகக் கொண்டு நாஷனலிஸ்டுக் கட்சியை நிலைநிறுத்தினார்கள். அவர்கள் ஹெர்ட்ஸாகின் தலைமையை விரும்பவில்லை.

தென் ஆப்பிரிகாவில் 'ப்ரதர் பாண்ட்' என்ற ரகசியச் சங்கம் ஒன்று உண்டு. அரசியல், வியாபாரம், பள்ளிக்கூடம், போலீஸ், ஸிவில் சர்விஸ் முதலிய ஒவ்வொரு துறையிலும் அதன் பிடிப்பு இருந்தது. அதில் 3000 ஆப்பிரிகானர்கள் அங்கத்தினர்களாக இருந்தார்கள். தென் ஆப்பிரிகாவில் ஆப்பிரிகானரின் தனியாட்சியை ஸ்தாபிப்பதென்ற கடுமையான விரதத்தை மேற்கொண்டது அந்தச் சங்கம். அது தனித் தனிப் பகுதிகளை உடையது. ரகசியமான வேலைத் திட்டத்தைக் கொண்டது. மலான் அதில் சேர்ந்து பாராட்டப் பெற்றார். அரசியல் ஆதிக்கத்தை இந்தச் சங்கம் அவர் மூலமாக அடைந்தது. இன்று நாஷனலிஸ்டுக் கட்சிதான் அந்தச் சங்கத்தின் நிர்வாகத்தில் முழுப் பொறுப்பை வகிக்கிறது. மலான் அரசாங்கத்து மந்திரி ஒருவர் அந்தச் சங்கத்தின் துணைத் தலைவர். பார்லிமெண்டு அங்கத்தினர்கள் 59 பேர் அதில் இருக்கிறார்கள்.

யாருக்கும் கட்டுப்படாத தனிச் சுதந்தர அரசாகத் தென் ஆப்பிரிகாவை ஆக்கி நாஷனலிஸ்டுக் கட்சி ஒன்றே ஆதிக்கம் வகிக்கும்படி செய்யவேண்டுமென்பது மலானும் அவர் தோழர்களும் கொண்டுள்ள லட்சியம். இந்த லட்சியத்தை முன் வைத்து மேலும் மேலும் பதவியில் உயர்ந்து வருவதற்கு ஏற்ற வகையில் மலான் முயன்று வருகிறார். ஆப்பிரிகானர்களுடைய வெறியைத் தூண்டித் தாளம் போட்டு வருகிறார். இங்கிலீஷ்காரர்கள்மேல் உள்ள பகையைத் தூண்டுகிறார்; கறுப்பர்கள் எந்தச் சமயத்திலும் தம்மை நசுக்கக் கூடுமாகையால் அவர்களை ஓங்க விடக் கூடாதென்று பூச்சாண்டி

காட்டி ஆப்பிரிகானர்களுக்கு உற்சாக மூட்டுகிறார்.

பிரித்தாளும் தந்திரத்தில் வல்லவர் மலான். கறுப்பு மனிதருக்கு எதிரே வெள்ளையரையும், இந்தியர்களுக்கெதிரே நீகிரோக்களையும், நீகிரோக்களுக்கு எதிரே இந்தியர்களையும் ஏவி வேடிக்கை பார்க்கிறார். சென்ற வருஷம் டிஸம்பர் மாதத்தில், "ஸுலூ தேசம் ஸுலூக்களுக்கே" என்ற கோஷத்தைக் கிளப்பச் செய்து நீகிரோக்களுக்கும் இந்தியர்களுக்கும் சண்டை மூட்டிவிட்டார். நாஷனலிஸ்டுக் கட்சியை ஆதரித்தால் நல்ல உத்தியோகம் தருவதாக நீகிரோத் தலைவருக்கு ஆசைகூடக் காட்டினார். ஆனால் மலானின் நோக்கம் கைகூடவில்லை. என்றாலும் ஸுலுக்களுக்கும் இந்தியர்களுக்கும் இந்த ஜனவரியில் உண்டான கலகத் தீயை எண்ணெய் விட்டு வளர்க்கும் கைங்கரியத்தை மலானும் அவர் தோழர்களும் செய்யத் தவறவில்லை.

யுத்த காலத்தில் மலான் நாஜிகளிடம் அபிமானம் உடையவராக இருந்தார். ஹிட்லரை எதிர்த்துத் தென் ஆப்பிரிகா போரில் புகுவதற்கு நாஷனலிஸ்டுக் கட்சி சம்மதிக்கவில்லை; எதிர்த்து வாக்களித்தது. மலானும் அவருடைய தோழர்களும் நேசக் கட்சியினரையும் யூதர்களையும் தூஷித்து நாஜிகளைப் புகழ்ந்தார்கள்; எவ்வளவோ மறைமுகமான வேலைகள் நடைபெற்றன. நேசக் கட்சிக்குத் துரோகமான காரியங்களைச் செய்யத் தூண்டுகோலாக இருந்தார்கள்.

ஹிட்லர் தோல்வியுற்றாரென்றாலும் மலானுக்கு இருந்த நாஜி அபிமானம் போகவில்லை. யுத்த காலத்தில் தேசத்துரோகம் செய்ததாகவும் நாஜி அபிமானிகளாக இருந்ததாகவும் ஐந்து பேர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்திருந்தார்கள். சென்ற வருஷம் மலான் பதவிக்கு வந்தவுடன் முதல் காரியமாக அவர்களை விடுதலை செய்தார். அவர்களை வீரர்களாக 'ப்ரதர் பாண்ட்' என்ற சங்கம் பாராட்டியது. மலான் போட்டிருக்கும் திட்டத்தில் முதலில் வருவது சுதேசிகளை ஒடுக்குவது; பிறகு, மற்றக் கறுப்பர்களையும் இந்தியர்களையும் அடக்குவது; அதன் பிறகு யூதர்கள்; அடுத்தபடி இங்கிலீஷ் பேசுவோர்.

நாஷனலிஸ்டுக் கட்சியிலுள்ள வெறியர்கள் ஸெமிடிக் இனத்துக்கும் இங்கிலீஷ்காரருக்கும் எதிராகப் பிரசாரம் செய்து கோஷங்களும் எழுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். நாஷனலிஸ்டுக் கட்சி அபிமானமுள்ள இளைஞர்களைப் போலீஸிலும் ராணுவத்திலும் நிறையச் சேர்த்து வருகிறார்கள்.

எல்லா ஏற்பாடுகளும் தயாராகியிருக்கின்றன என்ற நிச்சயம் ஏற்பட்டால் மலான் வேகமாக உள்நாட்டு எதிர்ப்பை அடியோடு அழிக்கக் கிளம்பிவிடுவார்.

ஸ்மட்ஸ் கட்சியாகிய யுனைடெட் கட்சிக்குப் பொதுஜனங்களின் ஆதரவு உண்டு. ஆனால் அந்தக் கட்சிக்காரர்களும் இனவெறியில் ஈடுபட்டவர்களே. அதனால் மலான் செய்யும் பல காரியங்கள் அவர்களுக்கும் சம்மதமாகவே இருக்கின்றன.

இன்றைய நிலையில் வெள்ளையரல்லாத மக்களின் ஆதரவைக் கூட்டி உருப்படியாகத் திட்டம் வகுத்து ஏதாவது செய்யாவிட்டால், மலானும் அவருடைய ரகசியச் சங்கத்தாரும் மேலும் மேலும் தங்கள் காரியங்களைச் செய்துகொண்டுதான் போவார்கள்.

இருபத்துநாலு ஆசிரியர்கள்

இயற்கையிலே பல பாடங்களைக் கற்பர் பெரியோர். அவதூத தத்தாத்திரேயர் இப்படி இருபத்து நாலு இயற்கைக் குருமாரிடம் பாடம் கற்றதாக, பாகவதத்திலே கூறுகிறார்.

யது மகாராஜா ஒரு நாள் ஓர் அவதூதரைக் கண்டான். அவர் பயமே அறியாதவர்; இளவயதானாலும் மகா ஞானி; மகாராஜா அவரை வணங்கி, "ஸ்வாமி, இந்த உலகத்தில் எல்லாரும் ஆயுளும் புகழும் பணமும் வேண்டுமென்று அறம், பொருள், இன்பங்களில் ஈடுபடுகிறார்களே; நீங்கள் மட்டும் எப்படி எதன்மேலும் பற்று இல்லாமல் ஜடம்போல் இருக்கிறீர்கள்? காமம், பேராசை என்னும் தீ மற்றவர்களை வாட்டி எடுக்கிறது; ஆனால் நீங்களோ கங்கை நீரில் யானை இருப்பதுபோல் ஆனந்தமாக இருக்கிறீர்கள்; அது எப்படி?" என்று கேட்டான்.

அதற்கு அந்த அவதூதர் சொன்னார்:

"அரசே, நான் புத்தறிவினால் பல விஷயம் தெரிந்துகொண்டேன். அதனால்தான் இப்படி எதன் மேலும் பற்றுதல் இல்லாமல் திரிகிறேன். என்னுடைய ஆசிரியர்கள் யார் தெரியுமா? பூமி, காற்று, ஆகாயம், நீர், தீ, சந்திரன், சூரியன், புறா, மலைப்பாம்பு, கடல், விட்டில் பூச்சி, வண்டு, யானை, தேன் சேகரிப்பவன், மான், மீன், பிங்களை என்ற வேசி, அன்றில், குழந்தை, கன்னிகை, வேடன், பாம்பு, சிலந்தி, குளவி இந்த இருபத்து நான்கு பேரும். இந்த ஆசிரியர்களிடமிருந்து என்ன என்ன அறிந்து கொண்டேன், தெரியுமா?

"எவ்வளவு தோண்டி எடுத்தாலும் வெட்டினாலும் பூமி பொறுமையோடு இருந்து நமக்குப் பலனையே தருகிறது. 'சூழ்நிலையும் மனிதர்களும் துன்புறுத்தினாலும் அறிவாளி தன் நிலையைவிட்டு அசையாமல் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு இருக்க வேண்டும்' என்ற உண்மையை இதிலிருந்து தெரிந்து கொண்டேன்.

"வாசனை முதலியவற்றை ஏந்தி வந்தாலும் காற்று எந்த விதமான பற்றுதலும் இல்லாமல் வீசுகிறது. 'பல விதமான விஷய சுகங்களில் ஈடுபட்டிருந்தாலும் எதிலும் பற்று இல்லாத யோகிபோல் வாழ வேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்து கொண்டேன்.

"எங்கும் பரவியிருந்தும் தனித் தோற்றத்தோடு விளங்குகிறது ஆகாயம். 'பிரம்ம வடிவிலே சராசரம் முழுவதும் நாம் பரவியிருந்தும் எதிலும் கலவாத தனிப்பண்பு நமக்கு இருக்கவேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"எல்லாப் பொருளையும் நீர் பரிசுத்தமாக்குகிறது. 'இனிய சுபாவமுள்ள பெரியோரைப் பார்த்தாலும் சரி, நினைத்தாலும் சரி, புகழ்ந்தாலும் சரி, நம் மனம்

தூய்மை அடையும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"எதையும் பொசுக்கித் தன்னை எவரும் அணுக முடியாதபடி ஒளிர்கிறது தீ. 'எதையும் உட்கொண்டு, எதற்கும் தளராமல், தவ ஒளி வீசும் மகானைப்போல் விளங்க வேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"சந்திரனின் கலைக்குத்தான் அழிவும் தேய்வும். 'தோற்றமும் அழிவும் உடலுக்குத்தான்; ஆத்மாவுக்கு அல்ல' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"சூரியன் தன் கிரணத்தின் மூலமாக நீரை இழுத்துக்கொண்டு மறுபடியும் வேண்டியபோது அதன் மூலமாகவே நீரைத் தருகிறான். ஆனாலும் கிரணங்களோடு அவனுக்கு எந்தவிதப் பற்றுதலும் இல்லை. 'தம் குணத்தின் மூலம் பிறர் குணத்தைக் கவர்ந்து, தேவைப்படும்போது அவர்களுக்கு அதை ஊட்ட வேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"ஒரு வேடன் விரித்த வலையில் குஞ்சுகள் தவிப்பதைப் பார்த்துப் பெண் புறா ஒன்று தானும் விழுந்தது. உடனே ஆண் புறாவும் அதில் விழுந்து வலையில் சிக்கியது. 'உறவினர்மேல் பாசம் வைத்து நம்மை நாமே கெடுத்துக்கொள்ளக்கூடாது' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"கொஞ்சமாக இருந்தாலும் நிறைய இருந்தாலும் எளிதில் கிடைத்த பொருளை உண்டு வாழ்கிறது மலைப்பாம்பு. 'கிடைத்ததே போதுமென்று திருப்தியோடு இருக்க வேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"விசாலமான நீர்ப்பரப்போடு, வேறு இடத்திலிருந்து நீர் வந்து விழுந்தாலும் தன் குணம் மாறாமல் கம்பீரமாக இருக்கிறது கடல். 'நாமும் அப்படி இருக்கவேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"நெருப்பில் கண்ணை மூடிக்கொண்டு விழுகிறது, விட்டில் பூச்சி. 'மாயாரூபமான பெண்ணைக் கண்டு மனிதன் புலன் வசப்படக்கூடாது' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"வண்டு மலர் கசங்காதபடி அது தருகிற தேனை உறிஞ்சி எடுக்கிறது. 'இல்லறத்தில் இருப்பவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல் அவர்கள் கொடுத்ததை வாங்கி உண்டு வாழ்ந்தால் போதும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"பெண் யானையைக் கண்டு ஆண் யானை மயங்கிக் கட்டுக்கு அடங்கி விடுகிறது. 'மரப்பாச்சியாக இருந்தாலும் பெண் என்றால் நெருங்கக்கூடாது' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"தேனீக்கள் தேனைக் குடிக்காமல் சேர்த்து வைக்கின்றன. ஆனால் தேன் சேகரிப்பவன் வந்து அவைகளைக் கொன்று அந்தத் தேனை எடுத்துக்கொண்டு போய் விடுகிறான். 'கஞ்சத்தனமாகப் பொருள் சேர்த்துப் பிறகு ஏமாறக்கூடாது' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"பாட்டைக் கேட்டு மான் மயங்கி வேடனிடம் சிக்கிவிடுகிறது. 'ஆடல் பாடல்களில் மூழ்கக்கூடாது' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"தூண்டில் இரைக்கு ஆசைப்பட்டு மீன் தூண்டிலில் மாட்டிக்கொள்கிறது. 'ருசியுள்ள பொருளுக்கு ஆசைப்படக் கூடாது; நாக்கைக் கட்டவேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"விதேக நகரத்தில் பிங்களை என்ற ஒரு வேசி இருந்தாள். அவள் அதிகப் பணம் கிடைக்கும் என்று பேராசையோடு வெகு நேரம் காத்துக் காத்து யாரும் வராமல் ஏமாந்து போனாள். 'ஆசையை அடக்கவேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"அன்றில் பறவை மாமிசத் துண்டைக் கவ்விக்கொண்டிருக்கும்போது வேறொரு பட்சி வந்து அதைத் துரத்தி யடித்து அந்தத் துண்டைப் பிடுங்கிக்கொண்டு போகும். 'நம் பொருள் என்று எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"மானம், அவமானம், கவலை எதுவும் இல்லாமல் குழந்தை வாழ்கிறது. 'நாமும் அப்படி இருக்க வேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"உறவினர்கள் வெளியே போயிருந்த சமயம் விருந்தாளிகள் வந்தார்கள். வீட்டில் இருந்த கன்னிப் பெண் நெல் குற்ற உள்ளே போனாள். அதைக் குற்றும்போது அவள் கை வளையல் ஓசைப்பட்டுக்கொண்டே யிருந்தது. அது விருந்தினருக்குக் கேட்குமே என்று அவளுக்கு வெட்கம். ஒவ்வொரு வளையலாக உடைத்துக்கொண்டே வந்து கடைசியில் ஒரே வளையலோடு நெல் குற்றினாள். அப்புறம் ஓசை கேட்கவில்லை. 'யாரோடும் நாம் சச்சரவு வைத்துக்கொள்ளாமல் மௌனமாக இருக்கவேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"பக்கத்தில் அரசன் வந்தாலும் வேடனுக்குத் தெரியாது; அம்பைத் தயாராக வைத்துக்கொண்டு தன் குறியிலேயே கவனமாக இருப்பான். 'வேறு எதிலும் மனத்தைச் செலுத்தாமல் ஆத்ம தியானத்தில் மூழ்கி, ஒரே நிலையாக இருக்கவேண்டும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"ஒருவர் கண்ணிலும் படாமல் வளை, புற்று இந்த இடங்களில் நல்ல பாம்பு வசிக்கிறது. 'நாமும் வீடு வாசல் நினைவாக இருந்து நம் தொல்லைகளை அதிகப்படுத்திக் கொள்ளக்கூடாது' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"சிலந்தி தன் வாயிலிருந்தே வலை பின்னுகிறது; அதைத் தானே விழுங்கவும் விழுங்கிவிடுகிறது. 'கடவுளால் ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும்' என்று இதிலிருந்து தெரிந்துகொண்டேன்.

"குளவி புழுவைக் கொட்டிக் கொட்டித் தன்னைப்போல் ஆக்குகிறது. 'அன்பினாலோ பயத்தினாலோ பகையினாலோ ஒருவன் எப்படி ஆக வேண்டுமென்று நினைக்கிறானோ அப்படியே ஆகிவிடுகிறான்' என்று இதிலிருந்து தெரிந்து கொண்டேன்.

"பல பிறப்புக்குப் பிறகு அருமையான மனிதப் பிறவி நமக்கு வாய்த்தது. 'இனி நாம் கடவுளை அடையப் பாடுபடவேண்டும்' என்ற உண்மையை இதிலிருந்து தெரிந்து கொண்டேன். இதனால்தான் பற்றில்லாமலும், அகங்காரம் இல்லாமலும் ஆனந்தமாக வாழ்ந்து வருகிறேன்."

இதைக் கேட்டதும் யது மகாராஜா அவரை வணங்கிப் பலவிதமாக உபசரித்து வழியனுப்பினான்.

க்விஸ்

[நமக்கு மிகவும் தெரிந்த விஷயங்களில்கூடச் சில சமயம் திட்டமான விவரங்கள் ஞாபகம் இருப்பதில்லை. இதோ சில கேள்விகள்: எங்கே, உங்கள் கவனசக்தியைச் சோதித்துப் பாருங்கள். பிறகு, 78-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.]

அரசியல்:

1. இந்திய தேசியக் காங்கிரஸ் மகாசபை முதல் முதலாகக் கூடியது எப்போது? எங்கே? ஸ்தாபகர் யார்? முதல் அக்கிராசனர் யார்?

2. நிஜாமின் துருப்புக்கள் இந்தியப் படைகளிடம் சரண் அடைந்த தேதி 10-4-'48, 24-5-'47, 18-9-'48 இந்த மூன்றில் எது?

பூகோளம்:

1. தென்னாப்பிரிக்க யூனியனுக்கு நிர்வாகத் தலைநகர் எது? சட்டசபைத் தலைநகர் எது? இரண்டுக்கும் உள்ள தூரம் சுமார் எவ்வளவு? இரண்டு ஏற்பட்ட காரணம் என்ன?

2. உலகத்திலே மிக உயர்ந்த மலைச்சிகரம் எது?

விஞ்ஞானம்:

1. நம் ஒவ்வொருவர் உடம்பிலும் மொத்தம் 90%, 59%, 15% இந்த மூன்றில் எந்த விகிதம் தண்ணீர் இருக்கிறது?

2. மனித எலும்பில் தண்ணீர் உண்டா? ரத்தத்தில் மட்டும் எவ்வளவு விகிதம் தண்ணீர்?

3. பொருள்களை விஞ்ஞானிகள் திரவ பதார்த்தம், திட பதார்த்தம், வாயு பதார்த்தம் என்று மூன்று வகையாகப் பிரிப்பார்கள்; அதில் கண்ணாடி எந்த வகை?

பொது:

1. உலகத்தில் விளையும் தங்கத்தில் 46% ஒரே ஒரு நாட்டில் கிடைக்கிறது; அது எந்த நாடு?

2. சினிமாப் படம் பிடிப்பதில், சென்ற வருஷம் உலகத்திலேயே முதலாவதாக நின்ற நாடு பிரிட்டன், அமெரிக்கா, ருஷியா இந்த மூன்றில் எது? இரண்டாவதாக நின்ற நாடு பிரான்ஸ், கானடா, இந்தியா இந்த மூன்றில் எது?

3. ஐக்கிய நாடுகளின் சங்க அமைப்பு விதிகளுக்கு முன்னுரை எழுதியவர் ஏ. ராமசாமி முதலியார், ஸ்மட்ஸ், மாலடாவ் இந்த மூவரில் யார்?

யுக்தி:

ஒரு பந்தயத்தில் ஓடிய நாலு குதிரைகள் எந்த வரிசையில் வந்தன என்பதுபற்றி மூன்று பேர் தலைக்கு ஒரு விதம் சொன்னார்கள்.

ராமன்: மாணிக்கம் முதலாவது; ரத்தினம் இரண்டாவது.

கோவிந்தன்: இல்லை, இல்லை. மாணிக்கம் இரண்டாவது; அகோரம் மூன்றாவது.

கோபாலன்: அதுவும் சரியில்லை. அகோரம் கடைசி; அற்புதம் இரண்டாவது.

இந்த ஒவ்வொருவர் சொன்னதிலும் ஒன்று சரி; ஒன்று பிழை. அப்படியானால், குதிரைகள் வந்த சரியான வரிசை எது?

பலன்கள் மிகவும் பயங்கரமாகத்தான் இருக்கின்றன. ஆனால், மனித முயற்சி அவற்றை மாற்ற முடியும்.

இந்த மாத ஜோஸ்யம்

ஒவ்வொரு மாதமும் சூரியனும் சந்திரனும் கூடுகிற அமாவாசை ஜோஸ்ய விஷயத்தில் மிகவும் முக்கியமானது. அந்த மாதத்தின் விளைவுகளை அடக்கிக் கொண்டிருக்கும் விதை போன்றது அது. 25—7—49 அன்று காலை 5-47 மணிக்கு அமாவாசை ஆரம்பமாயிற்று. அப்பொழுது உள்ள கிரக நிலைகளைக் கொண்டு இந்த மாத பலனைச் சொல்லலாம். உலகம் முழுவதும் அரசியல் கிளர்ச்சிகளும் இனவெறியும் வகுப்பு வெறியும் நிலவும். ஏற்கனவே குழப்பம் அடைந்துள்ள பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் இன்னும் கஷ்டங்கள் உண்டாகும். மகாராஷ்டிரத்தில் கலகம் நிகழும். அதிக உஷ்ணமும், அகாரணமான திடீர் மரணங்களும் நேரும். வியாபாரிகளுக்குப் பெரிய கஷ்டங்கள் ஏற்படும். பொக்கிஷங்கள், நிதி சம்பந்தமான நிலையங்கள் இவற்றுக்கு அழிவு உண்டாகும். துணிகரமான கொலைகள், பலாத்காரமான செயல்களால் உயிருக்கும் சொத்துக்கும் நஷ்டம், சண்டை சச்சரவு, வியாதி இவை ஏற்படும். புதனுடைய நிலையைக் கொண்டு பார்த்தால் வியாபார உலகத்தில் பெரிய 'கைகள்' துன்பத்துக்கு உள்ளாவார்கள். ஜனங்கள் நியாயத்தைக் கவனிக்காமல் மனம்போனபடி நடப்பார்கள். நிர்வாகம், சமயத்துறை, ராணுவத்துறை, சட்டசபை என்ற துறைகளில் ஒழுங்கீனம் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும்.

இந்தியாவில் மேகமூட்டம் அதிகமாக இருக்கும். புழுதிக் காற்றுக் கடுமையாக அடிக்கும். மழைக் காலத்தில் குளிர் அதிகமாக இருக்கும். மேற்குப் பகுதிகளில் அமிதமான மழையும் வெள்ளமும் உண்டாகும்.

ஸோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் சர்க்காருக்கு எதிரான வேலைகளில் ஈடுபட்டிருப்பார்கள். தொழிலாளிகள் சம்பள உயர்வு வேண்டுமென்று கேட்பார்கள். மாத இறுதியில் சாமான்களின் விலை அதிகமாகும். வங்காளத்தில் மந்திரிசபை நெருக்கடி ஏற்படும். ரெயில் விபத்தினாலும் விமான விபத்தினாலும் மரணங்கள் சம்பவிக்கும். நாடகக் கொட்டகைகளுக்கும் உல்லாசமாகப் பொழுதுபோக்கும் இடங்களுக்கும் ஓரளவு கெடுதி உண்டாகும். மர்மமான சில வியாதிகளால் குழந்தைகள் மரணமடையும். சில பெயர்பெற்ற பேர்வழிகள் மரணம் அடைவார்கள். மைசூரிலும் சென்னையிலும் புது வரிகள் போடுவார்கள். ஆனால் எதிர்பார்ப்பதற்கு முன்பே அவற்றை எடுத்துவிடும்படி

[காப்பிரைட்: அஸ்ட்ரலாஜிகல் மகஸின் (ஆங்கிலம் : ஆகஸ்ட் '49), பெங்களூர்.

நேரும். சில காங்கிரஸ் தலைவர்களுக்கு அபவாதங்கள் நேரும். குற்றங்கள் அதிகரிக்கும். தனி மனிதனுடைய சொத்துக்கும் பாது காப்பு இராது. உணவு நிலையில் சிறிது சௌகரியம் ஏற்படும். ஆனாலும், பொது ஜனங்களுக்குக் கஷ்டந்தான் இருக்கும்.

தூரக் கிழக்கு: பர்மா, மலேயா, தாய்லந்து இந்த நாடுகளில் அமைதி இராது. பர்மா அரசாங்கத்துக்கும் கரேன்கள், கம்யூனிஸ்டுகள் இவர்களுக்கும் யுத்தம் பலமாகும். அயலாருடைய தலையீட்டினால் கம்யூனிஸ்டுகளுக்கும் கோமிண்டாங் கூட்டத்தினருக்கும் சமாதானம் ஏற்படுவதாகப் பேச்சு இருக்கும். ஆனால் ஒன்றும் நடக்காது. சீன அரசியலில் முக்கியமான சிலர் மரணம் அடைவார்கள். ஜப்பானில் இயற்கை நிகழ்ச்சிகளால், உயிருக்கும் சொத்துக்கும் சேதம் உண்டாகும். சக்கரவர்த்தி ஒரு விபத்துக்கு உள்ளாகலாம்.

மத்தியக் கிழக்கு: அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் நடக்கும் சண்டை குறையும் என்று தெரியவில்லை. இஸ்ரேல் ராஜ்யம் வரவரப் பலம் அடையும். எகிப்தில் ரத்தக் கிளறியும் புரட்சி வேலைகளும் நிகழும். ஒரு பிரபலஸ்தர் காலமாவார்.

ஐரோப்பா: இங்கிலாந்து வெளிநாட்டுச் சந்தைகள் சிலவற்றை இழக்கும். தொழிலாளர் வேலை நிறுத்தம் நிகழும். அரசருக்கு அசௌக்கியம் ஏற்படும். தொழிற்கட்சி பதவியைக் காப்பாற்றிக்கொள்ளக் கஷ்டப்படும். பொருளாதாரப் போட்டியில் ருஷியாவின் கை ஓங்கும். ஸ்டாலினுக்குச் சௌக்கியக் குறைவு நேரலாம்.

அமெரிக்கா: கானடா சர்க்காரில் முக்கியமான தலைவர் ஒருவர் மரணமடைவார். தற்கொலைகள் அதிகமாக இருக்கும். போக்குவரத்து, சுரங்கங்கள் இவற்றில் வேலை நிறுத்தத் தொல்லைகள் உண்டாகும். கடுமையான விமான விபத்துக்கள் நேரும். இனக் கலகங்கள் பல நிகழும்.

ooOoooooOoo

மாளாத பிரசங்கம்

ஸினிமாப்பட முதலாளி ஒருவர் முன்னெல்லாம் விருந்துகளிலே பேச ஆரம்பித்தால் வெகு நேரம் வரைக்கும் ஓய மாட்டார். இப்போது அவர் மிகச் சுருக்கமாகப் பேசுகிறார். "இந்தச் சீர்திருத்தம் எப்படி ஏற்பட்டது?" என்று அவரைக் கேட்டதற்கு, அவர் சொன்னது இது: "ஒரு சமயம் செவ்வாய்க் கிழமை மாலையில் நான் பேசினேன். என் பேச்சுக்கு நடுவே இரண்டு பேர் பேசிக்கொண்டது என் காதிலே விழுந்தது. அதைக் கேட்டுத்தான் சீர்திருந்தினேன். 'இந்தப் பிரசங்கிக்குப் பிறகு என்ன வரும்?' என்று கேட்டார் ஒருவர். 'புதன்கிழமை' என்றார் மற்றவர்."

—மாண்ட்ரீல் 'ஸ்டார்.'

அற்புதமான கவிதையும் வர்ணனையும் நிறைந்த ஹிந்து வேதங்கள் மிகவும் பழமையானவை.

நமது வேதம்

கே. ஏ. தேவதாசா

வேதத்தைப் படிப்பது மிகவும் கஷ்டம் என்கிறார்கள் சிலர். அதை மனனம் செய்வது அசாத்தியம் என்கிறார்கள் வேறு சிலர். இதனால் ஸம்ஸ்கிருதம் தெரிந்தவர்கள்கூடச் சில சமயம் மேலே படிக்கப் பயந்துவிடுகிறார்கள். வேதங்களைச் சரியான முறையில் கற்க முடியாது என்ற சந்தேகத்தினால் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கப் பயந்து அந்த முயற்சியை விட்டுவிடுகிறார்கள்.

உபநிஷத்துகளையும் ஸ்மிருதிகளையும்மட்டும படிப்பதைவிட அடிப்படையான வேதங்களைப் படிப்பது மிகவும் நல்லது. புரோகிதமும் பூஜையும் செய்யும் பலருக்கு வேத மூலங்களையும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமோ, பக்தியோ, சிரத்தையோ இல்லை. எங்கும் எந்தக் காலத்திலும் வேத பாடசாலைகள் அவசியம். மனிதனுக்கு உணவு போன்றது வேதம். எங்கும் பாடசாலைகள் ஏற்பட்டுப் பிள்ளைகள் பக்தியோடும் ஆசையோடும் வேதங்களைப் படிக்க வேண்டும். வேத நூல்களின் பொருளை முதலில் அவர்கள் அறிய வேண்டும். சீக்கிரத்தில் எல்லாவற்றையும் நன்றாக மனப்பாடம் செய்யும் வழியில் பாடங்கள் நடத்தினால் நல்லது.

ஸம்ஸ்கிருதத்தில் 'பிராம்மணம்' என்பது ஒரு நூல். அது வேத மந்திரங்களின் பொருளை விளக்கி எளிய முறையில் எழுதியது. ஸம்ஸ்கிருத இலக்கியத்தில் இது முதல் பாட புஸ்தகம். இதில் சில பாகங்கள் சுலோகங்களாகவும் இருக்கின்றன. வேதம் ஒவ்வொன்றுக்கும் 'பிராம்மணம்' என்ற பொருள் விளக்கம் உண்டு. இதை மூன்று பாகங்களாகப் பிரித்திருக்கிறது. முதல் பாகம் மந்திரங்களைப்பற்றிய விவரம். இரண்டாவது தருமங்களைப்பற்றிய விவரம். மூன்றாவதுதான் உபநிஷத். மூன்று பாகங்களாகப் பிரித்த 'பிராம்மண'த்துக்கும் வேதம் என்ற பெயரே வழக்கில் இருந்து வருகிறது. இதற்கு ஓர் உபமானம். குருகுலத்திலிருந்து திரும்பும் மாணவனைப் பார்த்துக் குரு, "ஸத்யம் வத, தர்மம் சர" இப்படிச் சில உபதேசங்களைச் செய்கிறார். இவை தைத்திரீய உபநிஷத்தில் உள்ளவை. ஆனாலும் இவைகளைச் சுருதிவசனம் அல்லது வேதம் என்றுதான் சொல்லுகிறார்கள். இப்படி விஷயவாரியாகப் பிரிப்பதால் வேதமும் நான்காகப் பிரிந்திருக்கிறது.

ருக்வேதம்: இதில் பத்து மண்டலங்கள் அடக்கம். மண்டலம் ஒவ்வொன்றிலும் அறுபதுக்கு மேற்பட்ட சூக்தங்கள் அடங்கியிருக்கின்றன. மந்திரங்களும் நிறைய உண்டு. ஒவ்வொரு மண்டலத்தில் உள்ள மந்திரங்களும், வசிஷ்டர், மேதாதிதி, வாமதேவர் முதலிய ரிஷிகளை

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்: 4-4-'49), பெங்களூர்.

ஆதாரமாகக் கொண்டவை. ஏழாம் மண்டலத்தில் அநேக மந்திரங்களுடன் கூடிய 104 சூக்தங்கள் வசிஷ்டருடையவையாகவே இருக்கின்றன.

யஜுர் வேதம்: இதிலும் அநேக அத்தியாயங்கள் உண்டு; அக்கினி, சோமன் இவர்களைப் பற்றிய யாக மந்திரங்கள் நிறைந்தது இந்த வேதம். இதில் 'கிருஷ்ண' 'சுக்ல' என்ற இரண்டு பிரிவு. சுக்ல யஜுர்வேதத்தில் 16, 30-ஆம் அத்தியாயங்களில் நான்கு வர்ணங்களைப்பற்றியும் சரியான விவரம் இருக்கிறது. யஜுர் வேதத்தில் விஷ்ணு சிறந்து விளங்குகிறார். நாகம், தெய்வம் இவைகளைப் பூஜிக்கும் முறையையும் இதில் காணலாம்.

சாம வேதம்: இதில் கௌதம, ஜைமினி என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஹோமம் நடக்கும் போது சோமன் முதலிய தேவர்களைக் குறித்துப் பாடும் வேதம் இது. இதில் சரித்திர சம்பந்தமான விஷயம் எதுவும் கிடைக்காது.

அதர்வ வேதம்: இதைப் பிரம்ம வேதம் என்றும் சொல்லுகிறார்கள். இதில் 20 கண்டங்களும் 730 சூக்தங்களும் இருக்கின்றன. நீர்ரோகம், மேகநோய் இவைகளுக்கு வைத்தியம் செய்யும் முறை இதில் இருக்கிறது. பெரிய ஆயுர்வேத பொக்கிஷம் இது. பும்சவனம், கல்யாணம் இவையும் அரசாங்க விஷயங்களும் புருஷ சூக்தமும் இதில் அடங்கியிருக்கின்றன. ருக் வேதத்திலே வரும் விவாகத்தைப் பற்றிய விவரம் அதர்வத்திலும் திரும்ப வருகிறது. எல்லா நோய்களையும் தீர்க்கும் மந்திரங்களும் இதில் இருக்கின்றன. நோயாளியின் முகத்தை அக்கினியில் காட்ட வேண்டுமென்றும் அக்கினி எந்த நோயையும் தீர்க்கக் கூடியவன் என்றும் ஒவ்வொரு மந்திரத்திலும் இருக்கிறது.

ஸம்ஹிதை: இது வேறு ஒன்றுமில்லை. மந்திரங்களைக் கோவையாக வைத்திருப்பது என்பது இதன் பொருள். இந்தக் கோவை கலையக் கூடாதென்று சில கட்டுப்பாடுகள் வைத்திருக்கிறார்கள். கனபாடம், ஜடாபாடம் என்கிறார்களே; இதன் பொருள் பின்னுக்கும் முன்னுக்கும் சொல்லுவது என்பதுதான். ஒருவன் அநுசரிக்க வேண்டிய முறைகள் எல்லாம் வேதத்தில் தெளிவாக இருப்பதால் திருத்துவதற்கே ஒன்றும் கிடையாது.

சந்தஸ்: கவிதைகளில் அநேக விருத்தங்கள் இருப்பது போல் இதிலும் உண்டு. முக்கியமாக ருக் வேதத்தில் காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப் போன்ற 6, 7 சந்தஸ்கள் இருக்கின்றன: காயத்ரீ என்பது 24 அட்சரங்களுடையது. உஷ்ணிக் என்பதற்கு 28 அட்சரங்கள். சந்தஸ் லௌகிக காவியங்களிலும் உபயோகப்படுகிறது.

நிருக்தம்: வேத மந்திரங்களின் சப்தப் பொருளையும் ஞானத்தையும் யாஸ்கர் இதில் விவரமாய் எழுதியிருக்கிறார். ஸாயணாசாரியர் என்பவர் வேதத்துக்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார். இவர் இருந்தது கி. பி. 14-ஆம் நூற்றாண்டு.

தேவர்: ருக்வேதத்தில் அக்கினி, வாயு, ருத்திரன் முதலிய தேவர்களின் ஸ்தோத்திரங்களே அதிகம். 1-ஆம் மண்டலத்தில் 164-ஆம் சூக்தம் 46-ஆம் மந்திரத்தில், "தேவன் ஒருவனே, அவனையே விதவிதமான பெயர்களைக் கொண்டு அழைக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறது. அதையே 10-ஆம் மண்டலத்திலும் காணலாம்.

இந்திராதித்யர்: அக்கினி இல்லாமல் மழை வராது. மழையைக் கொடுக்கும் சக்திக்கு விருத்ரன் என்று பெயர். இதற்குப் பகைவன் இந்திரன். இந்திரன் மனம் வைத்தால்தான் மழை பெய்யும். மழையினுல்தான் உலகம் நடக்கும்; மக்களுக்கும் அன்னம் கிடைக்கும். இதற்கு இந்திரன் அருள் வேண்டும். ஆகையால் இந்திரனைப் பூஜை செய் என்று ருக்வேதம் முறையிடுகிறது. வருணபகவான், தேவர்களின் தலைவன். சூரியன் வியாதிகளையும் கெட்ட கனவுகளையும் நாசமாக்குவான். ஸவித்ரு புத்தியைக் கொடுக்கும் தேவதை. பூஷன் என்ற தெய்வம் பிரேதங்களைப் பித்ரு லோகத்துக்குக் கரையேற்றுவது.

ருக்வேதத்தில் 'உஷஸ்' என்னும் ஸ்திரீ தேவதையைப்பற்றிய விவரம் வருகிறது; அது இயற்கை அழகை வர்ணிப்பது. அதை அவசியம் மனப்பாடம் செய்யவேண்டும்.

அசுவினி தேவர்கள் சிறந்த வைத்தியர்கள். அவர்களின் பல அற்புதச் செயல்களை வேதத்தில் விரிவாகக் காணலாம்.

ஊர்வசி, புரூரவஸ், இவர்கள் இருவருடைய சம்பாஷணையும் ருக் வேதத்தில் இருக்கிறது. 'அசுர' என்னும் பதம் முதலில் தேவர்களுக்கு உபயோகமாகி வந்தது. 'அசு' என்றால் பிராணன் என்று பொருள். இதே வார்த்தை 'நசுரஹ' என்று அசுரர்களுக்கும் உபயோகமாயிற்று.

உலகப் படைப்பு, மரணத்துக்குப் பிறகு நடப்பது, விஷ சாந்தி, ஆசாரங்கள் இவைகளைப்பற்றிய மந்திரமெல்லாம் ருக் வேதத்தில் இருக்கின்றன. பயங்கொள்ளிகள் எந்தக் காரியத்துக்கும் உதவமாட்டார்கள் என்பதைப்பற்றி 10-ஆம் மண்டலத்தில் 95-ஆம் சூக்தம், 15-ஆம் மந்திரத்தில் விவரமாய்க் காணலாம்.

வேதங்களின் ஆரம்பம் சுமார் கி. மு. 2500 என்கிறார்கள். வெளி நாட்டவர் சிலர் கி. மு. 4500 என்றும் சொல்லுகிறார்கள். கிருத்திகை நட்சத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு சொல்லுகிறவர்கள் கி. மு. 6000 என்கிறார்கள்.

அந்தக் காலத்து முனிவர்கள் சிந்து நதிக் கரையில் வசித்தார்கள் என்று தெரிகிறது. 'முனிவர்களின் தவ வலிமையினாலும் நல்ல உபதேசங்களினாலும் அரசர் எப்படிப்பட்ட பகைவனையும் வென்றார்கள்' என்பது வேதத்தின் 7-ஆம் மண்டலத்திலே, 33-ஆம் சூக்தத்தைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். ருக் வேத காலத்தில் அரசர் எல்லாரும் போர் செய்ய ஆவலாகக் காத்திருப்பார்களாம். நாட்டியம், சங்கீதம் முதலிய கலைகள் அந்தக் காலத்தில் எப்படி இருந்தன என்று ருக் வேதத்திலிருந்து அறியலாம்.

'வேதத்தைப் படித்தவன் தெரிந்துகொள்ளாத விஷயமே கிடையாது. ஞானத்தைத் தரக் கூடியது வேதம் ஒன்றுதான்' என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு அவைகளைப் பூஜித்து வந்தார்கள் நம் முன்னோர்.

உலகத்துச் செல்வத்துளெல்லாம் சிறந்தது, நல்ல மனைவி வாய்ப்பது. கெட்டவள் வாய்த்துவிட்டால், வாழ்க்கையில் அதைவிடக் கசப்பு வேறு எதுவுமில்லை.

—ஸைமனிடிஸ்.

கனுதேசாய் சித்திரங்கள்



சுவரிலே வர்ணக்கோலம்



திலகம்

—காப்பிரைட்: 'இந்தியா', பம்பாய்.

'மந்திரத்தால் மாங்காய் விழுமா?' என்பது பழமொழி. ஆனால், அதனால் மழை பெய்யும் என்று உலகெங்குமே நம்பிக்கை இருக்கிறது!

மந்திரத்தால் மழை

எஸ். கே. செல்லையா

சில மாதங்களுக்கு முன்னால் சென்னை மாகாணத்தில் கோயில்களில் விசேஷமாகப் பூஜை நடத்தினார்கள்: காரணம் மழை இல்லாததுதான். மடங்களில் வருணஜபம், ஹோமம் எல்லாம் செய்வித்தார்கள். மேல்நாட்டு விஞ்ஞானிகளைப்போல் நம் நாட்டில் பனிக் கட்டியைக் கொண்டு மழை பெய்விக்கும் சக்தி இன்னும் ஏற்படாததால் வருணனைப் பூஜித்தே நாம் மழையை வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டுக் கோடம்பாவி: நான் தென்னாட்டைச் சுற்றும்போது பல இடங்களில் வருணஜபம் நடப்பதைப் பார்த்தேன். ஒரு சிறு பட்டணத்தில் இறங்கியிருந்தேன். அந்த வருஷம் மழைக்காலம் பாதி முடிந்துவிட்டது. வானத்திலிருந்து ஒரு துளி நீர் விழவில்லை. ஜனங்கள் பலவிதத்திலும் தண்ணீர் இல்லாமல் தவித்தார்கள். கால்நடைகளுக்குக்கூடப் புல் கிடைக்கவில்லை. ஊரார் வருணஜபத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். தென்னாட்டில்மட்டுமே இந்த முறை அமலில் இருக்கிறது. "பூமியில் பாவம் அதிகரித்து விடுகிறது. அதனால் வருணனுக்குக் கோபம் வருகிறது. பூமிக்குப் பக்கத்திலேயே அவன் வர மறுக்கிறான்" என்று அவர்கள் எண்ணுகிறார்கள். வைக்கோலில் மனித உருவம் போல் கட்டிக் கடைத்தெருவில் அவனைக் கொல்லுவது போல் பாவனை செய்வார்கள். பிறகு இறந்தவர்களுக்குச் செய்யும் கிரியைகளையெல்லாம் அந்த உருவத்துக்குச் செய்வார்கள். அன்று இரவே மழை வரும் என்று அவர்களுக்கு நம்பிக்கை. என்ன ஆச்சரியம்! அன்று அப்படியே மழை பெய்ததை நான் பார்த்தேன்.

ரிச்யசிருங்க ஹோமம்: மற்றொரு முறை மழைக் காலத்தில் ஓர் ஊரில் இருந்தேன். மழை இல்லை. பயிர் பச்சைகள் தீய்ந்துவிட்டன. அந்த ஊர்ப் பிராம்மணர்கள் வேதத்தில் சொல்லிய பர்ஜன்ய ஜபம் செய்ய ஆரம்பித்தார்கள். அதாவது, இந்திரனுக்கு உவப்பான மந்திரங்களை ஜபித்துக்கொண்டு பன்னிரண்டு நாட்கள் ஹோமமும் செய்தார்கள். இதே சமயத்தில் வேத வேதாங்கங்களில் கரைகண்ட பிராம்மணர்கள் கழுத்து மட்டத்தில் நீர் நிலைகளில் ஆறு மணிநேரம் நின்று வருணனைக் குறித்து ஜபம் செய்து பிரார்த்தித்தார்கள்; ரிச்யசிருங்க ஹோமமும் செய்யத் தொடங்கினார்கள். இது ரிச்யசிருங்க முனிவரைத் திருப்தி செய்வது. ரோமபாத ராஜாவின் நாட்டில் பன்னிரண்டு வருஷம் மழை பெய்யாத காலத்தில் தாசிப்

காப்பிரைட்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு), சென்னை.

பெண்களை அனுப்பி ரிச்யசிருங்கரை வரவழைத்ததும், அவர் கால் பட்டவுடன் மழை பெய்ததும் எல்லாருக்கும் தெரிந்த கதை. இந்த ஜபங்களைச் செய்தவர்கள் மனப்பூர்வமாகச் செய்திருக்க வேண்டும். உடனே மழை கொட்டுக் கொட்டென்று கொட்டியது.

வருண நிருத்தியம்: தென்னாட்டுக் கிராமங்களில் பல இடங்களில் வருண நிருத்தியம் என்ற சம்பிரதாயம் இருக்கிறது. குடியானவர்கள் வருணப் பிரீதியாக இந்த நிருத்தியம் செய்கிறார்கள். நாட்டியம் ஆடப் போகிறவர்கள் முதல் நாள் முழுவதும் பட்டினி இருப்பார்கள். ஏகாந்தமான இடத்தில் இருந்து தியானம் செய்வார்கள். நாட்டிய தினத்தன்று விடியற்காலையிலேயே பக்கத்தில் இருக்கும் ஆற்றிலோ, குளத்திலோ ஸ்நானம் முடித்துக்கொள்வார்கள். பிறகு நாட்டியத் தலைவன் நதித் தெய்வத்துக்குச் சாஷ்டாங்கமாய் வணங்குவான். மடிச் சாயவேஷ்டியோடு நின்று ஜபம் செய்வான். பூசாரி மிருதங்கத்தை முழக்குவான். சாம்பிராணி, குங்கிலிய தூபம் நிறையப் போடுவார்கள். இந்தச் சமயத்தில் தலைவன்மேல் ஆவேசம் வந்துவிடும். மற்ற நாட்டியக்காரர்கள் சிவப்புச் சொக்காய் அணிந்திருப்பார்கள். எல்லாரும் ஆவேசத்தால் நடுங்குவார்கள். முகம் நிறையக் குங்குமம், சந்தனம், அட்சதை அப்பிக் கிடக்கும். கழுத்தில் பூமாலையும் கையில் காப்பும் காலில் சதங்கைகளும் போட்டிருப்பார்கள். எல்லாருடைய தலைமேலும் கரகங்கள் இருக்கும்; அவற்றையும் பூ, சந்தனம், குங்குமம் இவற்றால் அலங்கரித்திருப்பார்கள். ராகதாளத்துடன் நாட்டியம் ஆரம்பிப்பார்கள். சாதாரணமாக இந்தக் கூட்டத்தின் தலைவன் பலிஷ்டனாய் இருப்பான். உற்சவம் இப்படிப் புறப்பட்டுப் போய்க் குறிப்பிட்ட இடத்தில் வந்து சேரும். அங்கே ஒரு மேடை கட்டி அலங்கரித்திருப்பார்கள். ஒவ்வொரு கரகமாக நாட்டியத்துடன் முன்னேறும்; தலைவன் ஒவ்வொருவராகப் பிடித்துத் தூக்கி ஆகாயத்தில் காட்டிவிட்டுக் கீழே விடுவான். இது வருணனை அழைக்கத் தூது அனுப்புவதாகப் பாவனை. நாட்டியம் ஆடுபவர்கள் எல்லாரும் வட்டமாக நிற்பார்கள். மத்தளங்கள் இடி போல் முழங்கும். நாட்டியம் ஆரம்பிக்கும். ஜனங்களின் உற்சாகம் கட்டு மீறிவிடும். தலைவன் வாழைப்பழம் ஒன்றை ஒரு நாட்டியக்காரன் தலைமேல் வைத்து இரண்டாக நறுக்குவான். இது வருணனுக்கு நிவேதனம். பிறகு தலைவன் லயம் தவறாமல் கத்தி சுழற்றுவான். அது அற்புதமாக இருக்கும். இப்படி நாட்டியம் பூர்த்தியான பின் முழங்கால் படியிட்டு மழை பெய்விக்க வேண்டுமென்று வருணனைப் பிரார்த்திப்பான்.

சாஸ்தா பூஜை: மலையாளத்தில் சாஸ்தாவுக்குப் பூஜை செய்து மழையைத் தருவிப்பார்கள். எல்லாரும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வார்கள். சாப்பாட்டுக்கு வேண்டிய பண்டங்களை எல்லாம் மலையாகக் குவிப்பார்கள். கூட்டத்தில் ஒருவர்மேல் சாஸ்தா ஆவேசம் வந்து மடைப்பள்ளி அடுப்பிலிருந்து இரண்டு கொள்ளிக் கட்டைகளை எடுத்து வந்து அவர் கூட்டத்துக்குள்ளே சுழற்றுவார். அவரைச் சாஸ்தா விக்கிரகத்தின்முன்

அழைத்துக்கொண்டு போய் நிறுத்தி விக்கிரகத்துக்கு அபிஷேகம் செய்வார்கள். ஆவேசம் வந்தவர், கேள்விகளுக்குப் பதில் சொல்லுவார்; பிறகு கீழே விழுந்துவிடுவார். அவருக்குச் சாம்பிராணி தூபமும் கர்ப்பூர ஆரத்தியும் எடுப்பார்கள்.

பில்லர்கள் வழக்கம்: மழை பெய்யாத சமயத்தில் பில்லர் என்ற வேடஜாதியார் குரவை பாடிக்கொண்டு காளி கோயிலுக்குப் போய்க் கடாவைப் பலி கொடுப்பார்கள். மழை பெய்யவேண்டுமென்று பிரார்த்திப்பார்கள். வேறு சிலர் தவளைகளைப் பிடித்துத் தலைகீழாகத் தொங்கவிடுவார்களாம். தவளை வாயைத் திறந்துகொண்டு தாகத்துடன் தொங்குவதைப் பார்த்தாவது வருணன் இரங்கி மழையை அனுப்புவான் என்று இவர்கள் நம்புகிறார்கள்.

பர்மா ஜலோத்ஸவம்: பர்மாவில் மூன்று நாள் 'ஜலோத்ஸவம்' என்று கொண்டாடுகிறார்கள்; இது வருண பூஜையே. இந்தத் தெய்வத்தின் பெயர் 'தாக்யாமின்.' மழையை அனுப்ப வேண்டுமென்று, சிறியவர்கள் பெரியவர்கள் எல்லாரும் சேர்ந்து 'ஹோளி' பண்டிகையைப் போல் இதைக் கொண்டாடுகிறார்கள். ஒருவர்மேல் ஒருவர் குழாய் மூலம் தண்ணீரை இறைத்துக்கொள்வார்கள். குடங் குடமாய் மேலே தண்ணீரை ஊற்றிக்கொள்வார்கள். கிராமங்களிலும் பட்டணங்களிலும் வேடிக்கைகள், போட்டிச் சண்டைகள் வைப்பார்கள். தலையில் கரகத்தில் நீர் சுமந்துகொண்டு கோயிலில் அபிஷேகம் செய்வதுடன் உற்சவம் முடிவடையும். ஜனங்களுக்கு இந்த உற்சவங்களில் உள்ள நம்பிக்கையும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளும் எப்படி இருந்தாலும், இதுவரையில் நடந்த ஜலோத்ஸவத்தின் போது மழை பெய்தது மட்டும் உண்மை. திபேத்திலும் நேபாளத்திலும் வேறு விதமாக மழை உற்சவம் கொண்டாடுகிறார்கள்.

வேறு நாடுகளில்: ஈராக்கில் கன்னிப் பெண் தன்னை அலங்கரித்துக்கொண்டு வீடு வீடாகப் போய் நாட்டியம் ஆடுவாள். முன்காலத்தில் ரோம் தேசத்தில் மழை பெய்யாவிட்டால் மதகுருக்கள் சக்தி வாய்ந்த ஒரு தெய்வ விக்கிரகத்தை நடுத் தெருவில் உருட்டுவார்களாம். பிரான்ஸில் ஸெயிண்ட் பீட்டர் விக்கிரகத்தை நதிக்கரையில் பிரதிஷ்டை செய்து, அங்கேயே மழைக்காக ஜபம் செய்வார்கள்.

வாழ்வும் உபதேசமும்

நல்லவனாய் வாழ்வது பெருமை. நல்லவனாய் வாழப் பிறனுக்குப் போதிப்பது அதைவிடப் பெருமை. சிரமமும் குறைச்சல்.

—மார்க் ட்வேன்

சர்க்கார் நுட்பம்

ஆட்டு மந்தையாக இருக்கும் சமூகம், காலக்கிரமத்தில் ஓநாய்களின் சர்க்காரை அடைந்தே தீரும்.

—பெர்ட்டிராண்ட் டி ஜூவெனெல், 'லிஸ்னர்.'

பிழையைத் திருத்துங்கள்

கீழே உள்ள ஒவ்வொரு பகுதியிலும் எழுத்து, சொல், பொருள், வாக்கியப் பிழை ஏதாவது ஒன்று இருக்கும். அதைக் கண்டு பிடித்துத் திருத்துங்கள்.

1. அரசியலில் நேர்மையுடன் நடந்துகொள்வது அவரவர் களுடைய உறுதியைப் பொருத்த விஷயம்.

2. தியாகிகளாகவும் தன்னலம் சிறிதும் இல்லாதவர்களாகவும் இருந்தவர்கள் கூடப் பதவியாசை யினால் கவற்சி பெற்றுக் குணம் மாறிவிடுகிறார்கள்.

3. மனோதத்துவம் அறிந்தவர் கள், இத்தகைய குணம் அவர்க ளுடைய உள்ளத்தின் அடித்தளத் தில் முன்பே இருப்பது என்று சொல்லுவார்கள்.

4. காந்தியடிகளின் உபதேசத் தின்படி நடக்க, செயலாற்ற, பிற ருக்குச் சொல்ல, பிறர் நடப்பதைப் பார்த்துக் களிக்கவும், திருப்தி யடையவும் பயின்றவர்களே இப் படி ஆனால் மற்றவர்களைப்பற்றி என்ன சொல்வது?

5. சித்திரம் வரையும் சைத்திரி கன் எல்லாவற்றையும் மறந்து அதில் ஈடுபடுவது போலப் பொது நலத் தொண்டில் முன்காலத்தில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும், இன்று மாறிவிடுகிறார்கள்.

6. ராமாயணம் பாடிய கம்பர் கம்பநாட்டாழ்வார் என்று ஆழ் வாருள் ஒருவராக ஆகிவிட்டதற்குக் காரணம், செயற்கரிய காரியத்தைச் செய்தமையாலேதான்.

7. ஜப்பானிலிருந்து சீனாவுக்கு ரெயில் போட வேண்டுமென்றால் இரண்டு தேசங்களும் ஒத்துப் போக வேண்டும்.

8. சிதம்பரம் என்ற சிறந்த தலத் தின் பெயர் தமிழில் சிற்றம்பல மென்று மாறி வழங்குகிறது.

9. முருகன் குறிஞ்சிநிலக் கடவுள் ஆகையால் மலைவளஞ் செறிந்த சுவாமிமலை, திருப்பரங் குன்றம் முதலிய தலங்களில் வீற் றிருந்து அன்பர்களுக்கு அருள் வழங்கிவருகிறான்.

10. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்ற பெரிய ஞானவிளக்கில் ஏற் றிய சிறந்த தீபங்களாகிய விவேகா னந்தர், ராமதீர்த்தர் முதலிய பெரி யோர்களுடைய அரிய உபதேசங் கள் மக்களுடைய உள்ளத்துக்கு அமைதியைத் தரும் வகையில் அமைந்திருக்கின்றன.

11. சூளாமணி என்னும் தமிழ் நூலில் புத்த தர்மத்தின் உயர் வும் சிறப்பும் சொல்லப்பட் டிருக்கின்றன.

12. குறள் வெண்பாவினால் அமைந்த நூல் வேறு ஒன்றும் இல்லையாதலின் திருவள்ளுவர் குறள் வெண்பாக்களால் இயற்றிய நூலுக்குத் திருக்குறள் என்றே பெயர் வழங்கலாயிற்று.

(70-ஆம் பக்கத்திலுள்ள திருத்தத்தைப் பார்க்க.)

பேய் உண்டு

பாட்ரிக் மர்ரே

இது கதை அல்ல. கட்டுரையாளர் சிறந்த கல்விமான். படித்த மற்றவர்களைப்போல் இவரும் சந்தேகம் நிறைந்தவர். ஆனாலும் உண்மையிலே பேயைக் கண்ட அபூர்வ மனிதர்களில் ஒருவர். பேய் உண்டு என்பதற்கு ஸயின்ஸ் ரீதியான சித்தாந்தங்களை இவர் சொல்லுகிறார்.

என் வீட்டிலே 'கொலை' என்று ஒரு விளையாட்டு ஆடுவது வழக்கம். ஒரு சமயம் பேய் தோன்றியதால், அந்த விளையாட்டையே நாங்கள் நிறுத்திவிட வேண்டியதாயிற்று.

'கொலை' விளையாட்டை இருட்டிலே ஆடவேண்டும். துப்பறிபவன் யார் என்று மட்டும் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கும். சீட்டுக் குலுக்கிப் போடுவோம். அது யாருக்கு விழுகிறதோ அவன்தான் கொலைகாரன். தன்னை யாரும் அறிந்துகொள்ள முடியாதபடி, குற்றத்தை அவன் புரிவான். அடிபட்டவன் கூச்சல் போடுவான். அதன்மேல் கேள்வி கேட்டு விசாரிப்பதன்மூலம் குற்றவாளியைத் துப்பறிபவன் கண்டுபிடிப்பான்.

அன்றிரவு துப்பறிந்தவர்கள் அத்தனை பேரும் தோற்றுப் போனார்கள். எவரும் குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்ளவேயில்லை. என்றாலும், துப்பறியும் முறை எனக்கு வந்தபோது, சகலமும் விளங்கிவிட்டது. ஒருத்தியை நோக்கிக் கொலையாளி பதுங்கிப் பதுங்கி நடந்ததையும், அவள் மென்னியைப் பிடித்து அழுத்தியதையும் நான் கண்டேன். அந்தப் பெண் கூச்சலிட்டாள். உடனே கொலையாளி மாடிப்படியை நோக்கி இருளிலே அலங்கோலமாய் ஓடினான். அப்போது படிக்கட்டில் ஜோடி ஜோடியாய்ப் பலர் நெரித்துக்கொண்டு நின்றார்கள். அதனால், 'விளக்கைப் போடவேண்டியதுதான்; கொலையாளியைப் பிடித்துவிடலாம்' என்று எண்ணினேன்.

அப்படியே போட்டேன். ஆனால், அங்கே யாரும் இல்லை; அங்கென்ன, எங்குமே யாரையும் அதன்பிறகு நான் காண முடியவில்லை.

வீடுகளிலும் மற்ற இடங்களிலும் பிசாசுகள் இருப்பதுண்டு என்று இப்போது எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். மிகச் சில சந்தேகப் பிரகிருதிகள்தான் ஒப்புக்கொள்ளாமல் பிடிவாதம் செய்கிறார்கள். பிசாசு உண்டு என்பதற்குச் சிறிதும் சந்தேகிக்க முடியாத பலத்த சாட்சியம் இருக்கிறது. ஆனால், பிசாசு தோன்றும்போது என்ன நிகழ்கிறது? நம் புலன்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அதை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்: ஒன்று, காட்சி; மற்றது நம் நரம்புகளிலே உண்டாகும் உணர்ச்சி. உணர்ச்சி பெரும்பாலும் ஏதோ வேதனையாய்த்தான் இருக்கும்; சில சமயம் இன்பமாகவும் இருக்கும். இந்தக் காட்சி, உணர்ச்சி இரண்டுக்கும் மூல காரணம் ஒன்

காப்பிரைட்: ஸ்டிராண்டு (ஆங்கிலம்: டிசம்பர் '48), லண்டன்.

ருகவே இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால், இரண்டும் எப்போதும் சேர்ந்து ஏற்படும் என்ற நிச்சயமில்லை.

அபௌதிகமான ஏதோ ஒரு சக்தி நம் கண்ணைத் தாக்குவதாலேயே பேயின் காட்சி நமக்கு ஏற்படுகிறது என்பது தற்கால ஆராய்ச்சியாளரின் அபிப்பிராயம். கண்ணிலே பேய் தென்படுவது உண்மையான அநுபவம். கண் நரம்புகள் அதை நம் மூளைக்குத் தெரிவிக்கின்றன. ஆனால், பேயின் போட்டோப் படங்கள் எடுத்திருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்களே; அதற்குச் சரியான காரணம் இல்லை. பேயின் பிம்பம், பௌதிக இயல்புள்ள நம் கண்ணிலே விழுமானால், போட்டோ பிளேட்டின் மருந்துப் பூச்சிலும் ஏன் விழ முடியாது என்று அவர்கள் கேட்கலாம். ஆனால், நிபுணர்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. போட்டோ எடுக்கும் கருவியே பல தந்திரங்களைச் செய்யக்கூடும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.



பேய் இப்படி நம் நரம்புகளைத் தாக்குவதன் காரணம் என்ன? பேய் பிடித்ததாக இன்று நாம் மதிக்கும் ஓர் இடத்தில், ஏதோ ஒரு பலமான உணர்ச்சி வேரூன்றியிருப்பதே காரணம் என்று நினைக்கிறார்கள்.

ஆனால், பேய் ஏன் தோன்றுகிறது? அதுதான் இதுவரைக்கும் தெரியவேயில்லை. என்றோ வாழ்ந்த யாரோ ஒரு மனிதனின் மனம் முழுவதுமோ அல்லது அதன் ஓர் அம்சமோதான் பேயாக மிஞ்சியிருக்கிறது என்று நினைக்கிறார்கள். ஆனால், மனிதனின் மனத்துக்குள்ள இயல்புகள் இன்னும் நமக்குப் பூர்ணமாய் விளங்கவில்லை. செத்த ஒரு மனிதன் தன் மனத்தை எப்படி ஓர் இடத்தில் பலமாய்ப் பதிய வைக்க முடிகிறது? அது எப்படி அந்த இடத்திலிருந்து நிரந்தரமாய்ப் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது? 'உயிரோடு வாழும் மனிதனின் மனம் ஏதோ கிரணங்களை வீசிக்கொண்டிருக்கிறது. அவைகளைச் சுவர்களோ தட்டு முட்டுச் சாமான்களோ உறிஞ்சி விடுகின்றன. அவன் இறந்த பின் அந்தக் கிரணங்களை அவைகள் திரும்பத் திரும்ப உமிழ்ந்துகொண்டிருக்கின்றன.' - இப்படி ஒரு கொள்கை முன்னே இருந்து வந்தது. ஆனால், இதை இப்போது கைவிட்டுவிட்டார்கள். டெலிபதி என்ற மானஸத் தந்தியைப்பற்றி ஏற்கனவே இருந்து வந்த கொள்கையை எந்தக் காரணத்தால் கைவிட்டார்களோ அதே காரணத்தால்தான் இதையும் கைவிட்டார்கள்.

மானஸத்தந்தியை அனுப்புகிற மனம் ஒரு ரேடியோ ட்ரான்ஸ்மிட்டர் மாதிரி எண்ண அலைகளை வெளியே வீசுகிறதென்றும், அந்த அலைகளை ரேடியோ ரெஸீவர் மாதிரி மற்றொரு மனம் பெற்றுக்கொள்கிறது என்றும் முன்னே எண்ணிவந்தார்கள். ஆனால் எந்த அலைகளும் அதிக தூரம் செல்லச் செல்ல மலினம் அடைவது இயற்கை. மானஸத்தந்தியோ தூரத்தில் இப்படித் தளியும் பாதகம் அடையவில்லை. எனவே, இந்த

விதிக்குப் புறம்பான புதுமாதிரியான அலைகளை வீசும் சக்தி மனத்துக்கு இருந்தாலொழிய, இது சாத்தியம் அல்ல.

பேய்க்கு உணர்ச்சி உண்டா? இது நமக்குத் தெரியாது. பூமியை விட்டுச் செல்லாமல் சுற்றிக்கொண்டிருக்கும் ஆவிதான் பேய். ஆகவே, அது முழு மனிதன் அல்ல; மனிதனின் ஓர் அம்சமே. இந்தக் கொள்கையின்படி, ஒவ்வொரு மனிதன் சாகும்போதும், மானஸ அம்சம் ஏதோ ஒன்று மிஞ்சிவிடுகிறது. அது அவனுடைய உணர்ச்சியாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. சங்கீதம், கலை, இலக்கியம் முதலியவற்றில் அவனுக்கிருந்த ஒரு திறமையாகவும் இருக்கலாம்; பந்தாட்டம் முதலிய விளையாட்டுக்களில் உள்ள ஆசையாகக்கூட இருக்கலாம். இவை யெல்லாம் பேயாக உலவிவிடுகின்றன.

மற்றொரு விசித்திரமான பேய் உண்டு. அது முற்றும் மனிதனின் கண்ணுக்குள்ளே இருந்து தோன்றும் மயக்கமே. என்றாலும், அதைக் கண்டு அநேகம் வீடுகளையே மனிதர்கள் காலி செய்துவிட்டார்கள்; இன்னும் காலி செய்துகொண்டும் வருகிறார்கள். வைத்தியக் கலையில் அதற்குப் 'பர்க்கின்ஜே ஸ்பெக்டர்' என்று பெயர் வழங்குகிறது. அந்தப் பேயைக் கிளப்பிவிட எந்த மந்திரமோ மாயமோ வேண்டியதில்லை. மெழுகுவர்த்திபோன்ற மங்கலான ஒரு தீபத்தை நமது மோவாய்க்கு நேரே பிடித்துக் கொள்ள வேண்டியது. பிறகு அறையிலே நிழல் விழுந்தோ இருண்டோ இருக்கும் ஓர் இடத்தைப் பார்க்க வேண்டியது. அப்போது நம் கண்ணுக்குத் தோன்றும் காட்சி நாம் அரண்டு கதி கலங்கிப் போகும்படி இருக்கும். இதை யார் வேண்டுமானாலும் செய்து பார்க்கலாம். நம் கண்ணுக்குப் பின்னே சில சிறு ரத்தக்குழாய்கள் இருக்கின்றன. அவைகளின் நிழல்தான் இந்தப் பயங்கரக் காட்சி தோன்றுவதற்குக் காரணம். ஆனால், தீபத்தை ஒரு குறிப்பிட்ட நிலையில் பிடித்தால்தான் இது தோன்றும்.

பேய் தோன்றுவதற்கு இன்னும் ஒரு காரணமும் சொல்லுகிறார்கள். 'ஒரு காலமும் மற்றொரு காலமும் எப்படியோ குழம்பிக் கலந்து போவதுதான் அது' என்கிறார்கள். இதனால் வேறு காலத்தைச் சேர்ந்தவர்கள் நம் கண்ணுக்குப் புலப்படுகிறார்களே யொழிய, இறந்தவர்களின் ஆவியல்ல. இந்த நிகழ்ச்சியில் நமக்கு மறு காலத்தவர் பேயாகத் தோன்றுகிறார்கள்; அவர்களுக்கு நாம் பேயாகத் தோன்றுகிறோம். இப்படிக் காலங்கள் கலந்து தோன்றும்போது, மகத்தான காட்சிகள் நமக்குத் தென்படுகின்றன. படைகளும் கப்பல்களும் நம் கண்ணுக்கு முன்னே இயங்குகின்றன; மின்னலைப்போலத் திடீரென்று யுத்தங்களையும் உல்லாச நடனங்களையும் நாம் காண்கிறோம்.

மோபெர்லி, ஜூர்டேன் என்ற இரண்டு இளம் பெண்கள், இந்த மாதிரி ஒரு காட்சிபற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அதன் உண்மையைச் சந்தேகிக்க முடியாது. ஆனால், காரணத்தை யாரும் விளக்க முடியவில்லை. 1901-ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் இவர்கள்

ட்ரையனோன் தோட்டத்துக்கு உலாத்தச் சென்றார்கள். தோட்டத்துக்குள்ளே சற்று நேரம் நடந்துகொண்டிருந்தபோது, இவர்கள் திடீரென்று இந்த நூற்றாண்டிலிருந்து 1789-ஆம் ஆண்டில் போய் விழுந்து விட்டார்கள். இவர்களுக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால், இவர்கள் மாதிரியில்லாமல் வேறு விதமாய் உடை அணிந்த பல ஜனங்களைக் கண்டார்கள். அவர்களோடு இவர்கள் பேசவும் பேசினார்கள். இவர்களுக்கு வேடிக்கையாய் இருந்தது. இவர்களைக் கண்டு அவர்களுக்கும் வேடிக்கையாயிருந்ததாகவே தோன்றியது. என்றாலும் இவர்களுக்கு என்னவோ ஒரு மனச்சோர்வும், எல்லாம் பொய் என்ற ஓர் உணர்ச்சியும் தோன்றின. ஜூர்டேன் என்பவள், தான் மட்டும் தனியே இரண்டாவது முறை அந்தத் தோட்டத்துக்குள் போனபோதும் அவளுக்கு இதே மாதிரி அநுபவம் ஏற்பட்டது.

ஒரு காலத்தில் நடந்ததெல்லாம் அப்படியே நிரந்தரமாய் இருந்து வருகின்றன; ஆனால், அந்தக் காலம் நம்மிடமிருந்து வெகு தூரம் அப்பால் போயிருக்கிறது. சில ஜனங்களுக்கு நிகழ்காலத்தில் உள்ள பற்றுதலை அடக்கும் சக்தி இருக்கிறது. இதனால் அவர்கள் 'ஞான திருஷ்டி' பெற்று, எதிர்காலத்துக்குச் சென்றுவிடுகிறார்கள். ஆனால், எவரும் தங்கள் இஷ்டப்படி இறந்த காலத்துக்குச் செல்ல முடியும் என்பதற்கு ஏதும் ருசு இல்லை.

ஒரே ஒருவகைப் பேய்க்குத்தான் சாட்சியமே இல்லை. பயங்கரக் கற்பனைக் கதைகளில் ஏதோ எலும்புக் கூடெல்லாம் வந்து தோன்றுவதாக எழுதகிறார்களே, அது முழுப் பொய்.

போல்டெர்ஜைஸ்ட் என்ற குட்டிச் சாத்தான்களை, உண்மையில் பேய் என்று சொல்ல முடியாது. இவை பேய்களைவிட மோசம். நம்மைப் போலவே குட்டிச்சாத்தான்களும் உண்மையான ஜீவன்கள் என்று இப்போது எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். விஷமம், குறும்பு, கூச்சல், நாசவேலை, சில்லறைத் தமாஷ் இந்தக் குணங்களெல்லாம் குட்டிச் சாத்தான்களுக்கு நிறைய உண்டு. நம்ப முடியாத வேலையெல்லாம் இவை செய்கின்றன. தட்டுக்களை உடைக்கின்றன; நாம் படுத்திருக்கும்போதே நம் படுக்கையைச் சுருட்டுகின்றன. வீடுகளைக் கொளுத்திவிடுகின்றன.

1863-ஆம் ஆண்டில் கட்டிய போர்லி ரெக்டரி என்ற ஒரு கட்டிடம் உண்டு. அதைக் கட்டி முதல் முதலில் குடி புகுந்த மனிதன், 'நான் செத்த பிறகும் இங்கே திரும்பி வருவேன்' என்று சொன்னான். அப்படியே அவன் மரணத்துக்குப் பின் தலையில்லாத முண்டமாக வந்து தோன்றினான். அவனைத் தவிர, கன்னிமாடப் பெண் ஒருத்தி, குதிரை கட்டிய ஒரு கோச்சு வண்டி இந்த உருவங்களும் தென்பட்டன. சந்தடியும் நாற்றமும் வீட்டிலே நிறைந்தன. சாமான்களெல்லாம் உடைந்தன. ஆள்மேல் மிளகுத்திரள் வந்து விழும். கட்டிடத்தில் குடிவந்தவர்களெல்லாம் இந்த உபத்

திரவம் தாங்காமல் பல முறை காலி செய்தார்கள். கடைசியாக 1940-ஆம் ஆண்டில் அதில் தங்கிய பிரிட்டிஷ் ராணுவப் படை ஒன்றே அதைக் காலி செய்துவிட்டு வெளியேறியது. இப்போது கட்டிடம் பாழாய்க் கிடக்கிறது.

குட்டிச் சாத்தான்கள் பெரும்பாலும் பாழும் வீடுகளிலோ பெரும் பகுதி பாழாய்க் கிடக்கும் வீடுகளிலோதான் குடி புகுந்துவிடுகின்றன. குழந்தைகள் நிறைந்த இடங்களிலும் அவை புகுந்துவிடும். குழந்தைகளின் ஜீவசக்தியே இப்படிக் குட்டிச் சாத்தானாய்ப் பரிணமிக்கிறது என்றும் ஒரு கொள்கை உண்டு. சிறுவர்கள் நல்ல வாலிபப் பருவத்தை அடையும்போதுதான் குட்டிச் சாத்தானின் சேஷ்டைகள் அதிகரிக்கின்றன என்று ஆராய்ச்சியால் தெரிகிறது. வாலிபர்கள் மேலும் வளர்ந்துவிடும்போது, அவை நின்றுவிடுகின்றன.

பேய்களைக் கண்டால் சாதாரண மிருகங்கள் கூடப் பயப்படுகின்றன. குதிரைகளுக்கும் நாய்களுக்கும் பேயிடம் வெகு பயம். ஒரு சமயம் இரண்டு நாய்கள் ஒரு ஸோபாவின் கீழே இப்படி நடுநடுங்கிக் கிடந்ததை நான் கண்டிருக்கிறேன். குட்டிச்சாத்தான்களுடன் நாய்கள் சண்டையிடுவதுண்டு. ஆனால், முடிவில் தோற்றுப்போகும். போர்லி கட்டிடத்தில் இருந்த நாய்கள் ஒரு முறை வெளியே ஓட்டம் பிடித்தன; பிறகு திரும்பி வரவேயில்லை.

பேய் எப்போதும் இருட்டிலேதான் தோன்றும் என்பதில்லை. ஒரு டாக்ஸி காரிலிருந்து இறங்கிய பேயை நான் பட்டப் பகலில் கண்டேன். பேய் தோன்ற வேளையில்லை; ஒரு நிச்சயமும் இல்லை. எவரை வேண்டுமானாலும் பேய் ஏமாற்றும். சொல்லப் போனால், நீங்களே ஒரு பேயாக இருக்கலாம்.

வயதை மிஞ்சிய அநுபவம்

வேலை தேடி வந்த ஒரு தொழிலாளியை, “உனக்கு இந்தத் தொழிலில் எத்தனை வருஷ அநுபவம்?” என்று மானேஜர் கேட்டார்.

“நாற்பத்தைந்து வருஷ அநுபவம்.”

“உனக்கு வயது என்ன?”

“முப்பது.”

“அப்படியானால் எப்படி அத்தனை வருஷ அநுபவம் இருக்க முடியும்?”

“நான் ‘ஓவர்டைம்’ செய்த வேலையையும் சேர்த்துச் சொல்கிறேன்.”

குடித்தன நிர்வாகம் ஒழுங்காக நடக்க என்ன வழி? இதோ ஒரு பெண் தன் சொந்த அநுபவத்தைச் சொல்லுகிறுள்.

மனைவிக்கு மாதச் சம்பளம்

ஆலிஸ் பிராட்போர்டு

என் கணவரிடமிருந்து பிரதி மாதமும் நான் சம்பளம் பெற்றுக்கொள்ளுகிறேன். அதைப் பற்றி அவருக்கு வெகு சந்தோஷம். ஏனென்ருல், ஒன்றுக்கும் அவரிடம் நான் போவதில்லை; பணமோ துணி மணியோ ஒன்றும் அவரைக் கேட்பதில்லை. எங்கள் குழந்தைகளும் அப்படித்தான். அவர்களுக்கும் எங்களுக்குமோ, கணவருக்கும் எனக்குமோ பணம் சம்பந்தமாக ஒருபோதும் சச்சரவு ஏற்படுவதில்லை. நாங்கள் எல்லாருமே தனித் தனியாய்ப் பணம் சேர்த்து வைத்திருக்கிறோம். பணத்தை எப்படிச் செலவு செய்வது என்பதைப்பற்றிக் குழந்தைகள் பயின்று வருகிறுர்கள்.

சில வருஷங்களுக்கு முன், "ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் தொகையைச் சம்பளமாகவே என்னிடம் கொடுத்துவிடுங்கள்" என்று என் கணவரிடம் சொன்னேன். அவர் கேலி செய்து சிரித்துவிட்டார். ஏனென்ருல், அவர் சம்பளமே சொற்பம். ஒரு கைப்பாடாக வீட்டுச் செலவு நடந்துகொண் டிருக்கும்போதே பணம் போதவில்லை. இருவரும் தனித் தனியே செலவழிப்பதென்ருல்? என்ருலும் வெகு வருஷங்களாக ஒருவரே செலவழித்துக் கொண் டிருந்தும் குடித்தனம் ஒழுங்காக நடந்து வந்ததாய்த் தோன்றவில்லை. எனக்கோ குழந்தைகளுக்கோ வீட்டுக்கோ ஏதாவது வாங்க வேண்டும் என்ருல் அப்போதுதான் இன்ஷுரன்ஸுக்குப் பணம் கட்ட வேண்டியிருக்கும்; அல்லது வேறு ஏதாவது வரி கொடுக்க வேண்டிய சமயம் நெருங்கிவிடும். மாதத் தொடக்கத்தில் எப்போதும் செலவு அதிகம். ஒருவரையும் குற்றம் கூற முடியாது. ஆனுலும் பணப் பையைப் பார்க்கும்போது மனம் ஒரு மாதிரியாய்த்தான் இருக்கும்.

கடைசியாக என் கணவர் நான் சொன்ன ஏற்பாட்டுக்கு இசைந்தார். அவர் மாதம் மாதம் சம்பளமாக எனக்குக் கொடுக்கும் பணத்தில் அநேகமாய் வீட்டுக்கு வேண்டிய செலவு எல்லாம் செய்துவிடுவேன். எனக்குக் கொடுத்தது போக மிச்சம் இருக்கும் பணத்தைக் கொண்டு மோட்டார், இன்ஷுரன்ஸ் முதலிய செலவுகளை அவர் கவனித்துக்கொள்வார். செலவு போக மிச்சம் இருந்தது அவரவர்களுக்குத்தான் சொந்தம். அதைக் கொண்டு அவர்கள் என்ன வேண்டுமானுலும் செய்துகொள்ளலாம்; ஒருவரும் கேட்க முடியாது. இந்த முறையில் குடித்தனம் மிகவும் நன்ருய் நடக்கும் என்று எனக்கு உறுதியாய்ப் பட்டது.

காப்பிரைட் : பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம் : மே '49), நியூ யார்க், யு. எஸ். ஏ.

இந்த ஏற்பாட்டின்படி ஐந்து வருஷம் நடந்த பிறகு மீண்டும் பழைய முறைக்குத் திரும்பும் உத்தேசம் எங்களுக்குக் கொஞ்சமும் கிடையாது. எந்த 'பில்'லுக்கு யார் பணம் கொடுக்க வேண்டும் என்று எங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும். அதன்படி நாங்கள் கொடுத்துவிடுவோம். கடையில் கடனுக்குச் சாமான்கள் வாங்கும் வழக்கம் எங்களிடம் அதிகம் இல்லை. என் கணவரிடமிருந்து மாதச் சம்பளம் வாங்கிக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்ட பிறகு மளிகைக் கடைச் சாமான்களுக்குக் கையிலேயே பணம் கொடுத்து வாங்கி வருவதென்று தீர்மானித்தேன். இதனால் செலவு குறைந்து பணம் கொஞ்சம் மிச்சப்பட்டது.

எங்கள் குடித்தனச் செலவு ஒன்றும் பிரமாதம் இல்லை. இருந்தாலும், நாங்கள் ஒரு புத்தகத்தில் வரவு செலவுக் கணக்கை அழகாய் எழுதிவைப்போம். புத்தகத்தின் ஒரு பக்கத்தில் என் கணவர் தம் செலவுகளை எழுதுவார். நான் மற்றொரு பக்கத்தில் என் செலவுகளை எழுதிவிடுவேன். ஒவ்வொரு சமயம் எதிர்பாராத விதமாய்ப் பெரிய செலவுகள் நேர்ந்துவிட்டாலும், தர்ம காரியங்களுக்குத் தனித் தனியே நாங்கள் ஏதாவது கொடுத்து உதவி வருகிறோம். இதுமட்டும் அல்ல. நண்பர்களுக்கோ, உறவினர்களுக்கோ ஏதாவது பரிசு கொடுப்பதாயிருந்தாலும் எங்களால் முடியாமல் போவதில்லை. மொத்தத்தில் செட்டும் கட்டுமாய் மேலும் மேலும் சாமான்களை வாங்காமல் பழைய சாமான்களையே ஜாக்கிரதையாய் வைத்து உபயோகிக்கும் திறமை எங்கள் எல்லாருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாடு குழந்தைகள் விஷயத்தில் ஒரு பெரிய நன்மையைச் செய்திருக்கிறது. மாதம் மாதம் துணிமணிக்கு என்றும் இதரச் செலவுகளுக்கு என்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் கொஞ்சம் பணம் கொடுத்துவிடுவேன். "எங்களுக்கு இந்தப் புடைவை வேண்டும்; அந்த ரவிக்கை வேண்டும்" என்று என் பெண்கள் என்னைக் கேட்பதே இல்லை. "எங்களிடம் பணம் இருக்கிறது" என்றோ, "இப்போதெல்லாம் துணிகளின் விலை மிக அதிகமாக இருக்கிறது; பிறகு பார்த்து வாங்கிக்கொள்ளலாம்" என்றோ சொல்லிவிடுவார்கள். அவர்கள் இளஞ் சிறுமிகளாயிருந்தாலும் சமையல் செய்யக் கற்றுக்கொள்வது போல் தைக்கக் கற்றுக்கொள்வதும் அவசியம் என்று உணர்ந்திருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன் என் சிநேகிதி ஒருத்தி, "வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கவேண்டும் என்று இப்போதெல்லாம் உனக்குத் தோன்றுவதில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை. வீட்டில்தான் ஒரு நிமிஷ நேரங்கூட ஒழிவில்லாமல் சரியாயிருக்கிறதே. வேலைக்கு எங்கே வெளியே போவது? தவிர, வேலைக்குப் போனால் கிடைக்கும் அதே சம்பளம், இங்கே என் கணவரிடமிருந்தே எனக்குக் கிடைத்துவிடுகிறது" என்றேன்.

இந்தப் பதிலை அவளால் நம்ப முடியவில்லை. "அதெல்லாம் சரிதான். இருந்தாலும் நீ அந்தப் பணத்தைக் குடும்பத்துக்கும் வீட்டுக்குந்தானே செலவழிக்கிறாய்?" என்றாள்.

"வாஸ்தவந்தான். வேலைக்குப் போய்ச் சம்பாதித்தாலும் அந்தப் பணத்தையும் இப்படித்தான் செலவழிப்பேன்" என்று சொன்னேன்.

வீட்டுக் குடித்தனம் மட்டும் என்ன; சாதாரண விஷயமா? அதற்கென்று நான் மாதம் மாதம் வாங்கும் சம்பளம், வெளியே போய் உத்தியோகம் செய்வதைப் போன்ற உணர்ச்சியையே எனக்கு அளிக்கிறது. என் குடும்பத்தில் ஒருவரும் ஏழை உறவினரைப் போலப் பணத்துக்காக என் கணவரிடம் கை நீட்டிக்கொண்டு நிற்பதில்லை. வீட்டுச் செலவு, பில்கள் ஒன்றைப்பற்றியும் அவர் கவலை கொள்ளுவதில்லை. அவருக்குச் சம்பளம் உயர்ந்தால் உடனே அவர் என் சம்பளத்தையும் உயர்த்தி விடுவார். அட்படியே நானும் குழந்தைகளுக்குக் கொடுப்பதை அதிகரித்துவிடுவேன். இதனால் எல்லாருக்கும் மனத் திருப்தியும் அன்பும் அதிகரிக்கின்றன.

வழி காட்டினர்!

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் மிஸ்டர் கூலிஜ். அவர் ஒரு சமயம் நண்பர்கள் சிலரைத் தம் மாளிகையில் நடக்கும் விருந்துக்கு அழைத்திருந்தார். விருந்தின்போது எப்படி நடந்துகொள்வது என்று அவர்களுக்கு முதலில் புரியவில்லை. பிறகு, "கூலிஜ் என்ன செய்கிறாரோ அதே மாதிரி நாமும் செய்வது" என்று அவர்கள் தீர்மானித்தார்கள். காபி வழங்குகிற வரையில் எல்லாம் வழக்கப்படிதான் நடந்தது. பிறகு கூலிஜ் காபியைத் தட்டில் ஊற்றினர். விருந்துக்கு வந்த நண்பர்களும் அப்படியே செய்தார்கள். அதில் கொஞ்சம் சர்க்கரை சேர்த்தார் கூலிஜ். விருந்தாளிகளும் சர்க்கரை சேர்த்தார்கள். கடைசியில் கூலிஜ் குனிந்து அந்தத் தட்டை மேஜையின் கீழே காத்திருந்த தம் பூனைக்கு வைத்தார்!

—ஹென்ரி சார்லஸ் ஸுட்டர்.

வேர்க்கடலையின் உபயோகம்

வேர்க்கடலையில் மேல் ஓட்டைத் தவிர மற்ற எல்லாம் உபயோகமாகின்றன. முக க்ரீம், பால், வாஷிங் பவுடர், மசி, கதம்ப ஊறுகாய், பாலேடு, ரப்பர், இளவயதில் பாரிச வாயுவைப் போக்கும் தைலம் - இப்படிப் பல பொருள்களில் 300 விதங்களில் அவை பயன்படுகின்றன. இதைக் கண்டு பிடித்தவர் ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் என்ற பிரபல விஞ்ஞானி. புஸ்தகம் பைண்டு செய்பவர்களும் பிளைவுட் சாமான் தயாரிப்பவர்களும் வேர்க்கடலைப் பிசின் உபயோகிப்பது வழக்கம். இது நன்றாகப் பிடித்துக்கொள்ளுமாம்.

—'நியூ யார்க் டைம்ஸ் மகஸின்'

முட்டாள்களின் நடுவில் ஒரு புத்திசாலி இருப்பது, குருடர்களின் நடுவே ஓர் அழகிய யுவதி இருப்பதுபோல.

* * *

கேட்பதைவிடப் பேசுவதே லாபகரம் என்ற நிலைமை ஏற்படும்போது உன் நண்பனை மாற்றிக்கொள்.

உலகம் வியக்கும் ரேகை சாஸ்திரி

கவுண்டஸ் மேனா ஹாமன்

இரண்டு மகா யுத்தங்களையும் முன்கூட்டியே ஜோஸ்யம் சொன்னவர் சீரோ. ஹிமாலய மலையில் உள்ள ஒரு மகான்தான் அவருடைய குருவாம். அவர் மனைவியே அதை இங்கே விவரிக்கிறார்.

என் புருஷர் மிகவும் அதிசயமான பிரகிருதி. கடைசி நாளில் கலிபோர்னியாவில் அவர் நோயுற்றுக் கிடந்த காட்சி எனக்கு இன்னும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. சாவு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அவருக்கே தெரியும்; அதற்குத் தயாராகவும் இருந்தார். இன்ன மணி நேரம் உயிர் போகும் என்றுகூட முன்னாலேயே எனக்குத் தெரிவித்து விட்டார் என்றால் பாருங்களேன்.

"மேனா, என் இப்படித் திகில்படுகிறாய்! எல்லாருமே ஒரு நாள் சாக வேண்டியதுதானே? பிறக்கும்போது பின்னால் என்ன நேரும் என்று நமக்குத் தெரிகிறதா? சாகிறபோதும் அப்படித்தான்" என்று அப்போதெல்லாம் எனக்கு ஆறுதல் சொல்லுவார்.

அவர் பிழைத்தெழுந்திருப்பார் என்று எனக்கு ஒரு நம்பிக்கை உண்டு. ஆனால் அவர்மட்டும் நிச்சயமாக, "அதெல்லாம் இல்லை. இன்று சாயங்காலத்தோடு சரி; நாளைக்கு நான் எங்கே இருக்கப் போகிறேன்? - என்னைச் சற்று நிமிர்த்தி உட்கார வை. சூரியன் அஸ்தமிக்கும் காட்சியை ஒரு தரம் பார்த்துவிடுகிறேன்; நீயும் இரு" என்றார்.

அவர் சற்றுப் பருமன். முதுகில் தலையணையை அண்டை கொடுத்து மெதுவாக அவரை உட்கார வைத்தேன். இரண்டு பேருமாகச் சூரியன் மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு அவர், "ஹூம்... இனிமேல் நான் அதை எங்கே பார்க்கப் போகிறேன்!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

'அவர் ஜோசியம் பலிக்காமல் இருக்கவேண்டுமே' என்றுதான் உள்ளூற வேண்டிக்கொண்டேன். ஆனால் கடைசியில் அதுதான் பலித்தது. அவர் சொன்னபடியே

மூலம்: பம்பாய் கிரானிக்கிள் (ஆங்கிலம்: 3-7-'49), பம்பாய்.

அதே நேரத்தில் அவர் உயிர் போயிற்று.

அதற்குச் சற்றுமுன் இந்தியா வைப்பற்றிய நினைவாகவே இருந்தார். அங்கே போய்வந்த அநுபவத்தையெல்லாம் சொன்னார். "பின்னால் என்ன என்ன நடக்கும்? நாம் ஏன் இந்த உலகத்தில் வந்தோம்? நம் கடமை என்ன? இப்படி நம் அறிவுக்கு எட்டாத பல ரகசியங்களை இந்தியாவிடமிருந்துதான் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மேலு, அங்கே இருந்த யோகிகளிடம் இந்தமாதிரி சில அற்புதங்களைக் கற்றுக்கொண்டு வந்தேன். மறுபடியும் அங்கே போய் என்ன என்னவெல்லாமோ ஆராயலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இனிமேல் அது சாத்தியமில்லை" என்றார்.

லூயி ஹாமன் (இதுதான் சீரோவின் உண்மைப் பெயர்) இமாலயச் சாரலில் ஒரு பிரபல யோகியின் சிஷ்யராக இரண்டு வருஷ காலம் இருந்து வந்தார். இன்னும் அநேக நாள் அங்கேயே தங்கியிருப்பார்; ஆனால் குடும்பத் தொல்லை அவரைச் சும்மா விட்டால்தானே? இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி லண்டனுக்குத் திரும்பினார். மறுபடியும் அவர் இந்தியாவுக்குப் போகவே இல்லை. ஐரோப்பாவில் பிரபல ஜோசியர் என்று பெயர் எடுத்து விட்டார். மறுபடியும் வர முடிந்தால் தானே? கடைசிவரைக்கும், "இந்தியாவுக்குத் திரும்பிப் போயிருக்க வேண்டும். போகாதது தப்பு" என்றுதான் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனாலும் அடிக்கடி அவர் குருவிடமிருந்து செய்தி வந்து கொண்டேயிருக்கும். லண்டன், அமெரிக்கா இங்கிருந்தெல்லாம் அவரை அநேகம் பேர் பார்க்க வருவார்கள். சில வேளை அவர்கள் மூலம் இப்படிச் செய்தி வரும். மானசிகமாகவும் சில வேளை தெரிந்துகொள்வார். ராத்திரி மணி ஒன்று இருக்கும்; அவர் போய்விட்டார். தெர்மாமீட்டர் வைத்துப் பார்த்ததில் உடம்பு உஷ்ணம் 90 டிகிரி இருந்தது; அங்கே நானும் ஒரு நர்ஸும் ஒரு டாக்டரும் இருந்தோம். உள்ளே கணப்பில் நெருப்பு இருந்துங்கூட வெளியிலிருந்து சில்லென்று காற்று வீசியது; எங்களைக் குளிர் நடுக்கி எடுத்தது.

இரவு மணி 3-15 இருக்கும். அப்போது கடிகாரம் ஏனோ ஐந்து நிமிஷத்துக்கு ஒருதரம் விட்டு விட்டு ஒரு மணி அடித்தது. இந்த அதிசயத்தைப்பற்றிக் கலிபோர்னியா தினசரிப் பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதின. ஆனால் யாராலும் அது ஏன் என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

அன்று இரவு எங்கள் வீட்டைச் சுற்றியுள்ள மரங்களில் ஆந்தையும் கோட்டானும் கூவிக்கொண்டேயிருந்தன. அடிக்கடி அறை முழுதும் கம்மென்று பலவித வாசனை வீசியது. யாரோ மாடிப்படிகளிலும் மற்ற இடங்களிலும் நடமாடுவது போல் காலடிச்சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. ஆனால் கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை.

லூயியும் நானும் கொஞ்சநாள் இங்கிலாந்தில் இருந்தோம். அங்கே ஒரு நாள் இரவு ஆகாயத்தில் சிலுவை பற்றி எரிவது போல் ஏதோ தெரிந்தது. அதைப் பார்த்ததும் அவர் வெகுநேரம் யோசனையில் ஆழ்ந்து விட்டார். அவர் ஏற்கனவே எதிர்பார்த்ததுதான்

அது. "மேனு, சீக்கிரத்திலே ஐரோப்பாவில் ஒரு பெரிய சண்டை மூளப் போகிறது, பார்" என்ருர். அது 1914-இல்.

அவர் இறந்துபோவதற்குக் கொஞ்ச நாள் முன் அதேமாதிரி மறுபடியும் தெரிகிறதா என்று கவனிக்கச் சொன்னர். "மறுபடியும் பயங்கரமான சண்டை ஒன்று வரப்போகிறது. உலகம் முழுதும் அது பரவும், பார்" என்று எச்சரித்தார்.

1939-ஆம் வருஷம் கோடையின் போது நான் ஸஸ்ஸெக்ஸில் இருந்தேன். ஒரு நாள் இரவு எரியும் சிலுவை ஒன்று ஆகாயத்தில் தெரிந்தது; 'சரி; சண்டை வரப்போகிறது. லட்சக்கணக்கில் ஜனங்கள் மடியப்போகிருர்கள்" என்று அப்போதே முடிவு கட்டிவிட்டேன்.

ஜோசியம், ரேகை சாஸ்திரம் இந்த இரண்டிலும் லூயிக்கு விசேஷ அறிவு இருந்தது. இதோடு அவருக்கு ஆரூம் புலனும் உண்டு. எல்லாருக்கும் உதவியாக இருக்க வேண்டுமென்று அவர் பாடு பட்டார். பிற்கால வாழ்க்கை எப்படி இருக்குமோ என்று புரியாமல் தவித்த அநேகம் பேருக்கு அதிசயமான சில தகவல்களைத் தெரிவித்து ஆறுதல் அளித்தார். "இன்ன கெடுதல் நேரும்; இப்படி நடந்துகொண்டால் நல்லது" என்று சொல்லுவார். அப்படியே அவர்களும் ஜாக்கிரதையாக நடந்து கொள்வார்கள். இதுதான் அவரிடத்திலுள்ள ஒரு விசேஷம்.

யார் பெட்டி?

கிழவர் ஒருவர் ரெயில் வண்டியில் ஏறினதும் பக்கத்தில் இடம் இருக்கவே தம் பெட்டியை அங்கே வைத்துக்கொண்டு உட்கார்ந்தார். சற்று நேரம் கழித்து ஒரு வாலிபன் அதில் ஏற வந்தான். கிழவர், சிடுசிடுவென்று முகத்தை வைத்துக் கொண்டு, "அடுத்த வண்டியிலே போய் ஏறேன், ஐயா" என்ருர்.

"அந்தப் பெட்டியை எடுத்து வையுங்களேன், ஸார்" என்ருன் வாலிபன்.

"அது என் சிநேகிதர் பெட்டி; அவர் அப்புறம் ஏறுவார்."

"சரி, ஸார். அதுவரைக்கும் அங்கே உட்கார்ந்து கொண்டு பெட்டியை மடியில் வைத்துக்கொள்கிறேனே" என்று சொல்லிவிட்டு வாலிபன் உள்ளே வந்து உட்கார்ந்தான்.

ரெயில் வண்டி புறப்பட்டது; வாலிபன் வெளிப் பக்கம் திகிலோடு பார்த்துவிட்டு, "ஐயோ, பாவம்! உங்கள் சிநேகிதர் வண்டியைத் தவற விட்டுவிட்டார் போல் இருக்கிறதே! பெட்டியையும் விட்டுவிட்டால் அப்புறம் அவருக்குக் கஷ்டமாச்சே!" என்று சொல்லிக்கொண்டே பெட்டியை எடுத்துப் பிளாட்பாரத்தில் வீசி எறிந்தான்.

கிழவர் முகத்தைப் பார்க்கவேண்டுமே அப்போது!

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

வேற்றுமையற்ற நாடு

சுரேஷ் சந்திர பானர்ஜி

> பல பாஷைக்காரர் ஒன்றாய் வாழ முடியாது என்று நம்மில் பலர் கட்சி போடுகிறார்கள். அவர்கள் இந்த ஸ்விஸ் மக்களின் வாழ்க்கையைக் கவனிக்கவேண்டும்.

மலைகளும் ஏரிகளும் தேவதாரு மரங்களும் நிறைந்து இயற்கை அழகுக்குப் பெயர் போனது ஸ்விட்ஜர்லாந்து. சின்னஞ் சிறு நாடாக இருந்தாலும் அங்கிருந்து நாம் எவ்வளவோ விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஸ்விட்ஜர்லாந்தில் பல பாஷைகள் வழங்குகின்றன. அதன் மொத்த ஜனத்தொகை 40 லட்சம். அதில் 72 சதவிகிதம் பேர் ஜெர்மனும், 20 சதவிகிதம் பேர் பிரெஞ்சும், 5 சதவிகிதம் பேர் இத்தாலியனும், 1 சதவிகிதம் பேர் ரோமன்ஷே பாஷையும் பேசுகிறார்கள். மற்றும் 1 சதவிகிதம் பேர் அந்நிய நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் சொந்த பாஷைகளில் பேசிக்கொள்வார்கள். ஜெர்மன் பேசுவோர் ஜெர்மனியை அடுத்துள்ள பிரதேசங்களிலும், அதேமாதிரி பிரெஞ்சு, இத்தாலிய பாஷை பேசுவோர் பிரான்ஸ், இத்தாலி இவைகளை அடுத்துள்ள பிரதேசங்களிலும் வசிக்கிறார்கள். பாஷாவாரியாக மாகாணங்கள் இருக்கவேண்டும் என்று விரும்புகிறவர்கள் நாம்; அதனால், "ஸ்விட்ஜர்லாந்திலும் அப்படியே ஜெர்மன் பாஷை பேசுவோர் ஜெர்மனியோடும், பிரெஞ்சுப் பாஷை பேசுவோர் பிரான்ஸோடும், இத்தாலிய பாஷை பேசுவோர் இத்தாலியோடும் சேர்ந்திருப்பது தானே இயற்கை? ஆனால் எப்படி உலக மகாயுத்தம் இரண்டிலும் இவர்கள் ஈடுபடாமல் ஒற்றுமையாக இருந்தார்கள்?" என்று ஆச்சரியப்படுவோம்.

தேச உணர்ச்சி என்பது அங்கே இனப்பற்றினாலோ மொழிப்பற்றினாலோ உண்டாகவில்லை; இவைகளைப்பற்றி ஸ்விஸ் மக்கள் மண்டையை உடைத்துக்கொள்வதுமில்லை. ஒற்றுமையாக இருந்து சுதந்தரம் என்ற ஒரு லட்சியத்துக்காகப் போரிட்டுப் போரிட்டு அவர்களுக்கு வழக்கம்; எத்தனையோ காலமாக இப்படி ஒன்றாக இருந்து பழகிவிட்டார்கள்; இதனால்தான் ஸ்விட்ஜர்லாந்து ஒரு தனி நாடு ஆயிற்று. ஜெர்மன் பாஷை பேசும் ஸ்விஸ்காரனை, "உன் தாய்ப்பாஷை எது?" என்று கேட்டால் உடனே பெருமையோடு, "ஜெர்மன்" என்று பதில் சொல்லுவான். "எந்த இனம்?" என்று கேட்டால் அதற்கும் உடனே, "ஸ்விஸ் இனம்" என்று பெருமையோடு பதில் சொல்லுவான். இங்கே நான் தங்கியிருந்த

காப்பிரைட் : அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம் : 2-7-'49), கல்கத்தா.

ஒரு ஹோட்டலில் ஸ்விஸ் வேலையாள் ஒருவன் இருந்தான். அவனைப் பார்த்து, "ஜெர்மன் பாஷை பேசுகிறாயே; அப்படியானால் நீ ஜெர்மன்காரன்தானே?" என்று திரும்பத் திரும்பக் கேட்பேன். ஒவ்வொரு தரமும் அவன், "இல்லை, இல்லை. நான் ஸ்விஸ்காரன்தான்" என்று கண்டிப்பாகச் சொல்லுவான். இந்த மாதிரி நாமும் ஏன் இருக்கக் கூடாது? நமக்கும் தேசிய உணர்ச்சி இருக்கிறது. பழைய அநுபவத்தினால் முதிர்ந்தது நம் கலாசாரம்; ஒரே மாதிரியும் இருக்கிறது. அந்நிய ஆதிக்கம், ஜாதி வேற்றுமை, மாகாண வேற்றுமை இந்த மூன்றும் நம்மை இது வரை அழுத்தி வந்தன. முதல் பீடை தொலைந்தது. ஜாதி வேற்றுமையும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. மாகாண வேற்றுமை நீங்கவேண்டியது ஒன்றுதான் பாக்கி; அதையும் ஏன் ஒழிக்கக்கூடாது? வெகு நாளாக ஒற்றுமையாக இருந்து பழகியிருக்கிறோம்; பிற்காலத்தில் ஒரே மாதிரி கஷ்ட நஷ்டங்களை அநுபவிக்க நேரும். நாம் ஏன் ஒத்துப் போகக்கூடாது?

ஸ்விட்ஜர்லாந்து பெரும்பாலும் மலைப்பிரதேசம். உணவுக்குப் போதுமான விளைநிலம் அங்கே இல்லை. அதனால் பயிர்த் தொழிலில் ஈடுபடுவது எல்லாருக்கும் சாத்தியமில்லை. முன் நாளில் அநேகம் பேர் அங்கிருந்து ஐரோப்பாவிலுள்ள வேறு நாடுகளுக்குப் போய்க் கூலிப் படையில் சேருவது வழக்கமாம். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது; பயிர்த் தொழிலிலும் மற்றத் தொழில்களிலும் அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டதால் முன் மாதிரி வேலை தேட யாரும் வெளி நாட்டுக்குப் போவதில்லை. மொத்த ஜனத்தொகையில் 25 சதவிகிதம் பேர் பயிர்த் தொழிலிலும், 45 சதவிகிதம் பேர் கைத்தொழிலிலும் பிற வகைத் தொழில்களிலும், 10 சத விகிதம் பேர் வர்த்தகம், இன்ஷூரன்ஸ் பாங்கித் தொழில் முதலியவற்றிலும், 7.5 சதவிகிதம் பேர் வீட்டுவேலைகளிலும், 5 சதவிகிதம் பேர் ஹோட்டல் தொழிலிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். 5 சதவிகிதம் பேர் போக்குவரத்து, தபால் தந்தி இலாகாக்களில் இருக்கிறார்கள். மீதி 2.5 சதவிகிதம் பேர் அரசாங்க உத்தியோகத்திலோ பிற உத்தியோகத்திலோ இருக்கிறார்கள். இவ்வளவு தொழில் அபிவிருத்தி ஏற்பட்டும் ஆலைகள் உள்ள பிரதேசங்கள் இந்தியாவிலே இருப்பது போல் பார்ப்பதற்கு விகாரமாக இல்லை. ஸ்விட்ஜர்லாந்தில் மொத்தம் 8,554 ஆலைகள் ஒரே இடத்தில் இராமல் பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை சிறிய ஆலைகள் அல்லது நடுத்தர ஆலைகள். மூன்றில் ஒரு பங்கு ஆலைகளில் பத்துப் பேருக்குமேல் வேலை செய்வதில்லை. பெரிய ஸ்விஸ் கம்பெனி ஒன்றில் 6,200 பேர் வேலை செய்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக ஜோடு உற்பத்திச் சாலை ஒன்றில் 3,300 பேர் வேலை செய்கிறார்கள். பெரிய கடிகாரத் தொழிற்சாலையில்கூட 2,000 பேருக்குமேல் வேலை செய்வதில்லை.

இந்தியாவில் இன்னும் தொழில் அபிவிருத்தி ஏற்படவில்லை; பொருளாதாரத் துறையிலும் அது தாழ்ந்த நிலையில் இருக்கிறது. என்னதான் பாடுபட்டும் பெரிய தொழில்களை

நிறுவ நம்மால் முடியவில்லை. அதை நடத்தவும் மூலதனம் நமக்குப் போதாது. ஆனால் சின்னஞ் சிறிய தொழில்களிலும் நடுத்தரத் தொழில்களிலும் ஈடுபடுவதற்குப் போதுமான மூலதனம் சுலபமாகக் கிடைக்கும். உண்மையிலேயே நமக்கு அதில் சிரத்தை இருக்குமானால், கொஞ்சம் மூலதனத்தை வைத்துக்கொண்டுகூட இப்படி விரைவில் முன்னேறலாம். கடிகாரம், காகிதம், யந்திரத் தொழிற் கருவி உற்பத்தி இந்த மாதிரி சின்னஞ்சிறு விஷயங்களில் கூட ஸ்விட்ஜர்லாந்து சிறந்து விளங்குகிறதென்றால் அதிசயமாக இல்லையா? ஸ்விட்ஜர்லாந்தை நாமும் ஏன் பின்பற்றக்கூடாது? ஐக்கிய நாடுகள் சபைகம் இதைப்பற்றித் தீவிரமாக ஆலோசித்து இன்னும் தொழில் அபிவிருத்தி ஏற்படாத நாடுகளுக்குத் தொழில் நிபுணர்களை அனுப்பி உதவுவதாகச் சமீபத்தில் தீர்மானித்திருக்கிறது. இதனால் அந்த நாடுகள் பொருளாதாரத் துறையில் விரைவிலே முன்னேறலாம். இப்போது ஜெனேவாவில் நடக்கும் 32-ஆம் சர்வதேசத் தொழில் மகாநாட்டில் இதைக் கவனிக்க ஒரு கமிட்டியும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். விரைவிலேயே எந்த எந்தத் துறைகளில், இந்தியாவுக்கு உதவி தேவை என்று ஐக்கிய நாடுகள் சங்கம் நம்மைக் கேட்கலாம்; அப்போது ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ஏராளமான தொழில் நிபுணர்களை அனுப்பும்படி நாம் அவர்களைக் கேட்டுக்கொள்வது நலம்; இப்படி யந்திரத் தொழிற் கருவிகள் செய்வது, கடிகாரம் செய்வது போன்ற சிறிய தொழில்களையும் நடுத்தரமான தொழில்களையும் ஆரம்பித்தால், இந்தியாவிலே விரைவில் தொழிலபிவிருத்தி ஏற்பட்டுவிடும். அதோடு, அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைச் செய்யும் விதத்தையும் கற்று நம் இளைஞர்கள் திறமையோடு விளங்குவார்கள்.

எனக்கு எப்போதுமே தொழிலாளர் நலனில் சிரத்தை உண்டு. அதனால் சின்னஞ்சிறு ஆலையாக இருந்தாலும் போய்ப் பார்ப்பது என்று தீர்மானித்தேன். ஒவ்வோர் இடமும் போய்த் தொழிலாளர் எங்கே வசிக்கிறார்கள் என்று விசாரித்தேன். அங்கே ஆலைகளுக்கு அருகில் சொந்தக்காரர்கள் கட்டிக் கொடுத்த விடுதிகளில் தொழிலாளர் வசிப்பதில்லை என்று தெரிந்தது. பின்னே அவர்கள் எங்கே குடியிருக்கிறார்கள்? பம்பாயிலும் கல்கத்தாவிலும் இருப்பது போல் அழுக்கும் அசுத்தமும் நிறைந்த தொழிலாளர் விடுதிகள் அங்கே காணோம். ஸ்விட்ஜர்லாந்திலுள்ள தொழிலாளர் மற்ற மக்களோடு மக்களாகத்தான் வாழ்கிறார்கள்; தனியாக வாழ விரும்புவதில்லை. மற்றவர்களுக்கு இவர்கள் எந்த விதத்திலும் குறைந்துவிடவும் இல்லை. சமீபத்தில் சர்வதேசத் தொழில்சங்கக் காரியாலய உத்தியோகஸ்தர் ஒருவர் ஒரு விருந்து வைத்தார். அதற்கு என்னையும் அழைத்திருந்தார். அவருடைய மனைவி ஐரோப்பியப் பெண்மணி; படித்துப் பட்டம் பெற்றவள். அவர்கள் ஒரு பெரிய கட்டிடத்தில் ஒரு கட்டில் குடியிருக்கிறார்கள். அதே கட்டிடத்தின் இன்னொரு கட்டில் ஒரு பெண்மணி வசிக்கிறாள்; அவள் அக்கம் பக்கத்தில் வீடு கூட்டிப் பிழைப்பவள். 'ஒரே வீட்டில் இந்த மாதிரி எங்கேயாவது குப்பைக்காரியும்

பணக்காரியும் வாழ முடியுமா? கனவில்கூட நடக்காது' என்று தான் நமக்குத் தோன்றும்.

முன்னே ஸ்விஸ் பெண்களுக்கு ஓட்டுரிமை என்பது கிடையாது; இப்போது உண்டு. இதைப்பற்றி அவர்கள் அக்கறைப்பட்டதாகவும் தெரியவில்லை. ஏனென்றால், அங்கேதான் உண்மையாகவே ஜனநாயகம் நடக்கிறது; சமூக, பொருளாதாரத் துறைகளிலும் சமத்துவம் நிலவுகிறது. ஆண்களுக்குச் சமானமாகப் பெண்களும் பல துறைகளில் பெயர் எடுத்திருக்கிறார்கள். இந்த நிலையில் உயர்வு தாழ்வு என்ற பேச்சுக்கு இடம் ஏது? ஒரு நாள் கூட்டுறவுக் கட்டிடச் சங்கம் ஒன்றைப் பார்க்கப் போயிருந்தேன். திரும்பி வரும்போது அதன் மானேஜர் முன்பக்கத்தில் டிரைவரோடு உட்கார்ந்து அவனோடு சகஜமாகப் பேசிக்கொண்டே வந்தார். தொழிலாளிகளோடு பழகியிருப்பதால் எனக்கு இது அதிசயமாகப் படவில்லை. ஆனால் என்னோடு வந்த நண்பருக்கு என்னவோ இது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

இப்படி ஒரு வதந்தி

போன வருஷம் அமெரிக்க உத்தியோகஸ்தர் ஒருவர் ஏரோப்ளேனில் பாக்தாதுக்குப் புறப்பட்டுப் போனார். அவரோடு இன்னும் மூன்று பிரயாணிகள் இருந்தார்கள்; கூடவே இரண்டு நாய்களையும் வாங்கி வந்திருந்தார். பாதி வழியில் ஏரோப்ளேன் எஞ்சினில் 'காஸ்' இல்லை என்று தெரிந்தது. ஆனால் கீழே ஏரோப்ளேன் இறங்க முடியாதபடி மூடுபனி கப்பிக்கொண்டிருந்தது. அதனால் நாய்களோடு ஏரோப்ளேனை அப்படியே விட்டுவிட்டு அவர்கள் நாலு பேரும் பாரசூட் குடையின் உதவியால் கீழே இறங்கிவிட்டார்கள்.

துருக்கியில் உள்ள அனடோலியா என்ற பிரதேசத்தில் அந்த ஏரோப்ளேன் ஒரு குறுகிய கணவாய் வழியாக நுழைந்து ஒரு பள்ளத்தாக்கில் வந்து நிதானமாக இறங்கியது. இதை அங்கே இருந்த குடியானவர்கள் பார்த்தார்கள்.

நாய்கள் மட்டும் இருந்த ஏரோப்ளேன் இறங்கிய செய்தி விரைவிலேயே அக்கம் பக்கம் மலைப்பிரதேசம் முழுதும் பரவிவிட்டது. இப்போது அங்கே இருக்கும் ஜனங்களுக்கு ஒரு விஷயத்தில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது; "இனிமேல் ருஷியாக்காரன் ஜயிக்கிறது ஏது? அமெரிக்காக்காரன் நாயை விட்டு ஏரோப்ளேன் ஓட்டுகிறான் என்றால் பாரேன்!" என்று அவர்கள் பேசிக்கொள்கிறார்களாம்.

—'டைம்'

அயலாருடைய அபிப்பிராயத்தை எவனும் ஒப்புக்கொள்வதில்லை. தன் அபிப்பிராயத்தைத் தானே சொல்வது தான் யாருக்கும் பிடிக்கிறது.



பரமஹம்ஸர்

தாயிடம் அன்பு: பரமஹம்ஸர் சிறு வயதிலேயே பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டுவிட்டார். அப்போது பிருந்தாவனத்தில் போய்க் கொஞ்சநாள் தங்கினார். அந்த இடம் அவருக்கு மிகவும் பிடித்துவிட்டதால், அதை விட்டுப் போக மனம் வரவில்லை. "சனியன் பிடித்த அந்தக் கல்கத்தா இனிமேல் நமக்கு வேண்டாம்; கலங்கிப்போன அந்த ஹூக்ளியும் வேண்டாம். இங்கேயே யமுனா தீரத்தில் ஒரு குடிசை கட்டிக்கொண்டு நிம்மதியாக ஈசுவரபக்தியில் லயித்துவிடுவோம்" என்று தீர்மானித்தார். ஆனால் இதே சமயத்தில் அவருடைய தாய், தொண்டு கிழவியின் ஞாபகம் வந்துவிட்டது. உடனே, "சீச்சீ! நம் தாயைத் தனியே விட்டுவிட்டு இங்கே ஈசுவர தியானமா? அவளைவிட இந்த இடமா பிரமாதம்? அவள் பக்கத்தில் இருந்துகொண்டே ஈசுவர பக்தியில் ஈடுபடுவதே மேல்" என்று அவருக்குத் தோன்றியது. அப்படியே கல்கத்தாவுக்குத் திரும்பி வந்துவிட்டார். (வாழ்வு)

பூரண சமர்ப்பணம்: சீதை போனபிறகு ராமனும் லட்சுமணனும் ஒரு நாள் மாலை பம்பா ஏரிக்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்நானம் செய்வதற்கு முன் இரண்டு பேரும் தங்கள் வில்லைக் கரையில் போட்டுவிட்டுப் போனார்கள். திரும்பிவந்ததும், ராமருடைய வில்லை லட்சுமணன் எடுத்தான். அப்போது அதில் ரத்தக்கறை இருப்பது தெரிந்தது. ராமர் உடனே, "ஐயையோ! எந்தப் பிராணியின்மேலோ வில் பட்டுவிட்டது போல் இருக்கிறதே!" என்று சொல்லிக் கீழே சுற்றுமுற்றும் கவனித்தார். தூரத்தில் ஒரு தவளை மூர்ச்சையுற்றுக் கிடந்தது. ராமர் கருணையோடு அதைத் தொட்டுத் தடவிக் கொடுத்தார். உடனே அது மூர்ச்சை தெளிந்து எழுந்தது; ராமர் அதைப் பார்த்து, "பாம்பு வந்து கவ்வும்போது கீச்சுக் கீச்சென்று கத்துகிறாயே:

வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

இப்போது ஏன் கத்தவில்லை? கத்தியிருந்தால் எங்களுக்குத் தெரிந்திருக்குமே?'' என்று அன்பு கனியக் கேட்டார். அதற்கு அந்தத் தவளை, ''பாம்பு வந்து கவ்வும்போது உன்னையே கதி என்று நம்பி, 'ராமா, ராமா! என்னைக் காப்பாற்றேன்' என்று கத்துகிறேன். ஆனால் ரட்சிக்கவேண்டிய நீயே என்னை நசுக்கும்போது நான் யாரை அழைப்பது?'' என்று பதில் தந்தது.

(வாக்கு)

பிறருக்கு உபதேசம்: ஒரு நாள் ஒரு வைத்தியர் வீட்டில் கருப்பட்டி ஏராளமாக வந்து இறங்கியிருந்தது. நோயாளி ஒருவன் அன்று அவரிடம் வந்து உடம்பைக்

காட்டினன். அவர் அவனுக்கு மருந்து கொடுத்துவிட்டு, ''இன்னும் இரண்டு நாள் கழித்து வா. என்ன ஆகாரம் சாப்பிடவேண்டும் என்று சொல்கிறேன்'' என்று கூறி அனுப்பிவிட்டார். நோயாளியின் வீடு வெகு தூரத்தில் இருந்தது. மூன்றும் நாள் அவன் சிரமப்பட்டுக் கொண்டே வைத்தியரிடம் வந்தான். வைத்தியர் அவன் உடல்நிலையைப் பரீட்சித்துவிட்டு, ''இனிமேல் மருந்து தேவை இல்லை. நீ சாப்பாட்டு விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கருப்பட்டி அது இதெல்லாம் சாப்பிட்டு வைக்காதே'' என்று எச்சரித்தார்.

வைத்தியர் வீட்டில் குடியிருந்த

ஒருவர் நோயாளி போனதும் வைத்தியரைப் பார்த்து, "அன்றைக்கு வந்தாரே, அப்போதே இதைச் சொல்லி யனுப்பியிருக்கக் கூடாதா? பாவம், மறுபடியும் இவ்வளவு தூரம் நடக்காமல் இருந்திருப்பாரே?" என்று கேட்டார். அதற்கு வைத்தியர், "இதற்குக் காரணம் உண்டு. அன்றைக்கு இங்கே கருப்பட்டி வந்து இறங்கியிருந்தது, பார்த்தீரா? அப்போது இதைச் சொல்லியிருந்தேனானால், நோயாளி என்ன எண்ணிக்கொண்டிருப்பார் தெரியுமா? 'இவர் வீட்டிலேயே கருப்பட்டி இருக்கிறதே. இவர் மாத்திரம் சாப்பிடலாம்; நான் சாப்பிடக் கூடாதா? கொஞ்சம் சாப்பிட்டு வைத்தால் போகிறது' என்று அசிரத்தையாக இருந்துவிடுவார். நாம் சரியாக இருந்தால்தானே பிறத்தியாருக்கு நம்பிக்கை ஏற்படும்? அதனால்தான் கருப்பட்டியை உள்ளே எடுத்து வைத்த பிற்பாடு அந்த யோசனையைச் சொன்னேன்; தெரிகிறதா?" என்றார். (வாக்கு)

திருடனும் மனத்தத்துவ சாஸ்திரியும்

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்ஜெல்ஸ் என்ற இடத்தில் இருக்கும் ஒரு மனத்தத்துவ ஆசிரியர் எம். எல். தாமஸ்ஸன். அவர் ஒரு நாள் நடு நிசியில் ஓர் இருண்ட தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவருடைய ஜேபியில் 200 டாலர் நோட்டுக்கள் இருந்தன. அப்போது யாரோ ஒரு முரட்டு ஆசாமி அவரைப் பின் தொடர்ந்துகொண்டே வந்தான். ஒரு மூலையில் திரும்பியதும் அவன் பயமுறுத்துவதுபோல் வேகமாக அவரை நோக்கி வந்தான். ஆசாமி தம்மை மடக்கப் போகிறான் என்று தெரிந்துகொண்டார் தாமஸ்ஸன்.

உடனே அவரே அவனிடம் போய், "தம்பி, தம்பி! வயிற்றுக்கு ஒன்றுமே இல்லை. ஏதாவது சில்லறை இருந்தால் கொடேன். காபியாவது குடிக்கிறேன்" என்று கெஞ்சினார்.

அந்த ஆசாமி அசந்து நின்றுவிட்டான்; "அட ஏழவே! உன்னையா மடக்கி நிறுத்தப்போனேன்?" என்றான். பிறகு ஜேபியிலிருந்து ஏதோ சில்லறை எடுத்துக் கொடுத்தான்.

தாமஸ்ஸன் அதை வாங்கி ஜேபியில் போட்டுக்கொண்டு நிதானமாக நடந்து சென்றார். அவரிடமிருந்த நோட்டுக் கற்றை பறி போகாமல் தப்பியது.

—'ஸக்ஸெஸ் டுடே'

பிறத்தியானைப் 'பைத்திய'மாக அடிக்கும் வழிக்கு நான் போவதில்லை. அவனுக்கு விஷயம் தெரிந்துவிட்டால், என் தந்திரத்தினால் எனக்கு விளைந்த நன்மையைவிட, அவன் விளைக்கும் தீமை அதிகமாகிவிடும்.

உலகத்துச் சர்வகலாசாலைகள் - 3

லண்டன் யூநிவர்ஸிடி

எச். கிளாடன்

12, 13 - ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உள்ள பெரிய நகரங்களில் அறிஞர்கள் யூநிவர்ஸிடிகளை ஸ்தாபித்து வந்த போது, லண்டனில் ஒருவிதமான முயற்சியும் நடைபெறவில்லை. ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ் என்ற சிறிய நகரங்களில் மாத்திரம் இங்கிலாந்தின் பழைய யூநிவர்ஸிடிகள் வளர்ந்துவந்தன.

ஒரு நாட்டின் நாகரிகம் உயர, அதன் அறிவுச் செல்வத்தைப் பெருக்கவேண்டும். அதைப் புரிபவை சர்வகலாசாலைகள். இந்தத் தொடரில், ஆக்ஸ்போர்ட், கேம்ப்ரிட்ஜ் இரண்டையும் பற்றிய கட்டுரைகளை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம்.

லண்டனில் பள்ளிக்கூடங்களுக்குப் பஞ்சமில்லை. பழங்கால முதல் வெஸ்ட்மின்ஸ்டர் ஆபேயிலும் ஸெயிண்ட் பால்ஸ் கதீட்ரலிலும் சமய போதனைப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. பிறகு இன்ஸ் ஆப் கோர்ட்டிலும் சான்ஸரியிலும் சட்டப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றன. ஆனால் இவை அனைத்துக்கும் பொதுவான நிர்வாகம் இருக்கவில்லை.

பழைய யூநிவர்ஸிடிகள் புதிய வளர்ச்சியோடு இசைந்து நிற்க முடியவில்லை; புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயங்கின. இதனால் ஏற்பட்ட கிளர்ச்சியே லண்டனில் ஒரு யூநிவர்ஸிடி எழுவதற்கு மூல காரணமாயிற்று. 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பழைய உலகத்திலும் அமெரிக்காவிலும் பரவிய முன்னேற்றக் கொள்கைகளின்படி கல்வி முயற்சி அமையவேண்டும் என்ற கருத்தோடு அந்தக் கிளர்ச்சி ஏற்பட்டது. முன்னேற்ற நோக்குள்ள பல பெரிய மனிதர்கள் நிதி திரட்டி, யாவருக்கும் இடம் கொடுக்கும்படியாக யூநிவர்ஸிடி காலேஜ் என்ற ஒன்றை 1827-ஆம் வருஷம் நிறுவினார்கள். அவர்களுக்கு எதிராக நின்றவர்கள் 1829-ஆம் வருஷம் சர்ச் ஆப் இங்கிலாந்தைச் சார்ந்ததாகக் கிங்ஸ் காலேஜ் என்பதை ஆரம்பித்தார்கள். இந்த இரண்டு காலேஜ்களுக்கும் பட்டம் கொடுக்கும் அதிகாரம் கிடைக்கவில்லை.

பலகாலப் போராட்டத்தின் விளைவாக 1836-ஆம் வருஷம் அரசர் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அதனால் லண்டன் யூநிவர்ஸிடி என்ற மூன்றாவது ஸ்தாபனம், நகரத்திலும் பிரிட்டிஷ் ராஜ்யத்திலும் உள்ள மக்களுக்கு எந்த வேற்றுமையுமின்றிக் கல்வி அபிவிருத்திக்குரிய காரியங்களைச் செய்யும் அதிகாரத்தைப் பெற்றது. இந்த ஸ்தாபனம் பரீட்சை வைத்துப் பட்டம் வழங்குவதோடு நின்றது. இடைத்தர உயர்தரப் படிப்பு விஷயத்தில் இங்கிலாந்தில்

காப்பிரைட் : பிரிட்டிஷ் இன்பர்மேஷன் ஸெர்விஸ், புது டெல்லி.

இந்த யூனிவர்ஸிடிக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. மற்ற யூனிவர்ஸிடிகளைப்போல மதிப்பும் அநுபவமும் இல்லாத இது, புதிதாகச் சம்பிரதாயங்களையும் நெறி முறைகளையும் வகுக்கும்படி நேர்ந்தது. வகுப்பு, மத வேறுபாடுகளைப் போக்கிப் புதிய பாடங்களைப் புகுத்தியது. இங்கிலீஷ், விஞ்ஞானம், நவீன பாஷைகள் என்பவை யூனிவர்ஸிடியின் பாடத் திட்டங்களில் சேர்ந்தன. பெண்களையும் பரீட்சைக்கு எடுத்துக்கொண்டு பட்டமும் வழங்கியது.

1900-ஆம் ஆண்டு முதல் பரீட்சைகளை நடத்துவதோடு நில்லாமல் கல்வி கற்றுக்கொடுக்கும் காரியத்திலும் இந்த யூனிவர்ஸிடி ஈடுபடத் தொடங்கியது. 1929-ஆம் வருஷம் முன்பு ஏற்பட்ட இரண்டு காலேஜ்களும் யூனிவர்ஸிடியோடு இணைந்தன. இப்படியே நகரத்தில் பல பகுதிகளில் இருந்த பள்ளிக்கூடங்கள் யாவும் இணைந்தன. இப்படி இணைந்த கலாசாலைகள் 34 இப்போது இருக்கின்றன. இவற்றில் 12 வைத்தியக் கலாசாலைகளும், பிரிட்டிஷ் போஸ்ட் கிராஜுவேட் வைத்தியப் பள்ளிக்கூடமும், 4 சமய போதனைக் கல்லூரிகளும், 4 பெண்கள் காலேஜ்களும் சேர்ந்திருக்கின்றன.

1939-ஆம் வருஷம் இணைந்த கலாசாலைகள் எல்லாவற்றிலும் மொத்தம் 14,000 மாணக்கர்களும், 415 புரொபஸர்களும், 979 ஆசிரியர்களும் இருக்கிறார்கள். சமய அறிவு, கலைகள், சட்டம், சங்கீதம், வைத்தியம், விஞ்ஞானம், இஞ்சினீரிங், அரசியல், வியாபாரம், தொழிலறிவு என்ற பல துறைகளில் இந்த ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். மாகாணங்களிலுள்ள யூனிவர்ஸிடி காலேஜ்களிலும், பிரிட்டிஷ் ராஜ்யத்திலும் கடலுக்கப்பாலுள்ள நாடுகளிலும் உள்ள மாணவர்களுக்கு அங்கங்கே உள்ள ஸ்தாபனங்களின் மூலம் பரீட்சைகளை இது நடத்தி வருகிறது. இப்படி வெளியிலிருந்து பரீட்சைக்கு வரும் மாணக்கர்கள் 10,000 பேர் 1939-ஆம் வருஷம் இருந்தனர். லண்டன் மாநகரத்தில் பட்டம் பெறும் எண்ணமில்லாவிட்டாலும் பிரசங்கங்களைக் கேட்டுப் பயன்பெற விரும்புகிறவர்களுக்கு இந்த யூனிவர்ஸிடி வசதி அளிக்கிறது.

பல ஆராய்ச்சிக்கூடங்கள் இருக்கின்றன. சரித்திர ஆராய்ச்சிக் கழகம் கலைக்கழகம் போன்ற பல ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் வேறு இருக்கின்றன. தலைநகரத்தில் இருப்பதனால் பிரிட்டிஷ் மியூஸியம், பப்ளிக் ரிகார்டு ஆபீஸ், ஓவிய சாலைகள் முதலியவற்றை ஆராய்ச்சிக் கழகங்கள் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது.

கீழ்நாட்டுக் கலைப் பள்ளிக்கூடமும், ஆப்பிரிக்காக் கலைப்பள்ளிக்கூடமும் அந்த அந்தப் பிரதேசத்துக் கலைகளில் பயிற்சி அளிக்கின்றன.

யூனிவர்ஸிடியின் நிர்வாகம் மத்திய நிலையத்தாலும் காலேஜுகளாலும் நடைபெறுகிறது. மத்திய நிலையம் புரொபஸர்களையும் ஆராய்ச்சிக்காரர்களையும் நியமித்துப் பரீட்சைக்குரிய பாடத் திட்டங்களை வகுத்து உதவி நிதிகளைத் திட்டம் செய்கிறது. லண்டன் யூனிவர்ஸிடி மாணக்கர்கள் தங்கிப் படிக்க வசதியளிப்பதில்லை. அங்கங்கே தங்கிக் காலேஜுகளில் படிக்கும் மாணக்கர்கள் தங்கள் காலேஜளவில் அபிமானம் உள்ளவர்களாயிருக்கிறார்கள்.

மற்ற யூனிவர்ஸிடிகள் அந்த அந்த நகர மக்களைக் கவர்ந்து நிற்கின்றன. லண்டன் நகரவாசிகள் எல்லாரும் லண்டன் யூனிவர்ஸிடியில் பற்றுள்ளவர்கள் என்று சொல்லமுடியாது. கௌரவமும் போதிய விசாலமும் உள்ள கட்டிட வசதி இந்த யூனிவர்ஸிடிக்கு இல்லாமல் இருப்பது அதற்கு ஒரு காரணம். ராக்பெல்லர் தர்ம நிதியைக் கொண்டு லண்டன் மாநகரத்தின் நடுவே ஒரு பெரிய கட்டிடம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஸெனேட் மண்டபமும் புத்தகசாலையும் அதில் இருக்கின்றன. இன்னும் சில மண்டபங்களை எழுப்பத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

யுத்தகாலத்தில் லண்டனிலிருந்து மக்கள் வெளியேறினார்கள். அப்போது மத்திய நிர்வாகமும் காலேஜுகளும் சுற்று வட்டாரங்களுக்கு மாற்றப்பட்டன. மிகவும் சங்கடமான அந்தக் காலத்திலும் இந்த யூனிவர்ஸிடி தன் கடமைகளை நிறைவேற்றி வந்திருக்கிறது.

இந்த யூனிவர்ஸிடியில் ஆசிரியர்களாக இருந்த பலர் அரசாங்க நிர்வாகத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

லண்டன் யூனிவர்ஸிடி உலகம் முழுவதும் பரவிய ஸ்தாபனம். இதில் கல்வியின் தரம் எப்போதும் உயர்ந்ததாகவே இருக்கிறது. இதற்கு வந்த இடையூறுகளைப் போல வேறு எந்தச் சர்வகலாசாலைக்கும் வந்ததில்லை. ஆனாலும் அவற்றையெல்லாம் தாண்டித் தன்னுடைய புகழை இது நிலைநாட்டி விளங்குகிறது.

கோர்ட்டிலே நிரூபணம்

வாதியைக் குத்துச்சண்டை பயில்வான் ஒருவன் தாக்கியதாக வழக்கு. வாதி வக்கீல் சற்றுத் துடுக்காகக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தார். வாய்ச்சண்டை முற்றிக் கைகலந்தபோது வாதியைத் தான் கொஞ்சம் நெட்டித் தள்ளியது வாஸ்தவந்தான் என்று பயில்வான் ஒப்புக்கொண்டான்.

"ஓஹோ! கொஞ்சம் தள்ளினயா? சரி; எப்படித் தள்ளினய், காட்டு பார்க்கலாம்" என்றார் வக்கீல்.

"இப்போது உங்களை அப்படித் தள்ளிக் காட்டவேண்டும் என்கிறீர்களா?"

"ஆமாம்."

பயில்வானின் கண்களில் உற்சாகம் சுடர் விட்டது. தான் இருந்த இடத்திலிருந்து ஒரே தாவாகத் தாவி வாதி வக்கீலின் மேல் போய்ப் பலமாக விழுந்தான். வக்கீல் ஐயா கீழே சாய்ந்தவர் சாய்ந்தவர்தான்; அப்புறம் எழுந்திருக்கவேயில்லை.

பயில்வான் இளித்துக்கொண்டே ஜூரிகளைப் பார்த்து, "கோர்ட்டாரவர்களே, இதில் பத்தில் ஒரு பங்கு பலத்தோடு தான் வாதியை நெட்டித் தள்ளியிருப்பேன்" என்றான்.

—மார்க்கரெட் காக்ஸ், 'ஹாலிவுட் ரிபோர்ட்டர்.'

கோயில் மலிந்த நகரம்

சுவாமி ரிதஜானந்தா

'நதியிலே கங்கை; நகரத்தில் காஞ்சி; புஷ்பத்தில் ஜாதி; புருஷனில் விஷ்ணு' என்று ஸம்ஸ்கிருதத்தில் ஒரு சுலோகம் உண்டு. காஞ்சீபுரத்தின் சைவ வைஷ்ணவ ஆலயங்களின் சிறப்பைப் பாராட்டாதவர் இல்லை.

புழுதி நிறைந்த ரஸ்தா வழியாக ஸ்டேஷனிலிருந்து பெரிய காஞ்சீபுரத்துக்குப் போகும்போது "இதையா கவிகள் 'நகரேஷு காஞ்சி' என்று புகழ்ந்தார்கள்?" என்றுதான் முதலில் தோன்றும். ஆனால் கொஞ்சதூரம் போனதும் விசாலமான வீதிகளும் நகரமும் தெரியும். ஒழுங்காக இருபுறமும் மரங்கள் அடர்ந்த அந்தச் சாலைகளில் நடுநடுவே கல்மண்டபங்களையும் பாழடைந்த சில பழங் கோயில்களையும் காணலாம்.

கி. பி. 2 - ஆம் நூற்றாண்டு முதல் 9 - ஆம் நூற்றாண்டு வரை காஞ்சீபுரம் பல்லவர்களின் தலைநகரமாக இருந்தது. அப்போது இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகரான ஹ்யுவன் த்ஸியங், தர்மபால போதிசத்துவர் என்ற பௌத்த ஆசிரியர் அங்கே வாழ்ந்ததாகச் சொல்கிறார். அந்த நாளில் அங்கே பல சங்காராமங்கள் இருந்தனவாம். அவைகளில் அறிஞர்கள் பலர் பாடம் போதித்து வந்தார்களாம். வெளியூர்களிலிருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அங்கே வந்து படிப்பது வழக்கமாம். அசோக சக்கரவர்த்தி அங்கே 100 அடி உயரத்துக்கு ஒரு ஸ்தூபம் கட்டியிருந்ததாகவும் தெரிகிறது.



ஸ்ரீ வைகுண்டப்பெருமாள் கோயிலின் அமைப்பு

இப்போதுள்ள காஞ்சீபுரம் ஐந்து அல்லது ஆறு மைல் பரப்புள்ள ஊர். இதில் இரண்டு பகுதி: ஒன்று பெரிய காஞ்சீபுரம் அல்லது சிவகாஞ்சி; மற்றது சின்னக் காஞ்சீபுரம் அல்லது விஷ்ணுகாஞ்சி. அருகிலேயே ஜைனகாஞ்சி என்று ஓர் இடம் இருக்கிறது. அதற்கு இப்போது திருப்பருதிக்குன்றம் என்று பெயர். அது ஒரு சிறிய கிராமம். சந்திரப்ரபா, வர்த்தமானர் என்ற இரண்டு தீர்த்தங்கரர்களின் கோயில்கள் அங்கே இருக்கின்றன. வர்த்தமானர் கோயில் திராவிட (சோழ) ரீதியில் அமைந்தது. பார்ப்பதற்கு விஷ்ணு கோயில்போல் தோன்றும். ஒரு சமயம் இது பிரபல ஜைன க்ஷேத்திரம். இங்கே ஒரு மரத்தின்கீழ் அநேக ஜைன சாதுக்கள் தவம் செய்து வந்தார்களாம். கர்ப்பக்கிருகத்தைச் சுற்றிப் பல

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜுன் '49), கல்கத்தா.

தீர்த்தங்கரர்களின் சிலைகள் இருக்கின்றன. அருகிலேயே சாஸ்தா கோயில் ஒன்றும் இருக்கிறது. வர்த்தமானர் கோயிலின் கூரையில் கிருஷ்ண சரித சம்பந்தமான ஓவியங்களைக் காணலாம். ஜைனர்கள் கிருஷ்ணனை ஒரு தீர்த்தங்கரராகக் கொண்டாடுகிறார்கள். சந்திரப்பிரபாவின் கோயில் கவனிப்பாரில்லாமல் பாழடைந்து வருகிறது.

இங்கிருந்து ஆற்றைக் கடந்து வந்ததும் கைலாசநாதர் கோயில் தெரியும். நகர எல்லைக்குச் சற்றுத் தூரத்தில் இருப்பதால் இது சகஜமாக யார் கண்ணிலும் படாது. பல்லவர்கள் காலத்தில் சிறப்புற்று விளங்கியது இந்தக் கோயில். இப்போது வயல்களுக்கும் இரண்டொரு குடிசைகளுக்கும் நடுவே தன்னந்தனியாகக் காட்சி அளிக்கிறது. எப்போதாவது பழம்பொருள் ஆராய்ச்சியாளர் சிலர் இங்கே வருகிறார்கள். கைலாசம் போலவே அமைதியான இடந்தான்! பார்த்ததமே இது பழைய கோயில் என்று தெரிந்துவிடும். குட்டையான கோபுரம். வாசற்படியும் குறுகல். ஒரு பக்கம் ஆறு விமானம். இன்னொரு பக்கம் இரண்டே விமானம்; மீதி நாலும் இடிந்து போயிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. தென்னாட்டில் இந்தமாதிரி கோயிலே இல்லை. இதைப் பார்த்ததும் கல்கத்தாவில் கங்கைக் கரையில் இருக்கிற கோயில்களின் நினைவு வரும். இதில் உள்ள சில விமானங்களின் கீழே பட்டை செதுக்கிய லிங்கங்களைக் காணலாம்; மற்றவை காலியாக இருக்கின்றன.



கைலாசநாதர் கோயில்
சிவ தாண்டவ மூர்த்தி

ஒவ்வொன்றின் பின்னாலும் சுவரில் பிரம்மா விஷ்ணுக்கள் வழிபடுவதுபோல் சோமாஸ்கந்த உருவம் செதுக்கியிருக்கிறது. பல்லவர்கள் கோயில்களிலேயே எப்போதும் இப்படித்தான் இருக்கும். உள்ளே முற்றத்தில் வேறொரு சிவன் கோயிலும் இருக்கிறது. ஆனால் இதன் பின்னால் மேற்கே இருப்பதுதான் கர்ப்பக்கிருகம். உள் முற்றத்திலிருந்து பார்க்கும்போது இது ஒரே கோயில் அல்ல, சுற்றிலும் வரிசையாகப் பல கோயில்கள் சேர்ந்து எல்லாம் ஒரே மதிலுக்குள் அடங்கி இருக்கின்றன என்று தெரியும். இந்த முற்றத்துக்கு எதிரே அறைகள் வேறு இருக்கின்றன. இந்த அறைகள் ஒவ்வொன்றின் முன்னும் அடிப்பாகத்தில் சிங்க உருவம் செதுக்கிய இரண்டு அழகிய தூண்களைக் காணலாம்.

இந்தக் கோயிலில் உள்ள சிவபெருமான் உருவங்கள் இடத்துக்கு



பல்லவ காலத்துச்
சிங்கத் தூண்கள்

ஏற்றபடி வெவ்வேறு அளவில் இருந்தாலும் எந்த அம்சத்திலும் குறை இராதபடி அமைந்திருக்கின்றன. அந்தக் கால ரீதிப்படி மற்றத் தெய்வங்களைப் போல் சிவனுக்கும் எட்டுக் கைகள் இருக்கின்றன. பெரும்பாலும் சிவனுடைய தாண்டவ நடன உருவங்களே. ஆனால் வெவ்வேறு முத்திரைகளுடன் அமைந்தவை. இவைகளைச் செதுக்கிய சிற்பி சைவ ஆகம முறை, நாட்டிய சாஸ்திரம் இரண்டும் தெரிந்தவனாக இருக்க வேண்டும். ஆனால் மட்டரகமான கல்லில் செதுக்கியதால் இவை உதிர்ந்துகொண்டே வருகின்றன. மேலே காரை பூசி உருவத்தைச் செப்பஞ் செய்திருக்கிறார்கள். ஆனாலும் பழைய அழகு வருமா? நடுவே உள்ள கர்ப்பக் கிருகத்தின் விமானம் மற்றவைகளைவிடப் பெரியது.

பல்லவர் காலத்திலேயே கட்டிய மற்றொரு கோயில் வைகுண்டப் பெருமாள் கோயில். அதன் விமானத்தைப் பார்த்தாலே இது தெரியும். கைலாசநாதர் கோயில் கட்டின பிறகுதான் இதைக் கட்டியிருக்க வேண்டும். அதைவிட இது பல அம்சங்களில் சிறந்து விளங்குகிறது. உள்ளே நுழையும்போது அரை குறையாகக் கட்டின ஒரு கோபுரத்தைக் காணலாம். இது பிற்காலத்து விஜயநகர அரசர்கள் கட்டியதாக இருக்கவேண்டும்.

அடியில் சிங்க உருவம் செதுக்கிய தூண்கள் நிறைந்த மண்டபங்களைக் கடந்து சென்றால் உள்ளே கர்ப்பக்கிருகம் தெரிகிறது. அங்கே ஒரே இருட்டு. பட்டர் விளக்கேற்றியதும் மகாவிஷ்ணுவின் பெரிய உருவம் உற்சவ விக்கிரகத்தின் பின்னால் தெரிகிறது. உருவம் கறுப்பாக இருப்பதால் கொஞ்ச நேரம் கூர்ந்து கவனித்தால்தான் நன்றாகத் தெரியும். நகம்வரை எந்த அம்சத்திலும் குறை இராதபடி அமைந்த திவ்விய வடிவம்! பெரிய உருவமானதால் சிற்பி இப்படி நிதானமாகச் செய்து முடிக்கச் சௌகரியமாக இருந்தது. கர்ப்பக்கிருகத்துக்கு மேலே உள்ள மாடிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விஷ்ணு உருவமும் உபரிகையும் இருக்கின்றன. பௌத்த விகாரங்களைப் பார்த்துப் பல்லவர்கள் இப்படி அமைத்திருக்க வேண்டும். கீழே கர்ப்பக்கிருகத்தைச்சுற்றித் தாழ்வாரம் ஒன்று இருக்கிறது. அதன் இரண்டு வரிசைகளிலும்பல்லவ அரசர்களின் மெய்க்கீர்த்தியும், ஆட்சி, போர் முறைகளைப்பற்றிய விவரமும், குஸ்தி போடுவோர், நடனமாதர் இவர்களின் உருவமும் செதுக்கியிருப்பதைக் காணலாம்.

முக்தேசுவரர் கோயிலும் திரிலோகேசுவரர் கோயிலும் பல்லவர்

காலத்தில் கட்டியவைதான்; ஆனாலும் அங்கே அப்படி விசேஷமாக ஒன்றும் இல்லை.

பெரிய காஞ்சீபுரத்தில் உள்ள ஏகாம்ரேசுவரர் கோயில் சோழ அரசர்கள் கட்டியது; திருக்கல்லில் அமைந்தது. இதன் முன்னே ஒரு பெரிய மண்டபம் இருக்கிறது. அதைத் தாண்டினதும் கண்ணைக் கவரும் ஒரு பிரம்மாண்டமான கோபுரம். அதன் உயரம் 188 அடி. கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி இரண்டு பிராகாரம். உள்ளே இருக்கும் ஆயிரங்கால் மண்டபத்தில் இப்போது 550 தூண்களே இருக்கின்றன. கர்ப்பக்கிருகத்திலுள்ள சிவலிங்கம் மண் புற்று. அதைச் சுற்றிப் பொன் தகடு அடித்திருக்கிறது. பின்னால் ஒரு பழைய மாமரம் இருக்கிறது. "பார்வதி தேவி அதன் கீழ்ச் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்துகொண்டிருந்தாள். அப்போது வேகவதி ஆற்றில் வெள்ளம் பெருகி வருவதைக் கண்டு பயந்து போய்ச் சிவலிங்கத்தை அணைத்துக் கொண்டாள். உடனே சிவபெருமான் பிரத்தியட்சமானார்" என்பது புராண வரலாறு. ஒற்றை மாமரத்தின்கீழ் இருப்பதால் ஸ்வாமிக்கு ஏகாம்ரேசுவரர் என்று பெயர். கர்ப்பக்கிருகத்தைச் சுற்றியுள்ள மண்டபத் தூண்களின் அருமையான வேலைப்பாட்டைப் பார்த்ததும் ராமேசுவரத்தின் நினைவு வரும். எண்கோணமாகச் செதுக்கிய இந்தத் தூண்கள் ஒவ்வொன்றிலும் நாலுபக்கத்துச் சதுரங்களிலும் ராமாயணத்தில் ஒரு கட்டம், கிருஷ்ணலீலை, சிவலீலை இவைகளில் ஒரு காட்சி, இப்படிப் பல ரஸமான விஷயங்களைக் காணலாம். இதிகாச புராணங்களைச் சிறுவர்



கைலாசநாதர் கோயிலில் உள்ள ஒரு சிற்பம்

அறிந்துகொள்ள இது மிகவும் பயன்படும். இவற்றில் சிவபெருமான் காமனை எரிப்பது, மாமரத்தடியில் பார்வதியின் தவம், மார்க்கண்டேயன் பக்தி இவைகளைச் சித்திரிக்கும் அற்புதக் காட்சிகள் சிற்பியின் திறமையைக் காட்டுகின்றன. இவை தவிர, வெவ்வேறு அலங்காரமான வேலைப்பாடுகளையும் தூண்களில் காணலாம். வௌவால் நாற்றத்தைச் சகித்துக்கொண்டு கோபுரத்தின்மேல் ஏறிப் பார்த்தால் நகரத்திலுள்ள கோயில்கள், வேகவதி ஆற்றங்கரை எல்லாம் நன்றாகத் தெரியும்.

அடுத்தது, காமாட்சி அம்மன் கோயில். ஆதியில் இங்கே தாந்திரிகர்கள் இருந்தார்கள். பிறகு சங்கராசாரியர் வந்து அஷ்ட லட்சுமி

கள் கொண்ட யந்திரத்தை இங்கே பிரதிஷ்டை செய்தார். இப்போது இதற்குத்தான் பூஜை நடக்கிறது; அம்மனுக்கு அல்ல. கர்ப்பக்கிருகத்துக்கு அருகில் சாஸ்தா உருவம் ஒன்றையும் நான்கு சிஷ்யர்களுடன் சங்கராசாரியர் சிலை ஒன்றையும் காணலாம்.

பெரிய காஞ்சீபுரத்திலே பாண்டவ தூதப் பெருமாள், திரிவிக்ரமர், அஷ்டபுஜர், குமரக் கோட்டம் இப்படி இன்னும் பல கோயில்கள் உண்டு.

சின்னக் காஞ்சீபுரத்தில் உள்ள தேவராஜர் அல்லது வரதராஜப் பெருமாள் கோயிலின் வரலாறு ரசமானது:

ராமானுஜாசாரியர் காசியிலிருந்து திரும்பும்போது காட்டில் வழி தவறிவிட்டதாம். அப்போது அவர் எதிரே ஒரு வேடனும் வேடுவச்சியும் வந்தார்களாம். அவர்களோடு இவரும் போய்க்கொண்டிருந்தாராம். பாதி வழியில் வேடுவச்சிக்குத் தாகம் எடுத்ததாம்; ராமானுஜர் தாம் தண்ணீர் கொண்டு வருவதாகச் சொல்லிப் புறப்பட்டாராம். சற்றுத் தூரத்தில் ஒரு கிணறு தென்படவே அதில் இறங்கித் தண்ணீர் எடுத்துக்கொண்டு திரும்பினாராம். ஆனால் அங்கே யாரையும் காணவில்லை. தூரத்தில் வரதராஜ ஸ்வாமி கோயில் கோபுரம் தெரிந்தது. பகவான்தான் இப்படித் தமக்கு வழி காட்டினார் என்று தெரிந்துகொண்டார் ராமானுஜர். இப்போதுகூட அந்தக் கிணற்றிலிருந்து நீர் கொண்டுவந்து வரதராஜருக்குத் திருமஞ்சனம் நடத்துகிறார்கள். பின்னால் சோழ அரசர்களும் விஜயநகர அரசர்களும் இதற்குத் திருப்பணி செய்திருக்கிறார்கள். விஜயநகர அரசர் காலத்தில் கட்டிய ஒரு பெரிய மண்டபம் இங்கே இருக்கிறது. அதன் தூண்களில் உள்ள தாவும் குதிரைகளின் உருவமும், மேல் பாகத்திலுள்ள கற்சங்கிலிகளும், மற்ற இடங்களில் உள்ள பட்சி மிருகங்களின் உருவங்களும், கிருஷ்ண லீலைக் காட்சிகளும் அற்புதமான வேலைப்பாடுகள். ஆனால் பின்னால் முகம்மதியர் படையெடுத்தபோது, ஒவ்வொரு தூணிலும் ஓர் அம்சத்தையாவது அவர்கள் பின்னப்படுத்தாமல் போகவில்லை! இருந்தாலும் மண்டபத்தின் அழகு கெட்டுவிடவில்லை. இவை தவிர, கர்ப்பக்கிருகத்தைச் சுற்றித் தமிழ், கிரந்தக் கல்வெட்டுக்களும் இருக்கின்றன.

மொத்தத்தில் கோயில் மலிந்த இந்த நகரம் ஒரு கலைப் பொக்கிஷம் என்றுதான் சொல்லவேண்டும்.

ரெயிலில் ஏறும்போது

ஜெர்மனியில் நூரேம்பர்க் ஸ்டேஷனில் ஜன நெருக்கம் மிகுந்த ஒரு ரெயில் வண்டியில் வயது முதிர்ந்த ஒரு ஸ்திரீ ஏற வழியில்லை. அவள் ஜன்னல் வழியாக உள்ளே புகுந்தாள். தலை உள்ளே மாட்டிக்கொண்டது; கால் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது. அந்தப் பக்கமாய்ச் சென்ற ஒரு மனிதன் அந்தக் காலில் இருந்த பூட்ஸுகளைக் கழற்றிக்கொண்டு போய்விட்டான்.

—ராபர்ட் ஸி. லூயிஸ், 'நியூ யார்க் டைம்ஸ் மகஸீன்.'

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கே: ஈடன் தோட்டத்தில் ஆதாம் சந்தோஷமாக இருந்தாரே; ஏன்?

ப: ஏவாளுக்கு ஆடையாபரணம் வாங்குவதற்குச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லாமலிருந்ததுதான் காரணம்.

* * *

கே: சரித்திரத்துக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்?

ப: சரித்திரம் என்பது இறந்தகால அரசியலின் அச்சு; அரசியலோ வருங்காலச் சரித்திரத்தின் விதை.

* * *

கே: எந்த விஷயத்தில் நாம் நம் முன்னோர்களைவிடச் சிறந்தவர்கள்?

ப: நாம் சீக்கிரம் சிருஷ்டி பண்ணிச் சீக்கிரம் அழிக்கிறோம்.

* * *

கே: மகாத்மாவின் ஞாபகச் சின்னமாகச் சிலைகள் வைத்துக் கட்டிடங்களைக் கட்டுகிறார்களே; எவ்வளவு தூரம் இதை நீங்கள் விரும்புகிறீர்கள்?

ப: அவர்கள் இஷ்டப்படி செய்து கொள்ளட்டுமே. காந்தி தான் செத்துப் போய்விட்டார்; அவர்கள் கைக்கு அகப்படப் போவதில்லை.

* * *

கே: இந்தியாவில் ஜனத்தொகைக்கு ஏற்றபடி சினிமா இருக்கவேண்டுமானால் எந்த அளவில் இருக்கவேண்டும்?

ப: அமெரிக்காவில் 8000 பேருக்கு ஒரு சினிமா வீதம் இருக்கிறது. இந்தியாவில் இப்போது லட்சத்து ஐம்பதினாயிரம் பேருக்கு ஒரு சினிமா வீதந்தான் இருக்கிறது. சுமாரான நல்ல தியேட்டர் ஒன்றில் வாரத்துக்கு 15,000-க்குமேல் படம் பார்க்கலாம். ஒரு படம் 4 வாரத்துக்கு ஓடுவதாகக் கணக்குப் பண்ணினால் நமக்கு 5000 கொட்டகைகளாவது வேண்டும்; அறுபதினாயிரம் பேருக்கு ஒரு கொட்டகை என்ற அளவிலாவது இருக்க வேண்டும்.

* * *

கே: படம் பார்க்கிறவர்கள் நல்ல பாட்டைக் கேட்கும்போது கண்ணை மூடிக்கொள்வது ஏன்?

ப: பாடும் குரல் அதை உடையவர் முகத்தைக் காட்டிலும் நன்றாயிருப்பதால்தான்.

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஜூலை '49), பம்பாய்.

கே: இந்தியர்கள் கற்றுக் கொள்ளும்படி அமெரிக்கரிடத்தில் உள்ள சிறப்பான திறமை என்ன?

ப: பணத்தைச் சம்பாதிக்கும் திறமை; அதனால் புதியவற்றைக் கண்டுபிடித்தால், தொழில், உத்தியோகம், உணவு, உல்லாசப் பொழுதுபோக்கு எல்லாம் அவர்களுக்குக் கிடைக்கின்றன.

* * *

கே: பெண்கள் எப்போதாவது உண்மையைச் சொல்வதுண்டா?

ப: தூக்கத்தில் தங்களைப்பற்றியும் கோபத்தில் தங்கள் கணவன்மாரைப்பற்றியும் உண்மையைச் சொல்கிறார்கள்.

* * *

கே: ஒரு பெண்ணின் அறிவை எதைக் கொண்டு அளப்பது?

ப: அவள் உபயோகப்படுத்தும் வார்த்தைச் சிக்கனத்தைக் கொண்டு.

* * *

கே: உங்கள் இருதயம் இனிதாகவும் வார்த்தைகள் கடுமையாகவும் இருக்கக் காரணம் என்ன?

ப: நான் வார்த்தைகளைக் காசாக்குகிறேன். சீக்கிரம் விற்க வேண்டுமானால் அவை சுடச்சுட இருக்கவேண்டாமா?

* * *

கே: அமெரிக்காவில் இந்தியாவைப்போல உபவாசங்களும் 'சாகும் வரையில் உபவாசங்க'ளும் உண்டா?

ப: அமெரிக்காவில் சாகும் வரைக்கும் சாப்பிடுகிறார்கள்; அதனால் உணவின் விலை ஏறி நிற்கிறது.

* * *

கே: கணவனை இழந்த கைம்பெண், மனைவியை இழந்த புருஷன் இந்த இருவரில் யாருக்கு மதிப்பு அதிகம்?

ப: கைம்பெண்ணின் இளமைக்கும், மனைவியை இழந்தவனது பாங்கிப் பணத்துக்கும் மதிப்பு அதிகம்.

* * *

கே: சமைப்பது தங்கள் கௌரவத்துக்குக் குறைவு என்று புருஷர்கள் ஏன் நினைக்கிறார்கள்?

ப: அதெல்லாம் பெண்பிள்ளை இருக்கிறபோது. வயிற்றிலே பசி இருக்கும்போது புருஷர்கள் நன்றாகச் சமைக்கிறார்கள்; சீக்கிரமாகவும் சமைக்கிறார்கள்.

* * *

கே: சர்தார் படேல் ஒரு போதுமே காந்தி குல்லாயை அணிந்ததாகத் தெரியவில்லையே!

ப: அதனால் மறைக்க வேண்டிய வஸ்து ஒன்றும் அவரிடம் இல்லை.

* * *

கே: ஐ. நா. சபையில் உங்களைப் பேசவிட்டால் அங்கத்தினர்களுக்கு என்ன சொல்வீர்கள்?

ப: பேசாமல் ஊருக்குப் போய் உங்கள் வீட்டுக் கொல்லையில் காய்கறி பயிர் செய்யுங்கள்; சாப்பாட்டுக்காவது உபயோகப்படும் என்பேன்.

* * *

கே: நம்முடைய மந்திரிமார் மரங்களை நடுகிறார்களே; அதனுடைய கருத்து என்ன?

ப: சதா பேசிக்கொண்டே இருப்பதைவிட ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும். நாட்டை ஒரு பெரிய காடாக ஆக்க வேண்டுமென்பது அவர்கள் உத்தேசமாக இருக்கலாம்.

'உயிர் என்ன கருப்பட்டியா?' என்பார்கள். கருப்பட்டி அவ்வளவு இனிப்புள்ள பண்டம். அதைத் தயாரிப்பது முக்கியமான ஒரு குடிசைத் தொழில்.

மரத்திலிருந்து வெல்லம்

ஈசுவரன்

இந்தியாவில் கிராமங்கள்தான் அதிகம். குடிசைத் தொழில்கள் அங்கேதான் நடக்கின்றன. இவைகளில் முக்கியமானது கருப்பட்டி தயாரிப்பது. சமீபகாலத்தில் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் யோசித்து வருகிறது.

கருப்பட்டி தயாரிக்கும் முறை மிகவும் சுலபமானது. ஈச்ச மரம், தென்னை, பனை, அத்தி மரங்களிலிருந்து பால் எடுத்துச் செய்யலாம். இதை நிரா என்பார்கள். இந்த இனிய ரசம் தேகத்துக்கு மிகவும் நல்லது.

இப்படி எடுக்கும் நிராவை முதலில் சுத்தமாக வடிகட்ட வேண்டும். பிறகு அதை ஒரு பாத்திரத்தில் ஊற்றி உலையில் வைக்கவேண்டும். நிராவில் நிறையச் சுண்ணம்பு உண்டு. கொஞ்சமாகத் தீ போட்டு நிரா சூடேறும்போது அதில் உள்ள சுண்ணம்பு சிறிது சிறிதாக அடியில் படியும். இப்படிப் படிந்ததும் கலக்காமல் இதை வேறு பாத்திரத்தில் மாற்றிக் கொள்வது நல்லது. சுத்தமான இந்த நிரா நன்ருகப் பதமானதும் கருப்பட்டியாகிறது. இதுதான் சாதாரணமாகக் கிராமங்களில் தயாரிக்கும் முறை. இது சற்றுக் கறுப்பாகத்தான் இருக்கும்; கொஞ்சம் கசக்கும். இப்படி நிறம் குறைவாக இருப்பதற்குக் காரணம் நிராவிலுள்ள சுண்ணம்பு முழுதும் போகாதிருப்பதுதான். நன்ருகச் சுத்தம் செய்யும் விதம் இன்னும் கிராமங்களில் பரவவில்லை.

சரியானபடி தயாரிக்கும் முறை இதுதான்: முதலில் உலையில் காயவைத்துச் சுண்ணம்பை எடுக்கிருேமே, அதற்குப் பிறகு மறுபடியும் காய்ச்சும்போது 'ஸுபர் பாஸ்பேட்' என்ற உப்பைக் கொஞ்சம் போடவேண்டும். சில நிமிஷங்களிலேயே அவ்வளவு சுண்ணம்பும் அடியில் தங்கிவிடும். இந்த நிராவை மறுபடியும் வடிகட்டி உலையில் வைக்கவேண்டும். அதிகத் தீ போடாமல் நிதானமாகச் சூடு கொடுத்துப் பதமாக்கிஞல் சாதாரண வெல்லம் போலவே வெளுப்பாகவும் இருக்கும்; அதில் கசப்பும் இராது.

இப்படிச் சுத்தம் செய்து சர்க்கரைகூடத் தயாரிக்கலாம். ஆனல் இந்தச் சர்க்கரைக்குக் கருப்பட்டியின் நல்ல குணமும் புஷ்டியும் வராது. இந்தக் கருப்பட்டி தேகத்துக்கு ஒரு 'டானிக்' போன்றது. நம் உடலுக்கு வேண்டிய அநேக வகை உப்புக்கள் இதில் உண்டு.

கருப்பட்டி உற்பத்தியைப் பெருக்க நாம் அதிகமாகச் சிரமப்பட வேண்டியதில்லை. நம் ஊர்களில் எங்கே பார்த்தாலும் பனைமரம்

காப்பிரைட்: ஸர்வோதயம் (கன்னடம்: 4-6-'49), பெங்களூர்.

இல்லையா? அதிலிருந்து தாராளமாக எடுக்கலாம். இப்படிப் பனை அதிகமாக ஆகக் கரும்புச் சாகுபடியைக்கூடக் குறைத்துக் கொள்ளலாம். அதற்குப் பதில் கோதுமையோ நெல்லோ பயிரிடலாம்.

"அது எப்படிக் கட்டுப்படியாகும்?" என்று ஆச்சரியப்படலாம். புள்ளி விவரம் எடுத்துப் பார்த்தால் விஷயம் தெரியும்.

முதலில் தென் கன்னட ஜில்லாவை எடுத்துக்கொள்ளலாம். இங்கே மொத்தம் 5 கோடி பனை மரங்கள் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் கவனித்துச் சரியான முறையில் வெல்லம் தயாரித்தால் 11 லட்சம் டன் பனை வெல்லம் ஆகும். இப்போது கரும்பு பயிராகும் இடங்களிலெல்லாம் தானியம் பயிரிட்டால், கோதுமையானால் 2½ லட்சம் டன்னும், அரிசியானால் 3 லட்சம் டன்னும் அதிகமாக விளையும்.

நம் தேகத்துக்குச் சர்க்கரையைவிடப் பனை வெல்லம் மிகவும் நல்லது. இதிலுள்ள உப்புச் சத்து, கருப்பஞ் சாற்றில் கிடையாது. பனை வெல்லத்துக்கு அடுத்தது தென்னையிலிருந்து எடுப்பது. இந்த நீராவில் 71·89% சர்க்கரை, 7·70% குளூகோஸ், 0·96% புரதம், 5·04% கால்ஷியம் இவை உண்டு. விரிவான முறையில் இந்தத் தொழிலை ஆரம்பித்தால் தொழிலாளிகளின் லாப நஷ்டம் என்னவென்று பார்ப்போம். ஒருவன் பனையிலிருந்து நீரா எடுக்கிறான். அவனிடம் 60 பனை மரங்கள் உண்டு என்றால் வருஷம் ஒன்றுக்கு அவன் 6000 ராத்தல் வெல்லம் தயார் செய்யலாம். இதன் விலை சுமார் 1500 ரூபாய். தயார் செய்யும் செலவு மொத்தம் 150 ரூபாய் ஆகும். மூன்று பேருக்கு வேலை இருக்கும். வருஷத்தில் 6 மாதந்தான் வேலை. ஆகச் செலவு போக வருஷ வருமானம் மொத்தம் 1350 ரூபாய். வேலை இருக்கும் ஆறு மாதங்களுக்கு மூன்று பேருக்கும் மாதம் 75 ரூபாய் சம்பளமாகக் கிடைக்கும். பனையைப் பொறுத்தமட்டில் இந்தக் கணக்கு. இதைப் போலவே மற்ற மரங்களிலிருந்தும் லாபம் வராமல் போகாது. பனை மரம் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு மாதிரி இருக்கும். பலனிலும் சற்று வித்தியாசம் ஏற்படலாம். என்றாலும் நஷ்டம் வராது.

தென் கன்னடத்தில் உள்ள 5 கோடி பனை மரங்களையும் கவனித்து வேலை தொடங்கினால் 50 லட்சம் குடும்பம் கவலை இல்லாமல் காலம் தள்ளலாம். இதைப்பற்றி மகாத்மா காந்தி எவ்வளவோ எழுதியிருக்கிறார். அவருடைய முயற்சியால் 'கிராம உத்தியோகக் கமிட்டி' என்ற ஸ்தாபனம் வர்தாவில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறது.

1947-ஆம் வருஷத்திலிருந்து மத்திய சர்க்காரும் இதைக் கவனித்து வருகிறார்கள். இதில் தேர்ந்த தொழிலாளிகளையும் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். தென் கன்னட ஜில்லாவிலுள்ள மூடபத்ரீ என்னும் இடத்தில் இதற்கென்று ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்திருக்கிறார்கள். இதில் பல சிறுவர்கள் தொழில் கற்கிறார்கள். சர்க்காருடன் நாமும் சேர்ந்து உழைத்துத் தொழிலில் முனைந்தால் நிச்சயமாக லாபம் கிடைக்கும்.



குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்பமுடியாது. பதிலும் எழுத முடியாது.

—ஆசிரியர்.

எங்கள் வீட்டிலே ஒரு பூனைக் குட்டி இருந்தது. அதன் தொல்லை சகிக்கவில்லை. அதை வெளியேற்றத் தீர்மானித்தோம். எங்கள் நாலு வயதுக் குழந்தையிடம் இந்த விஷயத்தைத் தளுக்காகச் சொல்ல எண்ணினேன்.

“இதோ பார், கண்ணு! நாமோ எப்போது பார்த்தாலும் வெளியே போய் விடுகிறோம். பூனைக்குட்டி தனியாக வீட்டிலே கஷ்டப்படுகிறதே. அதை வெளியே ஓட்டி விடுவோமா?”

“வேண்டாம், அம்மா, பூனைக் குட்டியை ஓட்ட வேண்டாம். அதுக்குத் துணையாக ஒரு வேலைக்காரியை வெச்சுண்டுடுவோம்” என்றான் சிறுவன்.

--மிஸிஸ் எல். எம். ‘பேரெண்ட்ஸ் மகஸீன்.’

அம்மா தோட்டத்திலே களை பறித்துக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்திலே மூன்று வயதுச் சிறுவனும் களை பறிக்கத் தொடங்கினான்.

பெரிய கோரையாக ஒன்றைப் பார்த்து, முழுப் பலத்துடன் பிடித்து இழுத்தான். கோரை வேரோடு பிடுங்கிக்கொண்டு வந்தது. அந்த வேகத்தில் சிறுவன் பொதீர் என்று சாய்ந்தான். அவன் அதோடு நிற்கவில்லை. மறுபடியும் இன்னொரு

கோரையைப் பிடித்து இழுத்தான். அப்போதும் முன்போலவே உருட்டி யடித்துக் கொண்டு விழுந்தான். அவனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. "அம்மா, அம்மா! அது மறுபடியும் என்னைக் கீழே தள்ளிடுத்தம்மா" என்ருன்.

—ஜார்ஜ் ஏ. போத்திகாரி, 'மகஸீன் டைஜெஸ்டு.'

என் அக்காள் மகன் பள்ளிக்கூட லீவில் ஊருக்கு வந்திருந்தான். அவன் படிப்பைப்பற்றி விசாரித்தேன்.

"எங்க வாத்தியார் ரொம்பப் பொல்லாதவர்" என்ருன்.

"அப்படி என்ன செய்வார்?"

"நாங்க ஒரு தப்புச் செய்தால், ஓர் அடி அடிப்பார். இரண்டு தப்புக்கு இரண்டு அடி. மூணுக்கு மூணு. நாலுக்கு நாலு - இப்படியே அடிப்பார்."

நான் சிரித்துக்கொண்டே, "எண்ணவே முடியாத தப்புச் செய்தால் என்ன செய்வார்?" என்று கேட்டேன்.

"தம் தலையிலே அடித்துக் கொள்வார்" என்று தயங்காமல் பதில் சொன்னுன் சிறுவன்.

—என். லட்சுமி, பழமானேரி.



சாரு நாலு வயதுக் குழந்தை. அவனை அழைத்துக்கொண்டு சர்க்கஸுக்குப் போயிருந்தேன். சிங்கத்தின் விளையாட்டு நடந்துகொண்டிருந்தது. சாரு கொடி முந்திரிப் பழம் தின்று, தோலைத் துப்பிக்கொண்டேயிருந்தான். இடையிலே அவனுக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்துவிட்டது.

"ஏன் அப்பா, இந்தச் சிங்கம் என்ன தின்னும்?" என்று கேட்டான்.

"ஆடு மாடு எல்லாம் தின்னும்" என்றேன்.

"மனுஷாளைத் தின்னுமோ?"

"ஊம்; அகப்பட்டால் நன்னுத் தின்னும்."

"தின்னுட்டுத் தோலையெல்லாம் துப்பிடுமோல்லியோ?" என்ருன் சாரு.

—டி. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்.

சிறுமி மரியாளின் அம்மா, "மரியா, உன் அத்தை சூசாளுக்குப் புதிசாகக் குழந்தை பிறந்திருக்கு. அதற்கு உன் அம்மா மாமி; உன் அப்பா மாமா; நீ அம்மங்காள். என்ன, தெரிந்ததா?" என்று அவளிடம் சொன்னுள்.

"அடேடே! இத்தனையும் இவ்வளவு சுருக்க ஏற்பாடு செய்துட்டாங்களா?" என்ருள் சிறுமி.

—வில்லியன், காரொனெட்.

நாம் சிறுபான்மையினராக இருந்தால் நமது தைரியத்துக்குச் சோதனை; பெரும்பான்மையினராக இருந்தால் நமது பொறுமைக்குச் சோதனை.

கிருமி அசுரர்கள்

புராணக் கதைகளில் வரும் அசுரர்களின் மாயாவித்தனங்களையெல்லாம் கேட்டிருக்கிருேம். அவைகளைத் தோற்கடிக்கிறது இந்த நோய்க் கிருமிகளின் செயல். 'டாரண்டோ ஸ்டார்' என்ற பத்திரிகையில் உள்ள கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது இது.

ஆராய்ச்சி பெருகப் பெருக மனிதன் புதிய புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கிருன். புதிய புதிய போக வஸ்துக்களை உண்டாக்குகிருன். தன்னுடைய சுகத்துக்கு வைரிகளாக இருக்கும் பிராணிகளை ஒழிப்பதற்குரிய உபாயங்களைக் கண்டுபிடிக்கிருன். வியாதிகளுக்கு மருந்துகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளுக்குக் கணக்கில்லை; வழக்கில்லை. தினந்தோறும் ஏதாவது ஒன்று இரண்டு புதிய மருந்துகளின் பெயர்கள் காதில் விழுகின்றன. அடுத்த வாரம் அந்த மருந்துகளைப்பற்றிய விவரம் விளம்பரத்தில் வருகிறது. அதற்கு அடுத்த வாரம் நம்முடைய நண்பர் உடம்பில் அந்த மருந்தே ஊசி மூலம் ஏறிவிடுகிறது.

நீரிழிவு வியாதிக்காரர்களுக்குப் பாதுகாப்பை அளிக்கும் இன்ஸுலின் வந்தது; பிரமாதப்பட்டது. பிறகு மருந்துக்கு அதிக வீரியத்தை உண்டாக்கும் பெனிஸிலினைக் கண்டுபிடித்தார்கள்; உபயோகமற்ற காளானுக்குக் கௌரவம் உண்டாயிற்று. ஸ்ட்ரெப்டோமைஸின் என்று ஒரு புது மருந்து வந்திருக்கிறது. பாலிமிக்ஸின், ப்ராமின், ஏரோமைஸின், பேஸிட்ராஸின், க்ளோரோமைஸெடின், ஸப்டிலின், நிஸின், கிரிஸின், க்ளாவாஸின், ஸ்ட்ரெப்டோத்ரிசின், பைபர்மின், டார்விஸல், ப்ளூரோடின், இந்த மாதிரி வரும் மருந்துகளுக்கு முடிவே இல்லை.

இத்தனை மருந்துகளைக் கண்டுபிடித்து வருகிருர்களே! மனித ஜாதி நோய்களிலிருந்து விடுபட்டுச் சௌக்கியத்தை அடைந்திருக்கிறதா? அதுதான் இல்லை; புதிய புதிய மருந்துகள் வருவதற்குமுன் புதிய புதிய வியாதிகள் முளைத்து விடுகின்றன. அந்த வியாதிகளுக்கு விசித்திரமான பெயர்களிட்டு அவற்றைப்பற்றி ஆராய ஆரம்பித்து விடுகிருர்கள். வியாதிகளின் மூலக்காரணமாக இருப்பவை சில கிருமிகள் என்று முடிவு கட்டுகிருர்கள். அந்தக் கிருமிகளைக் கொல்ல வழி தேடுகிருர்கள். கிருமி ஸம்ஹாரம் நடந்துகொண்டே இருக்கிறது. ஆனல் நோய்கள் ஒழிந்த பாடில்லை. காரணம் என்ன? புதிய கிருமிகள் உற்பத்தியாகின்றன. பழைய கிருமிகளும் ஒன்றுக்குப் பத்தாக அசுரர்களைப்போல உயிர் பெற்றெழுகின்றன. இதுதான் ரகசியம்.

கிருமிகள் செத்துப் போனதாக எண்ணி மகிழ்ந்துகொண்டிருக்க நியாயம் இல்லை. அமெரிக்காவிலுள்ள இல்லினய்ஸ் யூனிவர்ஸிடியில் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி

செய்தார்கள். ஒரு கிருமி செத்துப் போய் மூன்று நாளுக்குப் பிறகு மீண்டும் உயிர் பெற்றெழும் என்று கண்டுபிடித்தார்கள். கனடாவிலும் ருஷ்யாவிலும் உள்ள ஆராய்ச்சிக்காரர்கள் வட சமுத்திரத்திலுள்ள சில கிருமிகளைப்பற்றி ஆராய்ந்தார்கள். பல ஆண்டுகள் பிணமாகக் கிடந்த அவை மீண்டும் உயிர் பெற்றுத் துள்ளிக் குதிக்க வகையுண்டு என்று தெரிந்துகொண்டார்கள். பூஜ்யம் டிகிரிக்கும் கீழே உள்ள குளிர்ச்சியான பிரதேசங்களில் ஆயிரம் ஆண்டுகளாக உயிரற்றது போலக் கிடக்கும் கிருமியை வேறு இடத்துக்குக் கொண்டுவந்து உயிரோடு உலவச் செய்ய முடியும்.

பாக்டீரியா என்ற நுண்ணுயிர்கள் பெரும்பாலும் தீங்கு விளைவிப்பவை அல்ல. இதுவரையில் அவற்றால் அபாயம் ஒன்றும் இல்லை என்று தான் எண்ணிவந்தார்கள். ஆனால் சில நுண்ணுயிர்கள் திடீரென்று விஷத்தன்மை மிகுந்து வியாதியையும் மரணத்தையும் உண்டாக்கி விடுகின்றன. இன்னும் சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட வியாதிக்கு மூலமான கிருமிகளைக் கொல்ல மருந்தைச் செலுத்தினால், அந்த மருந்தே வேறு வகையான கிருமிகள் உண்டாகக் காரணமாகி விடுகிறது.

இது மாத்திரம் அல்ல. புதிய புதிய கிருமிகள் இயற்கையில் உற்பத்தியாகிக்கொண்டே இருக்கின்றன. ஸ்ட்ரெப்டோமைஸின் கிருமியை ஒழிக்குமென்று நினைக்கிறோம். சில கிருமிகள் ஸ்ட்ரெப்டோமைஸினையே ஒழித்துவிடுகின்றன. இன்னும் பெரிய ஆச்சரியம், அதை உண்டு பெருகிக் குடும்ப விருத்தியும் செய்கின்றன!

பழைய கிருமிகளைக் கொல்லும் முயற்சியில் புதிய கிருமிகளை உண்டாக்கிவிடுகிறான் மனிதன். பாக்டீரியாக்கள் லட்சோபலட்சம் இருக்கின்றன. முப்பதாயிரம் பாக்டீரியாக்களில் ஒன்று நோய்க்கிருமியாக மாறலாம் என்று சொல்கிறார்கள்.

கிருமியைக் கொல்லுவதற்காகப் பிரயோகம் செய்யும் மருந்துகள் அந்தக் கிருமி வம்சத்தையே ஒழித்துவிடுவதில்லை. நூற்றுக்குப் பத்துக் கிருமிகளிடம் அந்த மருந்துகளின் ஜபம் சாய்வதில்லை. அந்தப் பத்துக் கிருமிகள் நூறாகி ஆயிரமாகி லட்சமாகி மேலும் மேலும் பெருகிவிடுகின்றன.

இல்லினாய்ஸ் யூனிவர்ஸிடியில் மாண்ட நுண்ணுயிர் மீண்ட அற்புதம் நடந்தது. சோதனைக் கூடத்தில் இருந்த பாக்டீரியாவை, ஸ்ட்ரெப்டோமைஸினைப் பிரயோகித்துக் கொன்றார்கள். அது செத்தே போய் விட்டது என்று பல சோதனைகளால் நிச்சயம் செய்தார்கள். மூன்று நாள் கழித்து மற்றொரு மருந்து போட்டார்கள். மாண்ட உயிர் மீண்டு விட்டது.

கிருமிகள் மனிதர்களைக் கொல்வதற்குச் சமயம் பார்த்துப் படையெடுக்கின்றன. அமெரிக்காவில் நடுத்தர வயதுள்ள ஒருவருக்கு நிமோனியா ஜுரம் வந்தது. அவருக்குக் கந்தக ரஸாயனங்கள் (ஸல்பாட்ரக்) கொடுத்து வந்தார்கள். குணமாகவில்லை. பிறகு பெனிஸிலினை உடம்பில் ஏற்றினார்கள். முதலில் சிறிது குணமுகமாக இருந்தது. ஆனால் திடீரென்று நிலை மோசமாகி நோயாளி இறந்து போய்விடுவார் என்று நினைக்கும்படி ஆகிவிட்டது. டாக்டர்கள் ஆராய்ச்சி நடத்தினர்கள். பெனிஸிலினால் அழிக்க முடியாத சில நுண்ணுயிர்கள் திடீரென்று பெருகி வளர்ந்துவிட்டன என்று அறிந்தார்கள்.

மறுபடியும் டாக்டர்கள் ஸ்ட்ரெப்டோமைஸினைப் பிரயோகம் செய்து புதுக் கிருமிப் படையைக் கொன்ருர்கள். ஐந்து நாளுக்குப் பிறகு நோயாளி மரணவஸ்தையிலிருந்து மீண்டான். ஜுரம் தணிந்தது; நோய் குணமாகி வந்தது. பதினெரு நாளுக்குப் பிறகு மறுபடியும் அபாயமான நிலைக்கு வந்தான். மறுபடியும் சோதனைகள் நடந்தன. புதிய பாக்டீரியாக்களைக் கொன்றபோது, பழைய நிமோனியாக் கிருமிகள் புதுப்பலம் பெற்று விருத்தியாகி விட்டன என்ற செய்தி தெரிய வந்தது. அவற்றைக் கொல்ல மீண்டும் பெனிஸிலினைக் குத்தி ஏற்றினுர்கள். ஆறு மாதம் கழித்து அந்த மனிதர் நோய் நீங்கி ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினுர். அவர் நோய்வாய்ப் பட்டதுமுதல் டாக்டர்கள் சோதனைகள் செய்து, நோய்க் கிருமிகளின் யுத்த முறைகளைத் தெரிந்துகொள்ள நேர்ந்தது.

பிராட்யூஸ் மிராபிலிஸ் என்று ஒரு கிருமி இருக்கிறது. அது உணவுப் பொருளில் சாதாரணமாக இருக்கும். ஆனுல் அதனுல் அபாயம் ஒன்றும் இல்லை என்று சொல்லி வந்தார்கள். ஒரு டாக்டர் சென்ற வருஷம் சிக்காகோவில் இந்த அப்பாவிக் கிருமி, மரணத்தை உண்டாக்கும் ஆற்றல் பெற்றதென்பதைக் கண்டுபிடித்தார். இப்படிச் சில சமயங்களில் அபாயமற்ற சில கிருமிகள் அபாயகரமான ஆற்றலைப் பெறுவதுண்டு.

இன்னும் சில கிருமிகள் மருந்தே உறைக்காத நிலையை அடைவதுண்டு. கொப்புளங்களுக்குக் காரணமான கிருமி ஒன்று உண்டு; ஸ்டாபைலோகோகஸ் என்று அதற்குப் பெயர். அது வெகு சீக்கிரத்தில், பெனிஸிலின்கூட உறைக்காத நிலையை அடைகிறது. மருந்தின் ஆற்றலை வென்று, உயிரோடு வாழும் கிருமிகள் சந்ததிகளைப் பெருக்குகின்றன. அந்தச் சந்ததிகளும் கிருமி கொல்லிகளாகிய மருந்துக்குப் பயப்படாமல் சுகமாக வாழும் ஆற்றலைப் பெறுகின்றன. இந்தச் சந்ததிகள் சில மணி நேரங்களில் உண்டாகி விடுகின்றன.

பாக்டீரியாக்களில் இரண்டு வகை உண்டு. ஒருவகை, கிருமி நாசினியால் பாதிக்கப்படுபவை; இரண்டாவது வகை, கிருமிநாசினியால் பாதிக்கப்படாதவை. சில நுண்ணுயிர்கள் பெனிஸிலினை அழிக்க ஒரு வகையான திரவத்தை வெளியிடுகின்றன.

சிக்காகோ யூனிவர்ஸிடியில் சிலர் ஆராய்ச்சி செய்தார்கள். ஸ்ட்ரெப்டோமைஸினைப் பிரயோகம் செய்தால் இந்த நுண்ணுயிர்களில் சில அழிகின்றன. சில அதிகப்படியான மருந்தையும் எதிர்த்து நிற்கின்றன. இன்னும் சில அந்த மருந்து இருந்தால்தான் உயிர் வாழும். இதிலிருந்து மூன்றுவகையான பாக்டீரியாக்கள் இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் பேசுகிருர்கள். ஸ்ட்ரெப்டோமைஸினுல் அழிக்கப்படுபவை, அதனுல் வாழ்பவை, அதை எதிர்த்து நிற்பவை என்ற மூன்றுவகை. ஒரே இனத்தில் இந்த மூன்று வகையும் இருக்கலாம்.

புதிய கிருமிகள் வரவர, புதிய மருந்துகள் வருகின்றன. அதிக ஆற்றலுள்ள கிருமிகள் தோன்றினுல், அவற்றை அழிக்கப் பின்னும் காரமான மருந்துகளை ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடிக்கிருர்கள். இந்த இரண்டும் ஒன்றை ஒன்று தொடர்ந்துகொண்டே இருக்கின்றன, உருவமும் நிழலும் போல. இதற்கு முடிவு நிலை என்ற ஒன்று இல்லை என்றே தோன்றுகிறது.

கார்ட்டூன் கதம்பம்

‘காங்கிரஸ் - தொழிற் சங்க உறவு ஆத்மிகமானது’ - சங்கர்ராவ் தேவ்.

—‘பம்பாய் கிராணிகிள்’



‘பெரிய கரடியிடம் எச்சரிக்கை. எங்களோடு ஒத்துழைப்பதே உங்களுக்கு நன்மை’.

—‘ஸவுண்ட்’



‘காப்பாற்ற வாருங்கள்’ —‘சங்கர்ஸ் வீக்லி’


'என் பிள்ளைக்கு வேலை வாங்கிக் கொடுங்கள்.'
'செக்ரடரி சாகேப், இறக்குமதி லைசென்ஸ் அவசரமாய் வேண்டும்.'
'இந்தா பத்து ரூபாய் இனாம். ஐப்தி வாரண்டைக் கிழித்துவிடு.'
'இது தங்கள் சிரமத்துக்கு இருக்கட்டும். ஜட்ஜிடம் பலமாகச் சிபார்சு செய்யுங்கள்.'
'சகோதர சகோதரிகளே, இன்று நம் சர்க்காரின் சகல இலாக்காவிலும் லஞ்சம் தாண்டவமாடுகிறது…'

—ஸரிதா.

இதுதான் பிழை

[32-ஆம் பக்கத்தில் உள்ள வாசகத்தை நீங்களே திருத்திப் பார்க்குமுன் இதைப் படிக்க வேண்டாம்.]

1. பொறுத்த விஷயம் என்று இருக்கவேண்டும். பொருந்திய என்ற பொருளைத் தருவதாக எண்ணிப் பொருத்த என்று எழுதுவது பிழை.

2. கவர் என்பதன் அடியாகப் பிறந்தது கவர்ச்சி; கவற்சி என்பதற்குக் கவலையடைதல் என்ற பொருள்தான் உண்டு.

3. மனஸ்தத்துவம் என்று வடமொழியை அநுசரித்தும், மனத்தத்துவம் என்று தமிழை அநுசரித்தும் வருமேயன்றி மனோதத்துவம் என்று வராது.

4. நடக்க, செயலாற்ற, சொல்ல என்று உம்மை இல்லாமல் சொல்லிவிட்டு, களிக்கவும் அடையவும் என்று இரண்டுக்கு மாத்திரம் உம்மையிட்டுச் சொல்வது பிழை. பின் இரண்டிலும் உள்ள உம்மையை எடுத்துவிடலாம்; அல்லது முன் உள்ளவற்றிற்கும் நடக்கவும், செயலாற்றவும், சொல்லவும் என்று உம்மையைச் சேர்த்துக் கொள்ளலாம்.

5. சித்திரம் வரைபவன் சித்திரகாரன். சைத்திரிகன் என்பதற்குச் சித்திரை மாதத்தின் சம்பந்தமுடையவன் என்றுதான் பொருள் ஏற்படும்.

6. கம்ப நாட்டாழ்வார் என்றது அவர் ராமபக்தர் என்று கருதிக் கூறியது. ஆழ்வார் என்ற பட்டம் பெற்ற மாத்திரத்தில் ஆழ்வார்கள் கூட்டத்தில் சேர முடியாது. ஆழ்வார்கள் பன்னிருவர் என்பது வரையறையான எண்.

7. ஜப்பான் கடலிடையே உள்ள தீவுக் கூட்டம். சீனா ஆசியாக் கண்டத்தின் கீழ்ப்பகுதி. இரண்டுக்கும் இடையே ரெயில் போட வழியில்லையே!

8. சிற்றம்பலம் என்பது சிறிய அம்பலம் என்ற பொருள் உடையது. அது சிதம்பரம் என்பதன் திரிபு அன்று. பேரம்பலம் என்ற சபை ஒன்றும் அங்கே உண்டு.

9. மற்ற மலைகளை மலைவளம் செறிந்ததாகச் சொன்னாலும் சொல்லலாம்; சுவாமிமலையைச் சொல்லவே கூடாது. அங்கே மலை ஏது? வெறும் கட்டுமலை.

10. ராமதீர்த்தர் ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய அடியார் கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்ல.

11. சூளாமணி என்பது ஜைன காவியம்; அதில் புத்த தர்மத்தின் உயர்வை எப்படிக் காண முடியும்? மணிமேகலைதான் புத்த மதச் சிறப்பை எடுத்துச் சொல்லும் காவியம்.

12. குறள் வெண்பாவினால் அமைந்த நூல் வேறு இல்லை என்பது தவறு. ஒளவை குறள் என்ற ஒரு நூல் இருக்கிறது. குறள் வெண்பாவில் அமைந்த நூல்களிலே சிறந்ததாக இருப்பதனாலே திருக்குறள் என்ற பெயர் வழங்குகிறது.

யாரும் பயப்பட வேண்டாம்; இந்த மசோதா நம் சட்டசபைக்கு வந்தால், கண்டிப்பாய் நிறைவேறுது.

நடை வரி

ஜேஸிந்த்

சென்னை சர்க்காருக்கு நிதி போதவில்லை. அவர்கள் அதிசயமான புதுப் புது வரிகளைப் போட்டிருக்கிறார்கள்; போட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். யதேஷ்டமாக வருமானம் வரக்கூடிய இன்னும் ஒரு வரி போட இருக்கிறது. அது அதிசயம் இல்லாதிருக்கலாம்; ஆனால் புதிசு என்பதில் சந்தேகமில்லை. நோக்கங்களையும் காரணங்களையும் விளக்கும் முன்னுரை இல்லாமல், அதற்குரிய நகல் மசோதாவை இதோ தருகிறேன்:

1949-ஆம் ஆண்டு நடைவரி ஆக்ட்

சுருக்கமான பெயர்: இந்தச் சட்டம் '1949-ஆம் வருஷத்திய நடைவரி ஆக்ட்' என்று வழங்கும். (சென்னை மாகாணத்தில் வரி நடக்கவில்லை; அதிவேகமாய் ஓடுகிறது. இதைக் கவனத்தில் வைக்க வேண்டும்.)

செலாவணியாகும் பிரதேசம்: சென்னை மாநகரம், மாகாணத்தின் இதர நகரங்கள், பட்டணங்கள் இவற்றில் தெரிந்தோ தெரியாமலோ உள்ள சகல சந்து பொந்துகளும், பெயர் சூட்டியோ சூட்டாமலோ இருக்கும் சகல ரஸ்தாக்களும், சுவடு விழுந்தோ விழாமலோ உள்ள நாட்டுப் புறத்தடங்களும் உள்படச் சென்னை மாகாணம் முழுவதற்கும் இந்தச் சட்டம் செலாவணியாகும்.

விளக்கமான அர்த்தங்கள்

நடை: இங்கே 'நடை' என்றால் ஒரு மனிதனின் கால்மீது உள்ள உடல் நிறையை, தன்னிச்சையாகவோ, பிறர் தூண்டுதலாலோ, சில அடி அல்லது சிறிது தூரத்துக்குத் தள்ளிவைப்பது என்று பொருள்படும்.

வரி: ஒரு மனிதனின் முதுகை முறித்து, அவன் பையைக் காலி செய்யும் சங்கதி. சென்னை மாகாண வாசிகளுக்கு இப்போது இது மிகவும் சகஜமாகிவிட்டபடியால், இதை இதற்கு மேல் விவரிக்கத் தேவையில்லை.

ஆக்ட்: நாடக ஆக்டுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இது சாதாரண மனிதனைப் பயமுறுத்துகிற ஒரு கருவி.

1949: 1950 அல்லாதது.

இந்தச் சட்டத்தின் கீழே வருத்த விதிகள்

(1) நடக்கக் கூடிய விதமாக உடம்பு அமையப் பெற்ற ஒவ்வொரு மனிதனும் வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வரி செலுத்தவேண்டும். வரி செலுத்த மழுப்புகிறவன், அதோடு கூடவோ அதைத் தவி

மூலம்: சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்: 3-7-'49), புது டில்லி.

ரவோ நடையில் ஈடுபட்டால், இந்த விதிகளில் கீழே சொல்லப்பட்ட கண்டிப்பான தண்டனைகளுக்கு உள்ளாவான்.

(2) இந்தச் சட்டத்தில் கண்டபடி குற்றம் செய்கிறவனுக்கு ஆறு மாதக் கடுஞ்சிறைவாசமோ அல்லது 500 ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கலாம். (இந்தச் சட்டம் சிறைச்சாலைகளிலும் செலாவணியாகும். அங்கே உள்ள கைதி எவனும் வரி செலுத்தாமல் நடையில் ஈடுபடக் கூடாது.)

(3) நடை என்பதில் மனிதனின் கீழ்க்கண்ட அசைவுகளும் அடங்கும்:

ஓட்டம்: சாதாரணமான 'நடையை' விட வேகமாகக் கால்களை அடி எடுத்து வைப்பது.

ஊர்வது: மண்டியிட்டுத் தவழ்வது, மார்பினாலோ மல்லாந்தோ ஊர்வது, இடத்துக்கு இடம் செல்லக் கூடியவிதம் தாண்டுவது, குதிப்பது, நொண்டுவது, பாய்வது, தாக்குவது முதலிய சகலமும் இதில் அடங்கும். (இந்த வரி மூலம் அதிகப் பணம் கிடைப்பதற்காக, நடக்க முடியாத நொண்டிகளுக்கு மரக் கட்டைகள் விற்கப்படும். இந்தக் கட்டைகளைச் சர்க்காரிடம் அத்தாட்சி பெற்ற வியாபாரிகளிடமிருந்துதான் யாரும் விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும்.)

எந்த மனிதனாவது ஆகாயத்தில் நடக்கக் கற்று அப்படி நடக்கத் தொடங்கிவிட்டால், அவனும் இச் தச் சட்டத்தின்கீழ் நடக்கிறவனாகவே கருதப்படுவான்.

நடப்பவர் எம். எல். ஏ., அல்லது மந்திரியாக இருந்தால் ஒழிய மற்ற எவருக்கும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தச் சட்டத்தின் நடைவரியிலிருந்து விலக்கு அளிக்கப்படமாட்டாது.

முடிவுரை

மந்திரிகளுக்கோ அல்லது அவர்களைப் போன்ற வேறு சிலருக்கோ இதிலிருந்து விலக்கு அளிப்பதால் ஒன்றும் குடி முழுகிப்போய்விடாது. ஏராளமாய் வரி கொடுப்பவர்கள் என்னவோ கோடிக்கணக்கான ஏழை மக்கள்; ஆகையால் இந்த மசோதாவின் மூலம் கொள்ளை கொள்ளையாய்ப் பணம் கிடைக்கும்.

மோட்டார் வாகனங்களின் வரி சென்னையில் அதிகப்படுத்தப்பட்டிருப்பதால், பஸ் கட்டணம் தன்னாலே அதிகமாகிவிடும். அநேகர், அதிகச் செலவைக் குறைக்க, பஸ்ஸில் ஏறுவதைவிட்டு நடப்பதையே விரும்புவார்கள். இந்த நடைவரி நிச்சயம் அப்படிப்பட்ட சமூகவிரோதிகளை வரி செலுத்தச் செய்துவிடும்.

ஒவ்வொரு மனிதனும் மற்ற எவனுக்கும் (காரில் செல்பவனைத் தவிர) சமமே. தானே நடந்து அல்லது வேறு ஒருவன் முதுகில் ஏறிச் செல்லும் ஒவ்வொருவன்மீதும் வரி விதிப்பதைவிட வேறு எப்படி அதை நாம் நிரூபிக்க முடியும்?

மேன்மை அடைய வழி

(1) உலகத்தில் உயர்ந்தெழுவது.

(2) காலையில் விழித்தெழுவது.

இந்த இரண்டுக்கும் மிக நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது.

—ஜான் நியூட்டன் பேக்கர்

சிறு கதை:

வீடு காலி

எம். ஏ. மஜூம்தார்

****

ஜாகை கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கும் இந்தக் காலத்தில், மகா மலிவான வாடகைக்குக் கிடைத்த மாளிகையை எவனாவது இழப்பானோ? இழக்கமாட்டான். ஆனால் இந்த மாளிகையோ?

****

சென்ற திங்கட்கிழமை மகா அதிசயமான ஓர் அநுபவம் ஏற்பட்டது. அது பகற் கனவா, மனப்பிராந்தியா, மூளைக் குழப்பத்தால் விளைந்த விளைவா - என்ன என்றே புரியவில்லை. இருபத்தைந்து ரூபாய் கையை விட்டுப் போனது எப்படிப் பொய்யாகும்? அதைவிட ஆச்சரியம் அதற்கு என் பாலஜோதிட நண்பன் சோமன் சொல்லும் விளக்கந்தான்.

அன்று நான் ஜோகேசுவரிக்குச் செல்லத் தீர்மானித்து, சர்ச்கேட் ஸ்டேஷனை அடைந்தேன். ஜோகேசுவரியில் என் தகப்பனாரின் நண்பர் ஒருவர் இருக்கிறார். அவரைப் பார்த்தால், ஒருவேளை என் வீடுவேட்டைக்குக் கொஞ்சம் உதவி புரிவாரோ என்று எண்ணினேன். பிளாட்பாரம் அதிரக் 'கடபுடா' என்று சப்தித்துக்கொண்டு வண்டி வந்து நின்றது; ஏறினேன்.

மூன்று மாதம் ஆயிற்று, நகரில் எனக்கு உத்தியோகம் ஆகி. என் தாயாதி ஒருவன் அன்பு கூர்ந்து, எனக்கு ஜாகை கிடைக்கும் வரைக்கும் தங்க இடம் கொடுத்திருக்கிறான். என் மனைவியும் இரண்டு குழந்தைகளும் சௌராஷ்டிரத்தில் மாமனார் வீட்டிலேயே இருக்கிறார்கள். தாயாதி மிகவும் பொறுமையாய்த்தான் இருக்கிறான். ஆனால், அவன் மனைவி என்னைக் கிளப்பிவிட ஜாடையும் சைக்கினையுமாகச் சொல்லுகிறாள். நானும் வீட்டுக்கு அலைந்து அலைந்து பார்த்துவிட்டேன்; செருப்புத் தேய்ந்ததுதான் மிச்சம்.

ஜோகேசுவரி வந்து சேர்ந்தது. மணி 2-15. ஸ்டேஷனை விட்டு வெளியேறினேன். கொளுத்தும் வெயிலில் புழுதி பறக்கும் ரஸ்தாவிலே மலைக்குன்றுகளை நோக்கி நடந்தேன். எங்கேயோ ஞாபகமாய் வெகுதூரம் சென்றுவிட்டேன். களைத்துப் போனேன். 'இனி நடக்க முடியாது' என்று தோன்றியது. சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒரு பெரிய அரசமரம் தென்பட்டது. அதன் நிழலில் போய் உட்கார்ந்தேன். முகத்திலே இளங்காற்று வீசியது. 'குக்கூ-குக்கூ' என்று குயில் கூவியது. கிளை ஒன்றில் ஓர் அணில் உட்கார்ந்து

காப்பிரைட்: ஏ. பி. பத்ரிகா (ஆங்கிலம்: பூஜா மலர், '48), கல்கத்தா.

எதோ கொட்டையைக் கொரித்துக் கொண்டிருந்தது.

நிம்மதியான இடம். மனத்துக்கு மிகவும் ஆனந்தமாயிருந்தது. என்னவோ மனோராஜ்யமெல்லாம் செய்யத் தொடங்கிவிட்டேன். பக்கத்திலே எதாவது ஒரு பூதத்தின் உதவியால் ஒரு மாளிகை அகப்பட வேண்டும்; அதிலே சகல சௌகரியங்களும் அமைந்திருக்க வேண்டும்; அது இருபத்தைந்து ரூபாய் வாடகைக்குக் கிடைக்கவேண்டும்; வீட்டுக்காரன் நம் கண்ணிலேயே படாமல் போய்விட வேண்டும் - இப்படியெல்லாம் ஆசைப்பட்டேன்.

என்ன வீண் மனோராஜ்யம்! மறுபடியும் சலிப்புடன் எழுந்து நடந்தேன். ஒரு பர்லாங் தூரம் சென்றிருப்பேன். அப்போது நான் கண்டது என்ன ஆச்சரியம்! நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, நான் சொல்லுவது முற்றும் உண்மை.

அதோ என் கண்ணுக்கு எதிரே திறந்து கிடந்த 'கேட்' ஒன்று தென்பட்டது. பொன் முலாம் பூசிய அதன் தூண்களில் ரோஜாப் புஷ்பங்கள் செதுக்கியிருந்தன. ஒரு தூணிலே 'வீடு காலி - குடிக்கூலிககு விடப்படும்' என்ற இன்று காணக் கிடைக்காத அபூர்வ வாசகம் அடங்கிய நோட்டீஸ் தென்பட்டது.

நான் மெல்ல அந்த 'கேட்'டுக்குள்ளே நுழைந்தேன். மனோரம்யமான சிற்பவேலைப்பாடு நிறைந்த மாளிகை ஒன்று, விசாலமான தோட்டத்துக்கு நடுவே நிற்கக் கண்டேன். நாலு திசையிலும் பல வர்ணப் பூஞ்செடிகள் பூத்துக் குலுங்கின. நீர்த் தொட்டிகளிலே ஊற்றுப்போல் குழாய்கள் ஜிலு ஜிலு என்று தண்ணீரைச் சொரிந்து கொண்டிருந்தன.

"இதெல்லாம் நமக்குக் கிட்டாத விஷயம்" என்று எனக்குள் முணுமுணுத்துக் கொண்டேன். இருந்தாலும், கொஞ்சம் தமாஷ் செய்ய எண்ணினேன். கம்பீரமான அந்த மாளிகையின் விசாலமான சலவைக் கல் படிக்கட்டில் ஏறி, பிரம்மாண்டமான அதன் நிலைப் படிக்கதவை நெருங்கினேன். கதவிலிருந்த எலெக்ட்ரிக் பெல் குமிழை அழுத்தினேன்.

உள்ளே யாரோ வரும் மெல்லிய காலடிச் சத்தம் கேட்டது. கதவு திறந்தது. துல்லியமான நீலப்பட்டினால் முகத்தையும் உடம்பையும் மூடிக்கொண்டு ஒரு வாலிபப் பெண் என் கண் முன்னே நின்றாள். அவள் முகத்தை நான் காணவில்லை. ஆனால், நிலைப்படியைப் பிடித்துக் கொண்டிருந்த அவள் கையைக் கண்டேன். அது உலகெங்கும் தேடினாலும் காணக்கிடைக்காத அழகும் மென்மையும் நிறமும்



கொண்டு மிகவும் லட்சணமாய் விளங்கியது.

“கீர்த்திமானே, வாருங்கள்” என்று கீதக் குரலில் அவள் என்னை அழைத்தாள்.

இப்படி என்னை அவள் கூப்பிட்டது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதை அடக்கிக்கொண்டு, அவளுடன் உள்ளே சென்றேன். விஸ்தாரமான கூடத்திலே என்னைக் கொண்டுபோய் விட்டுவிட்டு அவள் மறைந்தாள்.

அங்கே ஸோபாவில் படுத்திருந்த ஒரு கிழவனார் என்னைக் கண்டதும் எழுந்து நின்றார். வாட்ட சாட்டமான சரீரம். நீளமான பச்சைப் பட்டு அங்கி அணிந்திருந்தார். தங்கச் சரிகை இழைத்த வெல்வெட்டுப் பாதரட்சை அவர் காலிலே துலங்கியது. முகமெல்லாம் சுருங்கிக் கோடு விழுந்திருந்தது. அடர்த்தியான மீசையும் தாடியும் அதை அலங்கரித்தன. அவர் எனக்கு மூன்று சலாம் வைத்தார்.

“பாக்கிய குலதிலகரே, இந்த எளியேன் குடிசைக்கு வருக! வருக!” என்று என்னை வரவேற்றார்.

அதிசயத்தால் என் வாய் பிளந்துவிட்டது. இதெல்லாம் என்ன என்று எனக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது.

“நாற்காலியில் அமர்ந்து ஏழையைக் கௌரவியுங்கள்” என்றார் கிழவனார்.

“இப்படி வந்து தொல்லை கொடுப்பதற்கு மன்னிக்க வேண்டும்” என்று எப்படியோ சமாளித்துக்கொண்டு சொன்னேன்.

“தொல்லையா! தங்களுக்குச் சேவை செய்ய எளியேன் எப்போதும் காத்திருக்கிறேன்.”

கிழவனார் ஸோபாவில் அமர்ந்து சாய்ந்துகொண்டார். நானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். சிறிது நேரம் மௌனம். மண்டபத்தைச்சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டேன். வர்ணமும் அழகும் செறிந்து, அருமையான மேஜை நாற்காலிகளும் பிற தளவாடங்களும் நிறைந்து, மிகவும் வசதியாக அது விளங்கியது.

“இந்த ஏழையின் குடிசை தங்களுக்குப் பிடிக்கிறதா?” என்று அவர் கேட்டார்.

“பிடிக்கிறதா என்கிறீர்களே! கன ஜோர்” என்றேன்.

“தங்கள் கருணையாலேயே இப்படிச் சொல்லுகிறீர்கள்.”

“தவிர, தங்களுக்குச் சேவை செய்ய ஸௌந்தரமான கன்னி ஒருத்தி இங்கே இருக்கிறாள்” என்று உபசாரமாய்ச் சொன்னேன்.

“அவளா? அவள் ஒரு கந்தர்வப் பெண். அவளை ஆயிரம் வருஷங்களுக்குமுன் அடிமையாக வாங்கினேன். இன்னும் இந்தமாதிரி பல்லாயிரக்கணக்கான பெண்கள்

எனக்கு ஏவல் செய்துகொண்டிருக்கிறார்கள்."

'என்னடா இது! கிழவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. சரிதான். மனமே, பதறாதே. வீட்டைப் பிடித்துவிடலாம்' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

"இந்த வீடு குடிக்கூலிக்கு விடப்படும் என்று நோட்டீஸ் போட்டிருக்கிறதே!" என்று சிறிது தயங்கித் தயங்கிக் கேட்டேன்.

"ஆமாம். உண்மை."

"நீங்கள்தான் இந்த மாளிகைக்குச் சொந்தக்காரரா?"

"நான்தான்."

"எனக்கு இதை விடுவீர்களா?"

"மாதம் மாதம் வாடகையை ஒழுங்காய்க் கொடுப்பதாயிருந்தால் விடுகிறேன்."

"வாடகை என்னவோ?"

"மாதம் இருபத்தைந்து ரூபாய்."

நான் திடுக்கிட்டுப் போனேன்.

"என்ன சொன்னீர்கள்?" என்று சந்தேகத்துடன் கேட்டேன்.

"இந்த - வீட்டுக்கு - வாடகை மாதம் - இருபத்தைந்து - ரூபாய்" என்று திருத்தமாகச் சொன்னார் கிழவர்.

"இருபத்தைந்தா?"

"ஆமாம்; ஆமாம்; ஆமாம்."

"முழு மாளிகைக்குமா?"

"அதில் என்ன சந்தேகம்? முழுவதற்குந்தான்."

"இருபத்தைந்து?"

"அதுவே."

ஏதாவது அரபிக்கதைக் கற்பனையோ என்று சந்தேகம் கொண்டு என்னை நானே கிள்ளிப் பார்த்துக்கொண்டேன். நாற்காலியின் கைகளைத் தடவிப் பார்த்தேன். நீர்த் தொட்டிக் குழாய்களின் சலசலப்பை உற்றுக் கேட்டேன். மண்டபம் முழுதும் பரவியிருந்த மல்லிகை, ரோஜாக்களின் மணத்தை இழுத்துப் பார்த்தேன். எல்லாம் உண்மை.

"இந்த வீட்டை நான் எடுத்துக்கொள்ளுகிறேன், ஸார்" என்று என் தீர்மானத்தை அவருக்குப் பிரகடனம் செய்தேன்.

"சந்தோஷம்! சந்தோஷம்!" என்றார் கிழவனார்.

"எப்போது குடிவரலாம்?"

"உங்களுக்கு இஷ்டமானால் இப்போதே வரலாம்."

"இந்த ஸோபா, மேஜை, நாற்காலி முதலிய சாமான்களெல்லாம் கிடக்கின்றனவே?"

"எல்லாம் குடிவருகிறவரின் உபயோகத்துக்காகவே இருக்கின்றன."

"நான் உபயோகித்துக்கொள்ளலாம்?"

"தாராளமாய்."

"மாதம் இருபத்தைந்து ரூபாய் வாடகைக்கு?"

"சந்தேகம் இல்லாமல்."

இவர் ஏதாவது பெரிய கோடீசுவரராக இருந்து முழுகிப் போனவரோ? ஊரை ஏமாற்ற இந்தப் பைத்திய வேஷம் போடுகிறாரோ? இப்படியெல்லாம் சந்தேகப்பட்டேன். இருந்தாலும் 'அதைப்பற்றியெல்லாம் நமக்கு என்ன? பேரம் முடிந்துவிட்டது' என்று எண்ணினேன்.

"வாடகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட நான் தயார், ஸார்" என்றேன்.

ஒரு மாத வாடகையை அட்வான்ஸ் கேட்டார். கொடுத்துவிட்டு, வாடகை ஒப்பந்தத்திலும் கையெழுத்துப் போட்டேன்.

"அயேஷா, ஷர்பத் கொண்டு வா" என்றார் கிழவனார்.

ஊதாப் பட்டுப் போர்வையில் உடம்பை மறைத்துக்கொண்ட ஒரு பெண், ஒரு தங்கத் தட்டிலே ஸ்படிகக் குவளைகளில் ஷர்பத் கொண்டுவந்து மேஜைமேல் வைத்துச் சென்றாள். நாங்கள் அதைக் குடித்தோம். அது தேவாமிர்தமாக இருந்தது. வாசல்படி வரைக்கும் வந்து, கிழவனார் என்னை வழியனுப்பினார்.

விடை பெறும்போது, "இன்று மாலையே குடி வரப்போகிறேன்" என்று சொன்னேன். அப்போது தான் எனக்கு ஒரு யோசனை உதித்தது. "இனி நீங்கள் எங்கே போய் வசிப்பீர்கள்?" என்று கேட்டேன்.

"என் மரத்துக்குப் போய் விடுவேன்."

"எங்கே?"

"என் மரத்துக்கு."

"மரத்துக்கா?"

"அதற்கேதான். எனக்குக் கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. களைப்பாற வேண்டும். போய் வாருங்கள்" என்று சொல்லிக் கதவைச் சாத்தினார் கிழவனார்.

'மங்களம் வாசித்தாயிற்று' என்று எண்ணிக்கொண்டே, காம்பவுண்டுக்கு வெளியே வந்தேன். என் பேனாக்கத்தியை எடுத்து, பக்கத்தில் இருந்த சில மரங்களில் அடையாளம் செதுக்கிவைத்தேன்.

திரும்பி வரும்போது, வழியிலே என் நண்பன் ஒருவனைச் சந்தித்தேன். அவனும் என்னைப்போலவே ஓயாத வீடுவேட்டையில் ஈடுபட்டவன். ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். "ஏது! போன காரியம் வெற்றியோ?" என்று கேட்டான். என் அவசரத்தில், 'இவனோடு உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருக்க முடியாது' என்று நினைத்து, "இல்லை. ஒரே பிளாங்கி" என்று பதில் சொல்லிவிட்டு, ஸ்டேஷனை நோக்கி நடந்தேன்.

என் தாயாதியிடம் சென்றேன். "எனக்கு ஒரு சிறிய ஜாகை கிடைத்துவிட்டது. உடனே குடி புக வேண்டும்" என்று சொல்லி, என் பெட்டி, படுக்கை, சாமான்களை எடுத்துக்கொண்டு ஒரு டாக்ஸியில் ஜோகேசுவரிக்குப் போனேன். நான் அடையாளம் போட்ட மரங்களெல்லாம் இருந்தன. ஆனால்? மாளிகையைக் காணவில்லை; அந்தப் பெரிய 'கேட்'டையும் காணவில்லை. எல்லாம் மாயமாய் மறைந்துவிட்டன. கண்ணை நன்றாய்த் துடைத்துக் கொண்டு பார்தேன். மாளிகை இருந்த சுவடே தெரியவில்லை. எல்லையற்ற காடுதான் தெரிந்தது. என்னைப் பரிகசிப்பது போல் மரங்களெல்லாம் ஆடிக்கொண்டிருந்தன. நான் விடவில்லை; பிடிவாதமாய்க் காடு முழுவதும் தேடினேன். எங்கும் மாளிகையைக் காணவில்லை. டாக்ஸி டிரைவர் பொறுமை இழந்து, "என்ன ஐயா, உமக்குப் பைத்தியமா?" என்று கூச்சலிடத் தொடங்கிவிட்டான். ஏமாற்றத்துடன் திரும்பி, வில்லிபார்லியில் உள்ள என் பழைய ஜாகைக்குத் திரும்பினேன். டாக்ஸி டிரைவர் பெருந்தொகை கறந்துவிட்டான்.

"கடைசி நிமிஷத்தில் ஒரு தகராறு ஏற்பட்டுவிட்டது. அதனால் தான் அறை எனக்குக் கிடைக்கவில்லை" என்று என் தாயாதிக்குச் சமாதானம் சொன்னேன். அவன் என்னைச் சந்தேகத்தோடு பார்த்து மௌனம் சாதித்தான். அவன் மனைவியோ உறுமினாள். என்ன பயங்கரமான நிலை இது!

இரண்டு நாள் வரைக்கும் ஒரே மனவேதனைதான். இந்தப் புதிரை

அவிழ்க்க ஓயாமல் முயன்றேன். எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் இருந்தது. என் நண்பன் பால ஜோதிடன் சோமனிடம் போனேன். என் மனத்தில் உள்ள ரகசியத்தைச் சொன்னேன்.

"இதுவா? இது மிகவும் சுலபமான விஷயமாயிற்றே. எனக்கு ஒரு சாது இதைச் சொல்லியிருக்கிறார். அவர் பெரிய மகான். கற்பக விருட்சம் என்று கேட்டிருக்கிறாயா? அதுமாதிரி இரண்டு மரங்கள் அந்தக் காட்டிலே இருக்கின்றனவாம். அவைகளின் கீழே இருந்து ஆசைப்பட்டதெல்லாம் நடக்குமாம். ஆனால், அந்த மரங்கள் இன்னவை என்று மட்டும் யாருக்குமே தெரியாதாம். அவைகளில் ஒன்றின்கீழே முதலில் நீ தற்செயலாய்ப் போய் உட்கார்ந்து மாளிகைக்கு ஆசைப்பட்டிருக்கிறாய். அது நிறைவேறியிருக்கிறது. ஆனால், திரும்பி வரும்போது இன்னொரு மரத்தின் கீழே நண்பனைச் சந்தித்திருக்கிறாய். 'போன காரியம் ஒரே பிளாங்கி' என்று அவனிடம் சொல்லிவிட்டாய். மாளிகையும் 'ஒரே பிளாங்கி'யாகப் போய்விட்டது. ஹி ஹி ஹி!" என்று அவன் சிரித்தான்.

இதைவிட வேறு ஆச்சரியம் உண்டா? இருக்க முடியுமா?

க்விஸ் விடை

(16 - ஆம் பக்கத்திலுள்ள கேள்விகளுக்கு விடை)

அரசியல்: (1) 1885 டிஸம்பர் 28-இல்; பம்பாயில் கூடியது; மிஸ்டர் ஏ. ஓ. ஹ்யூம்; உமேச சந்திர பானர்ஜி. (2) 18-9-'48.

பூகோளம்: (1) நிர்வாகத் தலைநகர் பிரிடோரியா: சட்டசபைத் தலைநகர்: கேப்டவுன். தூரம் சுமார் 1000 மைல். யூனியன் ஏற்பட்டபோது வடக்கு, தெற்குப் போட்டியைச் சமரசப்படுத்துவதற்காகவே இந்த ஏற்பாடு. (2) எவரெஸ்டு என்றுதான் பெரும்பாலும் சொல்லுவது வழக்கம். ஆனால் 'ஆன்னிமாசின்' என்ற சிகரம் ஒன்று திபேத்தின் மத்தியில் இருக்கிறதாம். அது எவரஸ்டைவிடப் பல ஆயிரம் அடிகள் அதிக உயரமாம். 1929-இல் ஜே. ரூக் என்பவர் அதைப் போட்டோ எடுத்திருக்கிறாராம். சமீபத்தில் அதைஆராய அமெரிக்கர் திட்டமிட்டிருக்கிறார்கள்.

விஞ்ஞானம்: (1) 59%; (2) உண்டு, எலும்பில் 50% தண்ணீர்; ரத்தத்தில் 90%; (3) விஞ்ஞானப்படி கண்ணாடி திட பதார்த்தமல்ல; விறைத்த திரவ பதார்த்தம் (ரிஜிட் லிக்விட்).

பொது: (1) தென்னாப்பிரிகா; (2) முதலாவதாக நின்றது அமெரிக்கா (400 படங்கள்); இரண்டாவதாக நின்றது இந்தியா (250 படங்கள்); (3) ஸ்மட்ஸ்.

யுக்தி: மாணிக்கம் முதலாவது; அற்புதம் இரண்டாவது; அகோரம் மூன்றாவது; ரத்தினம் கடைசி.

காப்பிரைட் : வெளியிட்டோர்: பவானி பிரசுரம், ராயவரம். விலை ரூ. 5-0-0.

சுந்தரி

பெரிய வீட்டு முத்துக்குட்டி ஐயருக்கும் நாட்டுக் கணக்குச் சுப்பராயருக்கும் தீராத பகை. பூமரத்தாங்குடி வட்டம் கணக்கர் சுப்பராயர் சற்றுக் கம்பீரமாகவே நடந்துகொள்ளுவார். "கணக்கனுக்கு இவ்வளவு கர்வம் எதற்கு?" என்பார் முத்துக்குட்டி ஐயர். நாட்டுக்கணக்கர், குடும்பத்தை எல்லாரும் மெச்சும் வண்ணம் நடத்திவந்தார். குடும்பத்தில் ஏற்பட்ட ஒழுங்கு அவர் மனைவி பார்வதத்தம்மாளினால். ஆனால் சுமங்கலியாகவே அந்த அம்மாள் பரலோகம் அடைந்தாள். அவள் போனபிறகு சுப்பராயருக்கு வீடு சுடுகாடாகிவிட்டது. 'பார்வதத்தம்மாளின் ஜீவியதசையில், யார் எந்த ஜாமம் போனாலும் அந்த உத்தமி வாயால் சாதம் இல்லை என்று சொல்லும் வழக்கம் அவளிடம் இல்லை' என்று ஊர் ஜனங்கள் இன்றைக்கும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

பூமரத்தாங்குடிக் கணக்குவேலை பார்த்து, வருஷவர்த்தனை, பட்டா மாறுதல், தண்ணீர்த் தீர்வை, பஸலிஜாஸ்தி, வரும்படி வரி என்ற அநேக அம்சங்கள் மூலமாய்ப் பல துளி பெருவெள்ளம் போல் பணம் சேர்த்து, சின்னப் பண்ணைச் சங்கர சுப்பையரின் நிலங்களை வாங்கிக் கொண்டார் சுப்பராயர். மேலும், அவருக்குப் பாரிஸ் லாட்டரிச் சீட்டில் ரூபாய் பதினாயிரம் விழுந்தது. அதையும் வைத்துக்கொண்டு பணத்தைப் பெருக்கிவிட்டார். முத்துக்குட்டி ஐயருக்குக் கணக்கர் பணத்திலே கோபம். கணக்கு வேலையையும் அவர் ராஜீநாமாக் கொடுத்துவிட்டார்; ஊர் முதலாளிகளில் ஒருவராகிவிட்டார்.

நாட்டுக்கணக்கருக்கு ஓர் அருமைப்பிள்ளையும் ஒரு பெண்ணும் உண்டு. பிள்ளையின் பெயர் முருகந்தன்; பெண்ணின் பெயர் சுந்தரி. தாய் சாகும்போது முருகந்தனுக்குச் சுமார் இருபது வயது இருக்கும். அவனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயது சிறியவள் அவன் தங்கை சுந்தரி. தங்கையின் கதை மிகச் சிறிது. எட்டு வயதில் மைசூரில் பெருத்த சம்பளக்காரருடைய பிள்ளைக்கு அவள் வாழ்க்கைப் பட்டாள். "பையன் மிகுந்த புத்திசாலி. தகுந்த ஸ்திதிக்கு வரக்கூடியவன்" என்று எல்லாரும் அவனைப் புகழ்ந்தார்கள். அவன் சென்னையில் பி. ஏ., பரீட்சை எழுதச் சென்றிருந்தான். பரீட்சை தினத்துக்கு முன்பே அவனுக்கு முறைக் காய்ச்சல் வந்தது. சிநேகிதர்கள் அவன் பெற்றோருக்குத் தந்தியடித்தார்கள். 'பரீட்சை எழுதினது போதும்' என்று அவனை அவர்கள் ஊருக்கு அழைத்துக் கொண்டு போய், சீமையிலிருந்து வந்திருந்த டாக்டர் துரையிடம் காட்டினார்கள். அவர் தம் யுக்தி அநுபவத்துக்கு எட்டிய மட்டும் மருந்து கொடுத்துப் பார்த்து, கடைசியில் தேறாது என்று சொல்லிவிட்டார். பையன் இறந்து போனான். சுந்தரி விதவையானாள். அப்போது அவளுக்கு வயது பதினொன்று. சுந்தரி விதவையானாளேயொழிய, இன்னும் ஸ்திரீயாகவில்லை.

இப்போது சுந்தரி ஒன்பது வயதுள்ள சிறுமி. சாதாரணப் பெண்

அல்ல: கைம்பெண்; புருஷனில்லாத பெண். 'பொன் தாலியோடு எவையும் போம்' என்றார் ஒருவர். அதன் முழு உண்மையையும் உணரக்கூடாத பருவம்; இருள் பிரியாத, உலகத்தின் இயற்கையை அறியாத வயது; பொம்மையும் பள்ளிக்கூடமுமே தெரியும் காலம். பள்ளிக்கூடத்திலேயும் உபாத்தியாயரைத்தான் தெரியும்; பாடபுஸ்தகம் தெரியும்; சொல்லிக் கொடுத்தவற்றை மனப்பாடம் செய்யத் தெரியும். வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்குகிற வயது; பிறந்த சத்தத்துக்கெல்லாம் காது கொடுக்கிற வயது; பொய்த் தூக்கமில்லாத வயது; 'கிழிந்த மயிலிறகு குட்டி போடும்' வயது. இந்த வயதிலே சுந்தரி விதவையானாள். விதவை என்ற வார்த்தைக்கு இந்தியாவிலே கொடுக்கிற முழு அர்த்தமும் அவளுக்குத் தெரியுமா?

சுந்தரிக்கு அதுமுதல் உலகம் மாறிற்று? பழைய உலகந்தான். உலகம் ஒருநாளும் மாறுவதில்லை. நம்முடைய மனம் மாறுகிறது; மனம் மாறுவதற்குச் சுந்தரிக்கு வயதேது? மார்க்கண்ட ஐயரின் பள்ளிக்கூடத்துக்குப் போவதை அவள் நிறுத்தவில்லை. புருஷன் செத்தானே யொழிய அதற்குத் தக்கபடி அவளுடைய தோற்றம் எள்ளளவும் மாறவில்லை. மாற நாம் எதிர்பார்க்க முடியுமா அந்த வயதிலே? பூவுண்டு, பாக்கு வெற்றிலையுண்டு, புஸ்தகமுண்டு, நல்ல புடைவைகளுண்டு. அவளுடைய உண்மையான நிலையை அவளுக்கு ஒருவரும் அறிவிக்கவில்லை; அறிவிக்க முயன்றாலும் விதவை என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியக்கூடிய காலமா?

மார்க்கண்ட ஐயரின் பள்ளிக்கூடத்திலே சுந்தரி படித்துவந்தாள். அது சர்க்கார் பள்ளிக்கூடமான பிறகு அதில் பாட்டுச் சொல்லிக் கொடுத்தார்கள். புதிதாக ஒரு பாடகனை வரவழைத்தார் மார்க்கண்ட ஐயர். சுந்தரி பள்ளிக்கூடம் சேர்ந்ததே முகுந்தனின் முயற்சியாலே தான். சுப்பராயருக்குப் பெண்பிள்ளைகள் படிப்பதில் இஷ்டமில்லை. "இவர்கள் என்ன வேலைக்குப் போகப் போகிறார்கள்? வக்கீல் வேலையா, வைத்திய வேலையா, கவர்னர் வேலையா; ஒன்றுக்கும் தோதில்லாத பொம்மைகள். பெண்பிள்ளைகளுக்கு நகைகள் வேண்டும்; நல்ல சேலைகள் வேண்டும்; சமையல் தெரியவேண்டும். மற்றப்படி வேறொன்றும் வேண்டியதில்லை. இல்லை, யுத்தத்துக்குச் சிப்பாய்களாய்ப் போவார்களா?" என்று சொல்லுவார் சுப்பராயர். 'படிப்புக்கு மூல தேவதையைப் பெண்ணாக ஏற்படுத்தியிருக்கிறார்களே புராதன ஹிந்துக்கள், அது ஒப்புக்கொள்ளத் தகுந்ததா?' என்று யாராவது கேட்டால், "அது தெய்வலோக ஏற்பாடு. நாம் இந்தக் களிமண் பூமியில் இருக்கிறோம் (பூமரத்தாங்குடி மண் களிவாய்). ஒன்றை யொன்று சம்பந்தப்படுத்திப் பேசி நம்முடைய அறிவைக் குழப்பிக் கொள்ள வேண்டாம்" என்பார் சுப்பராயர். வயது வந்த முகுந்தன் இருக்க, இவர் எண்ணம் நிறைவேறவில்லை. சுந்தரி பள்ளிக்கூடம் போய் வந்தாள்.

சுந்தரிக்குப் பள்ளிக்கூடத்திலே அநேகம் தோழிகள் இல்லை. முத்துக்குட்டி ஐயருக்கும் சுப்பராயருக்கும் சண்டையே தவிர, அவர்கள் வீட்டுப் பெண்கள் இரண்டு பேருக்குள்ளும் நேசம் மிக அதிகம். முத்

துக்குட்டி ஐயரின் பெண் சாவித்திரியுடனே நெருக்கமாகப் பழகி வந்தாள் சுந்தரி. சரஸ்வதியென்று இன்னொரு பெண் படித்துவந்தாள். இவர்களுக்கெல்லாம் மார்க்கண்ட ஐயரின் மனைவி வாலாம்பாளிடம் அன்பும் மரியாதையும் நிறைய உண்டு. வாலாம்பாள் தனிக் குடித்தனமாய் வந்த பிறகு, சுந்தரி, சாவித்திரி, சரஸ்வதி மூன்று பேரும் பள்ளிக்கூடமில்லாத நேரங்களில் அவளுடன்தான் இருப்பார்கள். வேற்றுமை என்பது இவர்களிடம் அதிகம் இல்லை. சாவித்திரி, சரஸ்வதி இருவருக்கும் இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

ஒரு நாள் சாயங்காலம் புதிதாகக் கற்றுக்கொண்ட பாட்டு ஒன்றை ஹார்மோனியம் சுருதி சேர்த்துப் பாடிக்கொண் டிருந்தாள் சுந்தரி. முகுந்தன் வெளியிலிருந்து அப்போது வந்து திண்ணையிலே தூணைப்போல் அசையாமல் உட்கார்ந்துவிட்டான். 'ஐயோ, நான் பாவி! யாருமற்ற பரதேசி' என்ற வேறொரு பாட்டைச் சுந்தரி பாட ஆரம்பித்தாள். முகுந்தனுக்கு வந்த துக்கத்துக்கு அளவில்லை; ஆணாயிருந்தும், தேம்பி அழுதான். அவனுக்கு இந்தச் சத்தம் பொறுக்க முடியவில்லை! படீரென்று நெஞ்சு உடைந்தது. இந்த நிலையிலே உள்ளே போக அவனுக்கு இஷ்டமில்லை. 'இது புதிய பாட்டேயொழிய இவளைப்பற்றிய பாட்டல்ல' என்று நினைத்தான். ஒருகால் யாராவது சொல்லியிருந்தால்? எத்தனை நாளானாலும் ஒரு நாள் இந்த விஷயம் அவளுக்குத் தெரியவேண்டியதுதானே? 'சற்றுப் பொறுத்துத் தெரியலாம்' என்று எண்ணினான். உலகத்திலே பாட்டுக்களுக்குப் பஞ்சமா? இந்தப் பாட்டு யார் சொல்லிக் கொடுத்தது? சோகரசத்துக்காக ஒரு மாதிரிப் பாட்டு யாராவது சொல்லிக் கொடுத்திருக்கலாம்; அப்படி எண்ணுவதற்கும் இடமில்லை. எத்தனையோ நாட்களுக்கு முன் சொல்லிக்கொடுத்திருக்கலாமே, தெரிந்தே யாரோ இந்தப் பாட்டைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அவளுக்கு அவளைப்பற்றிய சங்கதி முழுதும் தெரியும்போல் இருக்கிறது. இப்போது அவள் முகத்தை எப்படிப் பார்ப்பது? அவளுடன் எப்படிப் பேசுவது? அவளுக்கு மனத்திலே அமைதி எப்படி உண்டாக்குவது? அவளுடைய கஷ்டத்தைப் போக்குவது எப்படி? இப்படிப் பல விதமாக நினைத்தான் முகுந்தன்.

உள்ளே சென்றான். "கடைசியிலே பாடின பாட்டை எப்போது கற்றுக்கொண்டாய்? யார் சொல்லிக் கொடுத்தார்கள்?" என்றான். "எங்கள் பாட்டு வாத்தியார் நாடகத்துக்குப் போயிருந்தாராம்; அங்கே அவர்கள் பாடினார்களாம்; இவர் அதைத் தெரிந்துகொண்டு இங்கே வந்து எனக்குச் சொல்லிக் கொடுத்தார். பாட்டு நன்றாய் இருக்கிறதா? சுருதி சரியாய் இருக்கிறதா? இன்னும் தொண்டை சரியாயில்லை; இரண்டு மூன்று நாள் கழித்து நன்றாய்ப் பாடிக் காட்டுகிறேன்" என்றாள் சுந்தரி. "என் காது கேட்க அந்தப் பாட்டைப் பாடாதே, இனிமேல்" என்றான் முகுந்தன். "என், அண்ணா? நாடகப் பாட்டுப் பாடக்கூடாதா? அவர்கள் நாடகசாலையிலே பாடுகிறார்களே, அது தப்பிதம் என்று ஒருவரும் சொல்லவில்லையே. நான் பாடினால் என்ன?" என்றாள் சுந்தரி. "நாடகப் பாட்டுப் பாடக்கூடாது என்று நான் சொல்ல வர

வில்லை. இந்தப் பாட்டு ... சரி, நீ பாடு'' என்றான் முகுந்தன்.

'விதவை சுந்தரி சகுனத் தடை.' படைப்பிலே இருவகை ஜாதி: ஆணும் பெண்ணும். அவர்கள் சேர்க்கையில் வந்த நீயும் நானும், மலையும் மடுவோ அல்லது கனலும் காற்றுமோ? நீ என்னைக் கொல்லு; அதை உன் சக்தி என்று சொல்லு. என்னை ஏமாற்று; அதற்கு உன் புத்தி என்று பெயர் கொடு. எனக்குச் சோறு இல்லாமலடி. அதை உன் சம்பாத்தியம் என்று சொல்லு. நான் பேசுவது நாஸ்திகம்; நீ உபதேசிப்பது வேதத்தின் உட்கருத்து. என்னுடையது மனிதப் பேச்சு; உன்னுடையது அருள் நிறைந்து அழகு பொருந்திய தெய்வவாக்கு. நான் சொல்லுவது கட்டுக்கடங்காத வார்த்தை; நீ உரைப்பது தர்ம சாஸ்திரம். இது உன் அதிருஷ்டம், என் தலைவிதி, அவள் போக்கிரித் தனம். அது அவள் காமம், என் இச்சை, உன் மனோபீஷ்டம். உன் துயரம், என் கேலி, அவள் பாசாங்கு. உன் புத்தி, என் மயக்கம், அவள் மடத்தனம். எத்தனை நாள் இப்படிச் சொல்லிக்கொண்டு வருவாய்? வெளியே தோன்றும் வேற்றுமையை அதிகமாய்ப் பாராட்டு; உள்ளே நிற்கும் ஒற்றுமையை மறந்துவிடு. மறந்தால்தானே உன் தொழில் நிற்கும்; எனக்கும் வேலை உண்டு?

'விதவை சுந்தரி சகுனத் தடை.' சந்திலே, பொந்திலே, நாடியிலே, நரம்பிலே ஓடும் ரத்தம் ஒன்றே. உன்னையும் என்னையும் ஆட்டிவைக்கிற மனம் ஒன்றே. உனக்கும் எனக்கும் எள்ளளவும் எட்டாத தெய்வம் ஒன்றே. உன்னையும் என்னையும் ஏமாற்றி வருத்தும் மாயை ஒன்றே. உன்னையும் என்னையும் வதைத்து மருந்துக்கும் மந்திரத்துக்கும் அடங்காத பிணிகள் பொதுவே.

'சுந்தரி விதவை சகுனத்தடை.' குணத்துக்குத் தகுந்த காமம், புத்திக்குத் தக்க பேச்சு, ஆண்மைக்குரிய ஆனந்தம், வறுமைக்குத் தக்க வலி, அறிவுக்கு எட்டிய கஷ்டம், மனத்துக்குத் தக்க மாளிகை, உறுதிக்குத் தக்க வயது, யோக்கியதைக்குத் தக்க வாழ்வு, சக்திக்கேற்ற சட்டம். புத்தியும் பிழைப்புமற்றுக் கை கட்டி வாய் பொத்தித் தொண்டு செய்து வாழ்ந்து, கண்டதற்கெல்லாம் பயந்து, கண்ணால் காணாதவற்றைப் பொய்யென்று எண்ணும் மனிதர்களுக்கு, விதவை சுந்தரி சகுனத் தடையே.

'சுந்தரி விதவை சகுனத்தடை.' பின்னே புயற்காற்று, முன்னே வடவனல், பக்கத்திலே உன்னையும் என்னையும் ஒருங்கே சேர்த்து விழுங்கும் கடல், மேலே எல்லாரையும் மயக்கும் ஆகாயம், எதிரே சாவு, நடுவே, நீயும் நானும்.

'சுந்தரி விதவை சகுனத் தடை.' தெரிந்து ஒன்று, தெரியாமல் இரண்டு, சொல்லாமல் மூன்று, உற்சவத்தில் நான்கு, யாத்திரையில் ஐந்து, ரெயிலடியில் ஆறு புருஷர்களைக் கூடி, குழந்தைகளைப் பெற்று, ஆற்றிலே ஐந்தும் குளத்திலே ஏழும் கிணற்றிலே எட்டும் போட்டு உன் தலையிலே பத்துப் பழியையும் சுமத்தும் பாவி என்று நினைத்தாயோ சுந்தரியை? வீடு நிறையப் பிள்ளையைப் பெற்று, வாசல் நிறையப் பேரன் பேத்திகளை எடுத்து, அறுபதிலே அறுத்தும், ''மஞ்சளிழந்தேன், மன்னவனைத்

தானிழந்தேன்'' என்று அலறும் கிழக் கைம்பெண்ணென்று நினைத்தாயோ? விரதம் என்ற பாசாங்கிலே பக்கத்தில் இருக்கிற குழந்தைகள் நாக்கில் ஜலம் ஊற, தன் கதுப்புக் கிழியக் கொழுக்கட்டை வைத்து அடைத்துக் கொள்ளும் மொட்டையென்று நினைத்தாயோ? ஒரு பிடி விபூதி மேலே தடவி, ஒரு படி விபூதி உள்ளே செலுத்தி, பித்த பாண்டுவுக்கு இருப்பிடமாகி, உலகத்திலே வெறுப்புண்டாகி, இளவயதிலேயே தற்கொலை செய்துகொள்ளும் பேதை என்று நினைத்தாயோ? முப்பதை 'நுப்பது' என்றும் ஸ்வாமியை 'ஸ்மாமி' என்றும் மண்ணைப் பணம் என்றும் உன்னைப் பிணம் என்றும் எண்ணுகிற அசடு என்று நினைத்தாயோ?

'சுந்தரி விதவை சகுனத்தடை.' காற்றைப் பிடித்துக் கூட்டிலடைப்பாயா? கடலைக் கடைந்து அமுதம் தருவாயா? மலையைப் பிளந்து மரகதம் கொணர்வாயா? ஆற்றை அடைத்து மேட்டிலேற்றுவையோ? காட்டை வெட்டி நாடாக்குவையோ? மோனத்தில் நின்று முக்தியடைவாயோ? அநீதியை அடியோடு கொல்வாயோ? மனந்தளராத மகம்மதுவோ நீ? கருணைக் கடலாம் புத்த பகவனோ? காமனை வென்ற பீஷ்மனோ? முற்றிய ஞானத்தில் சங்கரனுக்கு இணையோ? பக்தி மாறாத பரதனும் நீயோ? பூமியில் மிக்க பொறையுடையவனோ? ஆண்மை தாங்கிய அருச்சுனனோ? நல்ல பேச்சு உன் நாவும் பேசுமோ? கம்பனை யொத்த கவியோ நீயும்? கல்லை உருக்கும் கானம் அறிவையோ?

'சுந்தரி விதவை சகுனத்தடை.' நம்மைப் பிரித்து, தன் மதத்தை விரித்து, ஆண்மையை அழித்து, அறிவை மயக்கி, அமைதியைப் போக்கி, சுகத்தைக் குறைத்து உன்னை வதைக்கும் மேல்நாட்டு நாகரிகம் மெய்யெனக் கொள்ளுவேன். சுந்தரி விதவை சகுனத்தடை யென்பது உன் பஜனை நாமாவளியோ? அதை மற!

'சுந்தரி விதவை சகுனத்தடை.' ஆவி சோர்ந்து, அங்கம் தளர்ந்து, உடல் மெலிந்து, கண்ணொளி மங்கிய சோம்பரைத் தெய்வமெனக் கொண்டவர் இனத்தான் நீ. ஆண்மைக்கும் உனக்கும் வெகு தூரம். கல்வி இல்லை, கலவி உண்டு. பயனற்ற கேள்விகளை வாய் ஓயாமல் கேட்பாய். கவி உனக்கு ஜன்மப் பகை. அச்சம் உனது இஷ்ட தெய்வம்; அழகைக் கனவிலும் பார்த்திராய். பிறர் துயரத்தைப் பாசாங்கென்று எண்ணுவாய். தம்பியை, உன்னைப் பிடித்த பேய் என்று எண்ணுவாய்.

'சுந்தரி விதவை சகுனத்தடை.' ஆளைப் பாராமல் தீர்ப்புச் சொல்லாதே! அதோ நிற்கிறாளே அவள்தான் சுந்தரி. உனக்கினிய தங்கை அவள். பாவத்தைப் போக்கும் பார்வை உடையவள். தன்னலம் கருதா மின்னற் கொடியாள். பாட்டு நிறைந்த பாவையடா அவள்! உன் அருமை அறிந்த ஆத்ம பந்து. சுந்தரம் மிகுந்தது அவள் குழல்மேகம். சந்திரனை யொத்தது அவள் முகம். கொஞ்சிப் பேசும் பஞ்சவர்ணக் கிளி. தாழ்வையடைந்த தமிழரின் மத்தியில் பிறந்து தத்தளிக்கும் உயிர். அவளை உற்று நோக்கு! அப்போதாவது உன் நெஞ்சு உருகுமா பார்க்கிறேன். இப்போது உனக்கு உண்மையான பார்வையோ அல்லது அந்தி

மாலேயோ என்று தெரிந்துகொள்ளு கிறேன்.

'சுந்தரி விதவை சகுனத் தடையா?' அண்ணு, அப்படிச் சொல்லு. அம்மா, என் காது குளிர இன்னெரு முறை அழுத்தமாயும் திருத்தமாயும் சொல்லு. ஒரு பானேச் சோற்றுக்கு ஒரு சோறு தான் பதம். இனி உனக்கு உயிருண்டு, தெய்வமுண்டு, சத்தியமுண்டு, கீர்த்தியுண்டு, அருளுண்டு, பொருளுண்டு, சுகமுண்டு. உனக்கு இணே யாரும் இல்லே. இப்போது பிறருக்கும் நியாயமாய் நடக்க உனக்குத் தைரியம் உண்டென்று தெரிந்து கொண்டேன். இனி உன் அடிமை நான்.

இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் ஆரம்பித்து அஸ்திவாரம் போட்டு நிறுத்திய வீட்டைக் கட்டி முடித்தான் முகுந்தன். புது வீடு 'பண்ணே வீடு' ஆயிற்று. ஊர் முதலாளிகளில் அவன் ஒருவன் அல்லவா? வீடும் பார்வைக்கு மிகவும் பாங்காக இருந்தது. வீடு கட்டி முடிந்ததில் முகுந்தனுக்குத் தான் சந்தோஷம். சுந்தரி விதவையானதை நினேந்து நினேந்து மனத்திலே நொந்துகொண்டாள் பர்வதத்தம்மாள். நாளெல்லாம் அநேகந் தட்வை தன்னே இந்த உலகத்திலிருந்து எடுத்துக்கொண்டு போய் விட ஈசனேப் பிரார்த்தித்தாள். ஈசனும் அதைக் கவனித்தார்போல் இருக்கிறது. நீளத்திலே வியாதியாகி விட்டது அவள் கவலே. அதனுல் அவள் உடம்பு உலர்ந்த இலேயாகி விட்டது. வரவர அவள் நடைப்பிண மாகிவிட்டாள். மார்பில் உயிர் அடித்துக்கொண் டிருந்தது; அவ்வளவுதான்.

கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லாத பேர்கள் பாக்கியில்லே. ஆனுல் முகுந்தன் வீட்டார் அதையொன்றும் கவனிக்கவில்லே. நல்ல நாள் பார்த்துப் புது வீட்டுக்குக் குடி போனுர்கள். போன அன்று சாயங்காலம் பர்வதத்தம்மாள் கொல்லேயில் மருந்துப் பச்சிலேக்காகப் போன இடத்தில் விஷம் தீண்டி, இரண்டொரு நாள் இருந்து இறந்தாள்.

சுப்பராயர் இதற்குமுன் கால் பேச்சுப் பேசினுர். இப்போது அதையும் நிறுத்திவிட்டார். சிறு குழந்தையைப் போல் அநேக ஸமயங்களில் அழுவார். அழைத்துச் சாதம் போட்டால் சாப்பிடுவார். தாமே உள்ளே போவதில்லே. ஸ்நானங்கூடப் பிறர் செய்து வைக்கவேண்டும். சுந்தரியின் முழுக்கவனம் சுப்பராயர் பேரில் தான். அவருக்கு வேண்டியதை யெல்லாம் தருந்தகாலங்களில் செய்து முடிப்பதில் அவளுக்குப் பெரும் ஊக்கம் உண்டாயிற்று.

தாயோ இறந்து விட்டாள். தந்தையோ பித்தரானுர். புருஷன் முந்தியே போய்விட்டான். அண்ணு பாக்கி. மதனி பத்மா இருக்கிறுள். இதன் மத்தியிலே சுந்தரி ஸ்திரீயானுள்.

முகுந்தனின் துக்கம் தொடங்கிற்று. அவன் மனிதன்; அவனுக்கு இருதயமுண்டு; பிறர் வருத்தம் தெரியும். உலகத்தின் இயற்கையையும் மனித வாழ்வையும் அதன் தத்துவங்களேயும், சுந்தரியை உத்தேசித்து அவன் ஆராய்ச்சி செய்யலானுன். 'விதி, விதி என்று சொல்லிக் கேட்பவரின் வாயை அடக்கும் மனிதர்களின் பேச்சு உண்மையா? அவர்கள் ஏதாவது சொந்த லாபத்தைக் கருதி அப்படிப் பேசுகிறுர்களா? பொய் என்று தெரிந்திருந்தும் சில அபிப்பிராயங்களே மாற்றிக்

கொள்ளத் தைரியம் இல்லாமல் இருக்கிறார்களா?' என்று யோசிக்கலானான்.

முகுந்தனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. சுந்தரி ஒரு நாள் அந்தக் குழந்தையைத் தாலாட்டிக்கொண்டிருந்தாள். "ஸ்வாமி ரெண்டு கையாலே தந்த திரவியமோ?" என்று பாடினாள். அவளால் தொட்டிலை ஆட்ட முடியாமல் போயிற்று. குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. கையில் எடுத்தாள். மார்போடு அணைத்துக் கொண்டாள். 'ஸ்வாமி ரெண்டு கையாலே தந்த திரவியமோ?' திரவியந்தான்; அதற்குச் சந்தேகமில்லை. குழந்தையோடு பக்கத்தில் இருந்த சுவரில் சாய்ந்தாள். கண்ணில் தாரை தாரையாக நீர் பெருகிற்று. உள்ளேயிருந்து பத்மா அந்தச் சமயம் வந்தாள் "சுந்தரி, என் அழுகிறாய்? ஏதாவது உடம்பு அசௌகரியமா?" என்றாள். சுந்தரி ஒன்றும் பேசவில்லை. குழந்தையை வாங்கிக்கொண்டு பத்மா சமையலறைக்குப் போய்விட்டாள். சுந்தரிக்குப் பக்கத்திலே யார் இருக்கிறார்கள்? சுந்தரி தான். உலகத்திலே சுந்தரிக்கு உற்ற துணை அவளைத் தவிர வேறு யார்? 'கட்டி அழப் பெண்டிர் உண்டு; கவலையைத் தீர்க்க-மாற்றிருவியும் காணேனே.'

புது வீடு வாலாம்பாள் வீட்டுக்கு அடுத்த வீடு. போது போவது மிகவும் கஷ்டமாயிருந்தால் சுந்தரி அங்கே போவாள். அங்கேயும் மார்க்கண்டன் முகத்தைப் பார்ப்பதென்றால் மிகவும் லஜ்ஜைப்பட்டாள். வாலாம்பாள் ஒரு நாள் சுந்தரியிடம், "சாவித்திரிக்குக் கல்யாணம்" என்று சொன்னாள்.

சுந்தரி: எப்போது?

வாலாம்பாள்: நாலு பக்கத்திலும் வரனுக்கு அலைந்தார்களாம். கடைசியிலே, உளுந்தங்காடு என்ற ஊர் இருக்கிறதாமே. அங்கே நிச்சயப் படுத்தியிருக்கிறார்களாம். ஜாதகப் பொருத்தமெல்லாம் சரியாக இருக்கிறதாம்.'

சுந்தரி: ஜாதகப் பொருத்தம் கூடவா? அவரவர் தலையிலே எழுதியிருக்கிற எழுத்தைப்போல் நடக்கிறது. பதினெட்டுப் பொருத்தமும் சரியாக இருந்தாலும் போகிற உயிரைத் தடுக்க யாரால் முடியும்? மனப்பொருத்தம் இருந்தாலே போதும். அந்த இடம் சாவித்திரிக்குப் பிடிக்கிறதா? அதைத் தெரிந்து கொண்டார்களா?

இவர்கள் இருவரும் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது, சாவித்திரி ஒரு தாழம்பூவைக் கையிலெடுத்துக்கொண்டு வந்தாள். "வாலாம்பா, இதை அம்மா உனக்குக் கொடுக்கச் சொன்னாள்" என்று தாழம்பூவை நீட்டினாள்.

சுந்: உனக்குக் கல்யாணமாமே, சாவித்திரி! எந்த ஊரிலே நிச்சயமாகியிருக்கிறது?

சாவி: பயத்தஞ்சேரியில்.

வாலா: பையனுக்குத் தாயார் தகப்பனார் இருக்கிறார்களா?

சாவி: அதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்? தாலி கட்டுவதற்குக் கழுத்தைக் காட்ட வேண்டும். அதுதான் எனக்குத் தெரியும்.

சுந்: புருஷன் வீட்டுக்குப் போனால் உன்னிடத்தில் என்ன வித்தியாசம் ஏற்படும்?

சாவி: வித்தியாசமில்லையோ? நான் எங்கள் வீட்டில் வேலை செய்ய வேண்டியதில்லை; என் மாமனார் வீட்டில் செய்யவேண்டும்.

வாலா: மாப்பிள்ளைக்கு என்ன 'பரிசம்?' - விலை?

சாவி: 'நாலாயிரம் ரூபாயில் ஒரு பைசாக்கூடக் குறைக்க மாட்டேன்' என்று மாமனர் சொல்லி விட்டாராம்.

வாலா: நாலாயிரம் ரூபாய்க்கு, மாப்பிள்ளை எட்டடி உயரம் இருப்பானே? பதினறு கைகள் இருக்குமோ? உலகத்திலே நல்ல கல்யாணம் செய்கிறார்கள்!

சாவி: பெண்ணைப்பற்றி மாப்பிள்ளை ஆயிரம் கேள்வி கேட்டானும். 'நான் பெண்ணைப் பார்க்க வருவேன். அப்போது பொய்ப் பெண்ணைக் காட்டிவிடாதேயுங்கள்' என்று சொன்னனும். உடுத்த துணியைக்கூட அவன் நம்ப மாட்டான் போல் இருக்கிறது. அவர்கள் வீட்டில் எப்படிக் குடித்தனம் பண்ணி வளைய வரப் போகிறேன்? இப்போதே என் வயிற்றைக் கலக்குகிறது.

சுந்: இத்தனைக்கித்தனை மாப்பிள்ளை அழகாயும் சமர்த்தாயும் நல்ல குணவானயும் இருக்கலாம்; நமக்கு இப்போது என்ன தெரியும்? கல்யாணம் செய்த பிறகும் தெரியாது. குடித்தனம் பண்ண ஆரம்பித்த பிறகுதான் தெரியும்.

வாலா: எப்படி இருந்தாலும் சரி. அவன் நீடித்த ஆயுளோடு இருந்தாலே போதும். ஆயிரங் காலம் தாலியைக் கட்டிக்கொண்டு வாழ்ந்திரு, அம்மா.

சாவி: அப்படிச் சொல்லாதே, வாலம்! அசடனை அடைந்து ஆயிரங் காலம் வாழ்வதைவிடச் சமாத்தனைக் கல்யாணம் செய்து கொண்டு படீரென்று தாலியறுக்கலாம்.

திடீரென்று பேய்பிடித்தவள் போல் குதித்துப் பாய்ந்து சாவித்திரியின் வாயை மூடினுள் சுந்தரி. "அப்படிச் சொல்லாதே, அப்படிச் சொல்லாதே" என்று அலறினுள். மற்ற இருவரும் திகைத்துவிட்டார்கள். பேச்சு ஒன்றும் எழவில்லை. கல்லைப்போல் நின்று விட்டார்கள். அவர்களுக்குத் தங்கள் நினைவு வர அரை நாழிகை ஆயிற்று. "சாவித்திரி, தப்பிதம்! தப்பிதம்!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள் சுந்தரி. "என்னடி, வாலாம்பா!" என்ருள் சாவித்திரி.

வீட்டுக்கு வந்தவுடன் சுந்தரி மாடியிலே ஒதுக்குப்புறமாகப் போய்ப் படுத்துக்கொண்டாள். சாவித்திரியின் கல்யாணப்பேச்சு அவள் மனத்தில் புதைந்து கிடந்த அநேக எண்ணங்களைக் கிளப்பிவிட்டது: "இந்த ஜன்மம் பாழ்தானு? என் தலையிலே ஈசன் வாஸ்தவத்தில் இந்த விதந்தான் எழுதினனு? இதற்கு மாற்று ஒரு காலத்திலும் இல்லையா? இத்தனை அலட்சியமாய்க் கல்யாணத்தைப்பற்றிப் பேசி விட்டாளே சாவித்திரி! அவள் இன்னும் குழந்தையாய் இருக்கிருளே. தன் புருஷன் ஒருகாலும் சாகமாட்டான் என்று உறுதியாய் எண்ணிவிட்டாள் போல் இருக்கிறது. கல்யாணம் என்பது பொம்மை விளையாட்டா? அதை இவ்வளவு லேசாகக் கருதி விட்டாளே சாவித்திரி? - தலையெழுத்தா? ஐயோ, அது எனக்கு விளங்கவில்லையே! நானு என் புருஷனைக் கொன்றேன்? தொண்டு கிழமான புருஷர்களும் ஆருவது தாரங்கூடக் கல்யாணம் செய்துகொள்கிருர்களே! சாவித்திரியின் வாயை நான் ஏன் மூடினேன்? அவர்கள் என்ன எண்ணிக்கொள்ளுவார்களோ? புருஷப் பித்துக்கொண்டு அலைகிற ஒரு பேய் என்று என்னை நினைத்துவிட்டால்? பதறின காரியம் அப்படித்தான் முடியும். எனக்

காக ஊரிலேகூடக் கல்யாணப் பேச்சு இருக்கக்கூடாதா? சுந்தரி, உனக்குக் கெட்ட காலம் தொடங்கி விட்டது. இனி உன் மனத்தை அடக்கி ஆளமாட்டாய். கெடுவதற்கு வழி தேடிக்கொண்டாய். விருதுப் பட்டிக்குப் போகிற சனியனை வீட்டில் அழைத்துக்கொண்டாய். கேடு வரும் பின்னே, மதி கெட்டு வரும் முன்னே. சாவித்திரி அப்படிச் சொன்னால் உனக்கு என்ன? உன் கவலையைத் தீர்த்துவிடுமா அது? மனமே, ஏன் இப்படி ஒரு கொம்பை விட்டு மறு கொம்புக்குத் தாவுகிறாய்? உன்னைக் கட்ட உலகத்திலே கயிறு இல்லையா? இருந்தால், பாவமேது? சாவித்திரியின் கல்யாணப் பேச்சு இந்த எண்ணங்களை எனக்கு உண்டாக்கியதற்குக் காரணம்? இதுவரைக்கும் என்னோடு நெருங்கிப் பழகிச் சாவித்திரி சுகம் அடைவதைப்பற்றி எனக்குப் பொறுமையா? சாவித்திரிக்கு நல்ல தோழி நான்! அயல்வீடுவாழப் பொறுக்காத பாவி யாகிவிட்டேனா? இந்த எண்ணங்கள் என் மனத்திலே பிறந்தது என் கெட்ட காலத்துக்குத்தான். இல்லாவிட்டால் சாஸ்திர விரோதமான எண்ணம் என் மனத்திலே தோன்றுமா? இதுவரைக்கும் தோன்றியிருக்கிறதா?"

சாவித்திரிக்குக் கல்யாணம். வைகாசி மாதம் 22-ஆம் தேதி புதன் கிழமை வளர்பிறை ஏகாதசி. முத்துக்குட்டி ஐயர் வீட்டுக் கல்யாணகூடத்தில் எல்லாரும் வந்து கூடியிருக்கிறார்கள். மணையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறான் கந்தன். பக்கத்தில் முத்துக்குட்டி ஐயர். அவர் மடியில் சாவித்திரி. எதிரே அவள் தாயார். அவர்கள் மத்தியில் புரோகிதர்; கந்தனுக்கு முன்னே அக்கினி வளர்த்திருந்தார்கள். ஸ்திரீகளெல்லாம் தனியிடத்திலே உட்கார்ந்து சிரிப்புடன் கலகலப்பாயிருக்கிறார்கள். சுந்தரி இருக்கிறாள் அந்த மரக்குதிரின் பக்கத்தில். அருகில் பத்மா இருக்கிறாள், குழந்தை சகிதமாக.

மணையில் உட்கார்ந்திருந்த கந்தன் சிரித்தான். 'கோபக்குறி இல்லை. மாப்பிள்ளைக்குப் பெண் பிடித்துவிட்டது' என்று நினைத்தாள் சாவித்திரியின் தாய். 'என்ன ஆடம்பரம்!' என்று நினைத்தான் கந்தன். உபாத்தியாயருக்கு அர்த்தமாகாத வடமொழியிலே மந்திரங்களைச் சொல்லச்சொல்ல, கந்தனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. சாவித்திரி கடைக்கண்ணால் இதைக் கவனித்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. புருஷன் சிவப்பென்றும் சற்று அழகுடையவனென்றும் ஒரு பார்வையிலேயே தெரிந்துகொண்டாள். சமயம் கிடைத்தபோதெல்லாம் அவனைப் பார்ப்பதுதான் அவளுக்கு வேலை. கந்தனும் இதைக் கவனித்துவிட்டான். அவனுக்கும் சாவித்திரியின் முகத்திலே பிரியம் வந்துவிட்டது. வெளியே தோன்றும் உருவத்திலே இருவருக்கும் வெறுப்பில்லை. உள்ளே நின்ற குணம்? இருவருக்கும் இப்பொது தெரியாது. ஒருவரோடு ஒருவர் ஏதாவது பேசியிருக்கிறார்களா? முன் பின் பழக்கம் ஏதாவது உண்டா? சாவித்திரியின் கழுத்திலே தாலி ஏறிவிட்டது. விதி இருவரையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. இனி விடாது! இங்கேயும் விதிதான். கட்டுண்டு அடைபட்ட மனத்துக்குச் சொந்தமும் சுயேச்சையுமான சந்தோஷம் உண்டா? 'விதியினால்' குடும்பங்களிலே சச்சரவுக்கு இடம் அதிகம்

இராது; ஆனால் மனித அறிவினால்தான் சுக அபிவிருத்தி ஏற்படும்.

"இத்தனை கூட்டத்திலே, மிகவும் நிதானமாய்ப் பேசிக்கொண்டு எதிலேயோ கவலை கொண்டவனைப் போல் இருக்கிறானே, அதோ ஒருத்தன் பார்த்தீரா?" என்றான் முகுந்தன்.

"யார், எங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறான்?" என்றார் மார்க்கண்ட ஐயர்.

"அதோ பாருங்கள், வாய்விட்டுச் சிரிக்காமல் கண்ணைப் புரட்டி விழித்துக்கொண்டு தலையை அசைத்துக்கொண்டிருக்கிறானே, அந்த நரைத்த தலைக் கிழவனாரின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு தெற்கே பார்க்கிறானே, அவன்" என்றான் முகுந்தன்.

"பார்த்தேன். அதோ அவன் தானே?" என்றார் வாத்தி.

"ஆமாம்."

"அதற்கென்ன?"

"அந்த முகம் எனக்குப் பிடித்தது. அவனுடன் பழக்கம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன்" என்றான் முகுந்தன்.

கல்யாணத்தன்று சாயங்காலம், கந்தன், வேதாந்தம் இருவரும் ஊருக்கு வெளியே சென்றார்கள்.

நண்பர்கள் இருவரும் பூமரத் தாங்குடி ஊமைவாத்தலைக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். முகுந்தன் மார்க்கண்ட ஐயரோடு ஏதோ அலுவலாகக் களிமேட்டுக்குப் போய்த் திரும்பி வந்தான். "கல்யாண கூடத்தில் சொன்ன இளைஞன் இதோ இருக்கிறான். அவனோடு பேசலாமா?" என்றான் முகுந்தன்.

"சரி" என்றார் மார்க்கண்ட ஐயர்.

"நமஸ்காரம்" என்றான் முகுந்தன். பிரதி நமஸ்காரம் செய்தார்கள் நண்பர்கள் இருவரும்.

"உங்கள் இருவருக்கும் ஊர் உளுத்தங்காடுதானே?"

"ஆமாம்."

முகுந்தன்: கல்யாணம் முடிகிற வரையிலும் நீங்களும் இருப்பீர்களா? மாப்பிள்ளைதான் இருப்பார்.

வேதாந்தம்: இருப்பேன். நீங்கள் இந்த ஊர்தானே?

முகு: ஆமாம். என் பெயர் முகுந்தன். இந்த ஊரில் எனக்குக் கொஞ்சம் நிலம் உண்டு. அதைப் பார்த்துக்கொண்டு வீட்டோடு இருக்கிறேன். என் பக்கத்தில் இருக்கிறவர் இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயர் மார்க்கண்ட ஐயர்.

கந்தன்: இனி எங்கள் முறை. என் பெயர் கந்தன். நான் வக்கீலுக்கு வாசித்துக்கொண்டிருக்கிறேன். என் சிநேகிதர் தன்வந்தரி.

முகு: கடைசியிலே சொன்னது எனக்குத் தெரியவில்லை.

மார்க்கண்ட: மாப்பிள்ளையின் சிநேகிதர் வைத்தியத்துக்குப் படிக்கிறார்போல் இருக்கிறது. தன்வந்தரி தெய்வலோகத்து வைத்தியர்.

கந்: நாட்டு வைத்தியர் அல்ல; சீமை வைத்தியர். அவர் பெயர் வேதாந்தம் ஐயர். கெட்டிக்காரர், யோக்கியர், சொன்ன சொல் தவறாதவர்.

வேதா: முடித்துவிட்டாயா? பாக்கி ஏதாவது உண்டோ?

கந்: இன்னும் கல்யாணம் ஆகவில்லை. தகுந்த வரன். பெண் இருந்தால் துணிந்து கொடுக்கலாம். ஆனால் பிடிவாதம் மாத்திரம் கொஞ்சம் அதிகம்; அவ்வளவுதான்.

முத: உளுத்தங்காட்டிலே என் பந்து ஒருவர் இருக்கிறார். இப்போதுதான் அவர் அங்கே வந்திருக்கிறார். ஓவர்ஸீயர் வைத்தியநாத ஐயர்: அவரைத் தெரியுமோ?

கந்: ஆளைத் தெரியும்; பழக்கமில்லை.

முத: அவர் என் மாமா பிள்ளை. இந்த ஊரில் உங்கள் ஜாகை சௌகரியமாய் இருக்கிறதா?

கந்: அசலூரில் எவ்வளவு சௌகரியம் கிடைக்குமோ அதற்குக் குறைவில்லை.

முத: கிடக்கிறது. ராத்திரி எங்கள் வீட்டு ஆளை அனுப்புகிறேன்; அவனோடு வந்தால் போதுமான சௌகரியம் ஏற்படுத்தித் தருகிறேன். புதுப்பழக்கம் என்று சும்மா இருந்து விடவேண்டாம். பிரியத்தில் புதிசு, கிடையாது.

கந்: சரி, வருகிறோம்.

வேதா: எனக்குக்கூடச் சேர்த்துப் பதிலோ?

கந்: தடை என்ன?

முத: நாழிகை ஆகிறது. நாங்கள் போய் வருகிறோம்.

முகுந்தன், மார்க்கண்ட ஐயர் இருவரும் போய்விட்டார்கள்.

மாலையில் முகுந்தன் தன் வீட்டு வாசலில் இவர்களுக்குக் காத்துக்கொண்டிருந்தான். இவர்கள் வந்ததும் மாடி ஹாலுக்கு அழைத்துச் சென்றான். ஊரிலே ஒரு பணக்காரன் முகுந்தன் என்று இவர்கள் தெரிந்துகொண்டார்கள். வேதாந்தத்தின் கண்ணில் முதலில் தென்பட்டது ஒரு பெரிய ஹார்மோனியம். அதனிடத்திலே சென்றான். கந்தனுக்கு மிகவும் சந்தோஷம். 'இன்றைக்கு நல்ல பாட்டுக் கேட்கலாம்' என்று நினைத்தான். "ஹார்மோனியத்திலே பழக்கமுண்டோ உங்களுக்கு?" என்றான் முகுந்தன்.

"கொஞ்சம் உண்டு" என்றான் வேதாந்தம்.

"கூச்சப்படாமல் வாய்விட்டு வேண்டுமானாலும் பாடலாம். இங்கே எந்த விதமான ஆட்சேபமும் இல்லை. உங்கள் வீட்டைப் போல எண்ணிக்கொள்ளலாம்" என்றான் முகுந்தன்.

பாரத தேசத்தின் மகிமை பற்றிய பாரதியாரின் பாட்டை வேதாந்தம் பாடினான். அவன் மனம் இந்த உலகத்தில் இல்லை. ஆகாயத்திலே பாடிக்கொண்டு செல்லும் குயிலைப்போல இந்த மண்ணிலிருந்து பறந்துவிட்டான். தன்னை மறந்து அவன் பாட, இவர்களும் தங்களை மறந்துவிட்டார்கள். பாட்டைப் பாடி முடித்துக் காம்போதி ராகத்தையும் ஆலாபனம் செய்ய ஆரம்பித்தான் வேதாந்தம். குயிலுக்குத் தன் இனம் தெரியாதா? கீழே இருந்த சுந்தரிக்கு உடம்பு சற்றுத் தூக்கிப்போட்டது. அவள், பத்மா இருவரும் இன்னும் தூங்கவில்லை. இவ்வளவு மதுரமான தொண்டை அவளுக்குப் புதிது.

"அண்ணாவின் சிநேகிதர் பாடுகிறார்போல் இருக்கிறது. அவர் யார்? உனக்குத் தெரியுமா, பத்மா?" என்று கேட்டாள் சுந்தரி.

பத்மா, "யாராவது நாடகக்காரனாக இருப்பான். உங்கள் அண்ணாவின் சிநேகிதத்துக்கு ஒரு கணக்கு உண்டா, வரன்முறை உண்டா? சிறிய பெண்கள் இருக்கிற வீடாயிற்றே என்ற எண்ணம் இல்லாமல் அவனும் பாட ஆரம்பித்து விட்டானே? உங்கள் அண்ணாவின் புத்தி எங்கே போயிற்றோ?" என்றாள்.

சுந்தரி: பாடினால் என்ன கெடுதி வந்துவிட்டது? அவர் பாடுகிற

மாதிரியிலிருந்து அவர் போக்கிரி என்று தோன்றவில்லை.

பத்மா: எனக்கு ஒன்றும் பாதக மில்லை. நீ இந்த வீட்டில் இருக்கிறாய். நாலு பேர் நாலைச் சொல்லுவார்கள். உலை வாயை மூடலாம்; ஊர் வாயை மூட யாரால் முடியும்?

சுந்: இந்த விஷயத்தில் உனக்கு அவ்வளவு நரம்பு துடித்தால் நான் வீட்டைவிட்டுப் போகிறேன். என் மூலமாக நீ யாதொரு கஷ்டமும் அநுபவிக்கவேண்டாம்.

பத்: பேச்சுக்கு ஒரு வார்த்தை சொன்னேன். அதிலே உனக்கு மூக்குக்கு மேலே கோபம் வந்துவிட்டதே?

இந்தச் சமயத்தில் முகுந்தன் அங்கே வந்தான், குடிக்கத் தண்ணீர் கொண்டு போவதற்காக. கடைசியிலே பத்மா பேசின பேச்சு அவன் காதில் தீர்க்கமாய் விழுந்தது.

"சுந்தரி, உங்களுக்குள்ளே என்ன சண்டை? பத்மா உன்னை என்ன சொன்னாள்? உன் முகம் கோவைப்பழமாய்ச் சிவந்திருக்கிறதே. ஒளிக்காமல் சொல்லு. பத்மாவை நான் தூக்குப் போடமாட்டேன்" என்றான் முகுந்தன்.

"ஒன்றுமில்லை, அண்ணா" என்றாள் சுந்தரி.

"பத்மா, நீதான் சொல்லு. இனிமேல் சுந்தரி சொல்லமாட்டாள் போல் இருக்கிறது" என்றான் முகுந்தன்.

"அவளையே கேளுங்கள்; அவள் வாயினாலேயே வரட்டும். நான் ஒரு வேளை கூட்டிக் குறைத்துச் சொல்லிவிடுவேன். அவள் படித்தவள்; அவளுக்கு நன்றாய்ப் பாட்டுப் பாடத் தெரியும். எனக்கு ஏதாவது தெரியுமோ!" என்றாள் பத்மா.

"சுந்தரி, நீதான் சொல்லு. பத்மா சொல்லுவதுபோல் கேட்டதற்குத் தயங்காமல் பதில் சொல்லி, நீ படித்தவள் என்று காட்டிக் கொள். அது உனக்கு ஒரு குறைவாகாது" என்றான் முகுந்தன்.

"மாடியில் பாடுகிறாரே, அவர் குரல் நன்றாக இருந்தது. பாட்டும் புது மாதிரியாக இருந்தது. 'பாடுகிறது யார்?' என்று கேட்டேன். 'யாரோ நாடகக்காரன். அடக்கம் இல்லாமல் சிறிய பெண்கள் இருக்கிற வீட்டிலே பாடுகிறான்' என்றாள் பத்மா. உனக்கு அது அகௌரவம் என்று நினைத்து, 'பாடுபவர் யோக்கியர்போல் தோன்றுகிறது' என்றேன். 'நாலுபேர் ஏதாவது தூறு சொல்லுவார்கள்' என்றாள். அந்தப் பயம் அவளுக்கு வந்ததற்கு எனக்குக் காரணமே தெரியவில்லை. 'வாஸ்தவத்திலே உனக்கு என்னாலே ஏதாவது அவமானம் நேரிடுமென்றால் நான் வீட்டைவிட்டுப் போகிறேன்' என்றேன். அதற்கு அவள் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே நீ வந்துவிட்டாய். இதுதான் நடந்த விஷயம்" என்றாள் சுந்தரி.

"இவ்வளவுதானா! மாடியில் இருக்கிறவர்களில், ஒருவர் சாவித்திரியின் புருஷர்; இன்னொருவர் அவர் சிநேகிதர். இரண்டுபேரும் தங்கமான பிள்ளைகள்; நாடகக்காரர்கள் அல்ல. பயப்படவேண்டாம். தன் புத்தி தன் வசம் இருந்தால் பிறன் கெடுத்துவிட முடியுமா? மனிதர்களுக்கு இது ஒரு பேச்சு!" என்றான் முகுந்தன்.

"ஊராருக்குப் பயப்படவேண்டாமா கொஞ்சமாவது?" என்றாள் பத்மா.

"நாளைக்குச் சுந்தரியைக் கல்யாணம் பண்ணிக்கொடுக்கப் போகிறேனே? யாருக்குப் பயப்படுகிறது அப்போது?" என்று கோபத்தோடு உதடு துடிக்கத் திடீரென்று சொல்லிவிட்டு, கூஜா நிறையத் தண்ணீர் எடுத்துக்கொண்டு மாடிக்குப் போய்விட்டான் முகுந்தன்.

முகுந்தன் சொன்ன வார்த்தை சுந்தரியின் உள்ளத்தில் புகுந்து அவள் நரம்புகளைக் கடகடவென்று ஒருதரம் ஆட்டிவிட்டது. கல்யாணமா? அது என்ன? அது வரையிலும் விதியின் கொடுமைக்கு உட்பட்டிருந்த மனம் ஒரு குதி குதித்தது. தேக்கிவிட்ட மடை போல் அவள் மார்பு படபடவென்று அடித்தது. ஒருதரம் அவள் தலை விர்ரென்று சுற்றிற்று. முகுந்தன் சொன்னது நிஜமா, பொய்யா, கேலியா, பத்மாவின் வாயை அடக்கும்பொருட்டுப் பேசின பேச்சா—எது என்று அவளுக்குத் தெளிவுபடவில்லை. தன் ஸ்திதியில் அது நம்பக்கூடிய உண்மையா? இருந்தாலும் சிற்சில சமயமாவது தன் நிலைமையைப்பற்றி அவன் நினைத்துக்கொண்டிருக்கிறான் என்று தெரிந்துகொண்டாள். தன் கதிக்கு ஒரு விமோசனம் உண்டென்று அவள் நினைத்தவள் அல்ல. அப்படி அதிரத்தத்தில் இருந்தாலும் இது வரைக்கும் ஓர் உரு எடுத்து மனத்தில் உதித்ததில்லை. தாழிட்டு இடிக்க இடிக்கத் திறக்காத கதவு திடீரென்று திறந்ததுபோல் ஆயிற்று. அவளுக்குக் கல்யாணம்? அந்த வார்த்தையில் அடங்கிய உலகமே வேறு. அதற்குப் போக வழியும் உண்டோ? அவளுக்கு அநுமதி உண்டோ? கல்யாணமா, குடும்பமா, குழந்தையா, புருஷனா? இவை நம்பத் தகுந்தவை அல்ல; இதையெல்லாம் யோசிக்காமலா சொல்லிவிட்டான் முகுந்தன்? மனித சஞ்சாரமில்லாத, பாட்டில்லாத, சுகமில்லாத, உயிரில்லாத உலகத்திலிருந்து அவளுக்கும் விடுதலை உண்டா?

ஒரு நாள் சுந்தரிக்கு உளுந்தங்காட்டிலிருந்து ஒரு கடிதம் வந்தது:

"பட்டணத்திலே வக்கீலுக்கு வாசிக்கும் மகா-ௗ-ௗ-ஸ்ரீ உளுந்தங்காட்டுக் கந்தசாமி ஐயர் அவர்களின் பார்யை சாவித்திரி அம்மாள், பூமரத்தாங்குடி சுந்தரிக்கு எழுதிக்கொண்டது: நீ கிருகப்பிரவேசத்துக்கு வராதது எனக்கு மிகவும் வருத்தம்.

"ஊர் எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று; வீட்டிலே நான், அவர், மாமனார், மாமியார் நாலுபேர்தான். எங்கள் மாமனார் மாமியார் சண்டையை நீ பார்த்ததில்லையே! எனக்கு பாதிப் பொழுதுபோக்கு அதுதான். 'உன் பிள்ளையை வைது திட்ட மாட்டுப்பெண்ணுக்குத் தானாகவே தெரிந்துவிடும்' என்று நேற்றைக்குச் சாப்பிடும்போது மாமனார் சொன்னார். அவர் பிள்ளை என்னைப் பார்த்துச் சிரித்தார். நான் சிரிக்காமல் என்ன பண்ணுகிறது? நீ சொல்லு. இன்னும் ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே. நானும் அவரும் பேசிக்கொள்வது உண்டு. மாமனாருக்கு இது பொறுக்கவில்லை. மாமியார் கார்க்கோடகி. ஆனால் பிள்ளைமேலே உசிராயிருக்கிறாள். நாங்கள் பேசுவதில் அவளுக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை.

"அவரும் அவர் சிநேகிதரான வைத்தியரும் இரட்டைப் பிறவி போல் இருக்கிறார்கள்; அவர்கள் ஒரு நிமிஷமாவது பிரிகிறதில்லை.

வைத்தியர் மிகவும் நல்லவர். ஊர்க் குழந்தைகளெல்லாம் அவரை விட மாட்டோம் என்கின்றன.

"ஊரிலே ஒரு பெருமாள் கோயில் இருக்கிறது; கோயிலிலிருந்து புளியஞ்சாதம் மூட்டை மூட்டையாய்க் கட்டிக்கொண்டு போகிறார்கள் ஐயங்கார்கள்.

"மாமனார் எங்கள் வீட்டைப் பணிக்காய்க் கட்டியிருக்கிறார். இவ்வளவு பணம் செலவழிக்க எப்படி இவருக்குத் தோன்றிற்றோ தெரியவில்லை. அடுத்த வியாழக்கிழமை 'சுப்பிரமணிய ஸ்வாமி' பட்டணத்துக்குப் போகப் போகிறாராம். 'வள்ளி'க்கு அப்போது கஷ்டந்தான். அவர் ஊருக்குப் போனால் அப்புறம் எனக்கு இந்த ஊரில் உடம்பு தரிக்காது.

"வாலாம்பாளைக் கேட்டதாகச் சொல்லு. என் மாமனார் பிள்ளைக்கு உன்னைத் தெரியும். நம் ஊரைப் பற்றி அவரிடம் என்னவெல்லாமோ சொல்லிவிட்டேன். அவர் சிரித்துச் சிரித்துப் பேசி, என் வாயைப் பிடுங்கிவிடுகிறார் — இப்படிக்கு, சாவித்திரி."

சுந்தரிக்குக் கடுஞ் சுரம். படுத்த படுக்கையாக இருக்கிறாள். அன்ன ஆகாரமில்லை. சதா பித்த மயக்கம்; நல்ல ஞாபகமில்லை. வியாதி மதில்மேல் பூனை என்று சொல்லிவிட்டார்கள் உள்ளூர் நாட்டு வைத்தியர்கள். மருந்து உள்ளே செல்லவில்லை. வாந்தியெடுக்க முயற்சி மாத்திரம் இருந்தது. சொந்த நினைவு இல்லை. சாவு நிச்சயமென்று தீர்மானித்துக்கொண்டான் முகுந்தன். ஆகவே, அவளைக் கடைசியாக ஒரு தரம் வேதாந்தம் பார்த்துவிட்டுப் போகட்டுமே என்று நினைத்து ஒரு தந்தி கொடுத்தான்.

பத்மா, "உளுத்தங்காட்டு வைத்தியர் மிகவும் கைராசிக்காரராம். அவருக்குத் தந்தி அடியுங்கள். அவர் வந்தால் இந்த ஜுரம் நீங்கி, உடம்பு சௌக்கியமாய்ப் போய்விடும் என்று அடிக்கடி என் மனத்திலே வந்து தைக்கிறது" என்றாள்.

"அநேகமாய் இன்னும் இரண்டு நாழிகையில் அவர் வருவார். தந்தி அடித்திருக்கிறேன்" என்றான் முகுந்தன்.

"பார்த்தீர்களா? என் மனத்திலே தோன்றினதுபோல் உங்கள் மனத்திலும் உதித்திருக்கிறது. இது நல்ல சகுனம். கண்டிப்பாய் வியாதி குணப்படும்" என்றாள் பத்மா.

கந்தன், வேதாந்தம் இருவரும் முகுந்தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். முகுந்தனுக்குக் கண்ணிலே நீர் வராத குறை. "நாங்கள் எல்லாரும் கைவிட்டு விட்டோம். இந்த வீட்டைக் கடவுள் மிகவும் சோதித்து விட்டார். அவர்தான் கண் பார்க்கவேண்டும்" என்றான் முகுந்தன். சுந்தரியின் படுக்கைக்கு அருகில் போய், கை பிடித்துப் பார்த்தும், தாபமானியால் அளந்தும் ஜுரத்தின் வேகத்தை வேதாந்தம் தெரிந்துகொண்டான். அவள் படுக்கையின் பக்கத்திலே வேதாந்தம் வந்ததும், எல்லாருக்கும் தங்களை அறியாமலேயே ஒரு தைரியம் பிறந்து விட்டது. பத்மா கண்கொட்டாமல் வேதாந்தத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் செய்கை அவளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. சுந்தரியின் தலையிலே ஓதக்கோலத்தை வைத்து நன்றாய்த் தேய்த்துத் தலை உச்சியிலே பனிக் கட்டி வைத்துக் கட்டி, மெல்லிய

கண்ணாடிக் குழாய் வழியாக ஒரு மருந்தை 'மல்லுக்கட்டி' உள்ளே செலுத்திவிட்டான். "பிழைத்தால் மறு பிழைப்புத்தான்" என்று சொன்னான். மருந்துக்குப் பிறகு பிதற்றல் ஜாஸ்தி. வார்த்தைகள் சம்பந்தமில்லாமல் வரத் தலைப்பட்டன. பேச்சும் நின்றுவிட்டது. "இது தான் அபாயமான நிலை. இரு பக்கத்திலும் திரும்பலாம்" என்றான் வேதாந்தம். மூச்சுக் கனமாய் வந்தது. நரம்புகள் ஆரவாரமடங்க உடம்பு ஒரே இடத்தில் தரித்தது. முகுந்தன் கண்ணீர் சொரிந்தான். ஒரு நாழிகை இப்படிச் சென்றிருக்கலாம். திடீரென்று கண்ணை விழித்தாள் சுந்தரி. "அண்ணா!" என்றாள். கையைப் பிடித்துப் பார்த்தான் வேதாந்தம். "பயமில்லை" என்றான். அவனை முகுந்தன் கட்டிக்கொண்டான். "அண்ணா!" என்றாள் சுந்தரி, மறுபடியும். "கந்தா, இனிப் பயமில்லை. வியாதி தெறித்துவிட்டது" என்றான் வேதாந்தம். "என் வயிற்றிலே பால் வார்த்தீர்கள்" என்றான் முகுந்தன். பேசாமல் இருக்கும்படி வேதாந்தம் ஜாடை காட்டினான். ஒரே ஓட்டம்; பத்மாவிடம் சென்றான் முகுந்தன்.

"சுந்தரி பிழைத்துவிட்டாள்; பயமில்லை" என்றான்.

"அவர் வந்தபோதே எனக்குத் தெரியுமே, ராட்சச வைத்தியம் செய்தார் அவர். அவர் இருக்கிற இடத்திலே தைரியத்துக்குக் குறைவு இராது" என்றாள் பத்மா.

"என் கடமை; நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் அந்த விஷயத்தில் கவலைப்பட வேண்டியதில்லை. உங்கள் வெளிக் காரியங்களைக் கவனிக்கலாம்" என்று முகுந்தனிடம் வேதாந்தம் சொன்னான்.

"என் வியாதியில் இவ்வளவு கவலை நீ எடுத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. என்னைப் பிழைப்பு மூட்டினதில் உனக்கென்ன லாபம்?" என்றாள் சுந்தரி.

"ஏன் இப்படிப் பேசுகிறாய்?" என்றான் முகுந்தன்.

"இந்த ஜன்மம் எனக்குப் பிடிக்கவில்லை. பிறருக்குப் பாரந்தான் நான்; எனக்கும் சுகமில்லை. தெய்வச் செயலாய் இந்த வியாதி வந்ததே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு இப்படியும் கஷ்டம்; அப்படியும் கஷ்டம். நான் பிறந்த வேளை அது."

"இந்த ஜன்மம் ஏன் பாழ்? உனக்கு இஷ்டமானவரைக் கல்யாணம் செய்துகொள். அதனால் எனக்குக் கஷ்டம் வருமென்று யோசிக்கவேண்டியதில்லை. நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்."

"என் தலையைச் சுற்றுகிறது. இப்போது ஒன்றும் பேசாதே; போ."

"உனக்கு ஒன்றும் தெரியாது. என் மனத்தில் இருப்பதைச் சொல்லிவிடுகிறேன். பிறகு நீ எது வேண்டுமானாலும் செய்துகொள். இருபது நாளைக்கு முன் சாவித்திரி கல்யாணத்தின்போது உன்னைத் தனக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று வேதாந்தம் ஐயர் என்னைக் கேட்டார். எனக்கு உன் மனசு தெரியவில்லை, உன் இஷ்டத்தைத் தெரிந்து சொல்லுகிறேன் என்றேன். உன்னிடம் அதை எப்படிச் சொல்லுவதென்று தவித்துக்கொண்டிருந்தேன்."

"அவர் அப்படிக் கேட்டாரா?"

"ஆமாம், கேட்டார்; உனக்கு அதைப்பற்றி ஏன் சந்தேகம் ஏற்பட வேண்டும்?"

பதில் இல்லை; சுந்தரியின் முக மெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று; உள்ளங்காலிலே உஷ்ணமே இல்லை. முகுந்தன் ஓடினான், மாடியில் இருந்த வேதாந்தத்தினிடம். அவனை அழைத்துக்கொண்டு சுந்தரியிடம் வந்தான். வேதாந்தம் சுந்தரியைக் கவனித்துப் பார்த்தான். "யாரோ இவளிடம் நரம்பு தாங்கக்கூடாத சமாசாரம் ஒன்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் பயமில்லை. இவ்வளவு பலவீனமான நிலையில் அப்படிச் செய்திருக்க வேண்டியதில்லை. போனது போகட்டும். இனிமேல் ஜாக்கிரதை!" என்றான். போட்ட மூர்ச்சை சுந்தரிக்கு இன்னும் தெளியவில்லை.

சாவித்திரி ஊருக்கு வந்து விட்டாள். சுந்தரியின் கல்யாணத்தைப்பற்றிக் கந்தன் அவளுக்குச் சொல்லிவிட்டுப் பட்டணம் போய்விட்டான். இதைக் கேட்டவுடன் அவளுக்கு வயிறு வெடித்து விடும் போல் சந்தோஷம் உண்டாயிற்று. அவளுக்குச் சுந்தரி செய்வது சரியென்று பட்டது. இதுவரையிலும் சுந்தரி இருந்த நிலையை அநியாயம், அக்கிரமம், கொடுமை என்று வைதாள். தனக்குக் கல்யாணத்தில் எவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டதோ அதைப் போல் தானே சுந்தரிக்கும் இருக்கும் என்று நினைத்தாள். காரியம் இல்லாமல் வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தாள். கடைசியில் பூமரத்தாங் குடிக்கே அவள் வந்துவிட்டாள். வந்ததும் சுந்தரியின் வீட்டுக்குப் போனதுதான் அவள் செய்த முதல் வேலை. சுந்தரி, பத்மா இருவரும் உட்கார்ந்துகொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

"சாவித்திரி, வா" என்றாள் பத்மா. சுந்தரி பேசாமல் இருந்தாள்.

சுந்தரியிடம் சென்று அவள் கைகளைப் பிடித்துக்கொண்டாள் சாவித்திரி. "உன் தீர்மானத்தைக் கேள்விப்பட்டேன். அதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். யார் என்ன சொன்னபோதிலும் இனிமேல் கேட்காதே. பத்மா சொன்னாலும் சரியே; நீ கேட்காதே" என்றாள் சாவித்திரி. அது 'ஒப்புக்காக'ப் பேசின வார்த்தையல்லவாதலால், சுந்தரிக்குத் தாங்க முடியாத சந்தோஷத்தைத் தந்தது.

மாசி மாதம் வளர்பிறை ஏகாதசி; வெள்ளிக்கிழமை அந்திப் பொழுதிலே இரண்டு இளைஞர்கள் சென்னைக் கடற்கரையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்.

வேதாந்தம் வாய் திறக்கவில்லை.

"கல்யாணத்திலே கவலையோ?" என்றான் கந்தன்.

"ஆனந்தக்கடலில் முழுகியிருந்த என்னை எழுப்பினதற்காக உன்னை நான் என்ன செய்கிறது?" என்றான் வேதாந்தம்.

"கல்யாணத்துக்கு அழைக்க வேண்டாம்."

வேதாந்தம்: அதெல்லாம் இருக்கட்டும். மலையின் பக்கத்திலே கடுகைப் போல் கடலின் முன்பு உட்கார்ந்திருக்கும் நாம், கடலையும் கடந்து, வானத்துக் கிரகங்களையும் அளந்து, சொல்லுவதற்கரிய பெரிய விஷயங்களையெல்லாம் கண்டுபிடிக்கிறோம். ஆனாலும் இந்தப் பூமியிலே மனிதன் என்று உரு எடுத்தால், ஒருவரோடொருவர் சண்டைக்

குத் துவக்கி விடுகிறோம், பார்த்தாயா?

கந்தன்: என்ன, ஒரேயடியாய்த் தத்துவத்தில் விழுந்துவிட்டாய்?

வேதா: தத்துவத்திலே விழவில்லை. ஒன்று உனக்குத் தெரியுமோ? வேதத்திலே புகழ்ச்சிக்கு உரிய வார்த்தைகளில் உயர்ந்த வார்த்தை என்ன தெரியுமோ?

கந்: என்ன?

வேதா: 'தீரன்.' இந்த வார்த்தையில் அடங்கிவிட்டது நாம் பார்க்கும் படைப்பெல்லாம்; நாம் பார்க்கக் கூடாத சக்திகளுங்கூடத்தான். அண்டமே விண்டு விழுந்தாலும் மனம் சலியாத சாந்தியுள்ளவனே மகாத்மா. உதாரணமாக...

கந்: உன்னைப் போல!

வேதா: கேலி செய்யாதே. நமக்குக் கீதை கொடுத்த கண்ணனே என் உயிர்; உன் உயிர்; எல்லார் உயிரும். கண்ணனைத்தவிர வேறு கடவுள் இல்லை; கீதைக்கு உயர்ந்த நற்போதனையும் இல்லை.

கந்: இந்த மாசிநிலவைப் பார்த்தாயா? இதைக் காசு இருந்தால் அநுபவிக்கலாம்.

வேதா: ஜகதலப்பிரதாபன் கதை தான்.

கந்: இன்னும் இரண்டு மூன்று நாள் கழித்து ஊருக்குப் போவோம்.

வேதா: சரி.

வேதாந்தத்துக்கும் சுந்தரிக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. அவன் உளுந்தங்காட்டிலேயே வைத்தியத் தொழில் செய்துவருகிறான். கந்தன் வசமாக இருக்க மனம் இல்லாமல், கிராமத்திலே சிறிய பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தி அதை நடத்திக்கொண்டிருக்கிறான். வேதாந்தமும் அதில் ஒரு 'வாத்தி.' சுப்பராயர் செத்துவிட்டார். அதன் பின் அவர் படுக்கையைச் சோதித்ததில் ஒரு துண்டுக் கடிதம் கிடைத்தது. அதில் இருந்த விஷயம் வருமாறு:

"பூமாத்தாங்குடிச் சுப்பராயர் எழுதிவைத்த உயில்: என் சொத்து என் பிள்ளைக்கும் இல்லை; பெண்ணுக்கும் இல்லை; எனக்கும் இல்லை. அதை இஷ்டப்பட்டவர்கள் எடுத்துக்கொள்ளலாம். பர்வதம் என் கண்காணுமல் ஒளிந்துகொண்டிருக்கிறாள். சுந்தரிக்கு நாவிதச் சின்னப்பயலை விட்டு மயிர் எடுத்து விடவேண்டும். அவனுக்கு அதற்காக ஒன்றும் கொடுக்கவேண்டாம்; நான் செய்திருக்கிற ஒத்தாசையே போதும். முத்துக்குட்டி ஐயரின் உத்தரக்கிரியைக்குப் பத்து ரூபாய் என் சொத்திலிருந்து கொடுக்கிறது. முகுந்தன் எப்போதும் மூகக்ஷவரம் பண்ணிக்கொள்ளட்டும்."

சுப்பராயர் உயில் என்றால் போதும்; சாவித்திரி கடகட என்று சிரித்துக் கொட்டிவிடுவாள்.

கடவுள் கருணைக் கடல் ஆனால் அதிலே மொள்ள நாம் உபயோகிக்கும் வாளிதான் மிகச் சிறியது. —கிளென் போர்டு.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.